Registered at the G. P. O. as a Newspaper

விலை சதம் 20

# ஈழநாடு

சுதந்திர வார இதழ்

மலர் 1. யாழ்ப்பாணம், விகாரி, ஆனி 27-ஆம் நாள். (11-7-59) சனிக்கிழமை இதழ் 23.

உங்களுக்குத் தேவையான எல்லாவித
சாய்ப்புச் சாமான்களுக்கும்,
சூட்கேஸ், சப்பாத்து வகைகளுக்கும்

கணேசன் ஸ்ரோர்ஸ்

78, கே. கே. எஸ். ரேட், யாழ்ப்பாணம்.

# இன்னும் இரண்டு வருடம் பண்டாவின் ஆட்சி நடைபெறக் கூடும்

## அரசாங்கக் கட்சியின் புதிய நம்பிக்கை -- 50 பேர் ஆதரவு

### பார்லிமெண்டில் நடந்த அரசியல் நாடகம்

— நமது அரசியல் நிருபர் —

ஸ்ரீ பண்டாரநாயக்காவின் புதிய அரசாங்கத்துக்கு உயிர்ப்பிச்சை கிடைத்துவிட்டது.

கவர்னர் ஜெனரலின் பிரசங்கத்துக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்துக்குச் சாதகமாக 50 பேரும் பாதகமாக 41 பேரும் வாக்களித்தனர்.

அதிகப்படியாக 9 வாக்குகள் கிடைத்துவிட்டதால் தாங்கள் இன்னும் இரண்டுவருடமும் அரசாங்கத்தை நடத்திச் செல்லலாமென்ற புதிய நம்பிக்கை, பிரதமருக்கும் அவரது சகாக்களுக்கும் ஏற்பட்டிருக்கிறது.

என்றாலும் இவ்வாரம் மூன்று நாட்களாக, எதிர்க் கட்சியினர், அரசாங்கப் போக்கை பிச்சு வாங்கி விட்டார்கள். கை லஞ்சம் முதலிய பலவித ஊழல்கள் பச்சை பச்சையாக அம்பலப் படுத்தப்பட்டன. இதையெல்லாம் கேட்டு சகிக்காமல், அரசாங்கக் கட்சியில் சேர்ந்தவர்களில் பலர், விவாதகாலத்தில் சபையில் இருக்கவில்லை.

புள்ளிக் கணக்குப்படி அரசாங்கத்துக்கு வெற்றி கிடைத்து விட்டதென்பது உண்மையே. வரவு செலவுத் திட்டத்தையும், இந்த மெஜாரிட்டியைக் கொண்டு நிறைவேற்றி விடலாம். ஆனல், மந்திரி சபையின் மதிப்பும், செல்வாக்கும் பெரிதும் குறைந்து விட்டது.

ஆறு நியமன அங்கத்தினரின் பலத்தால் அரசாங்கம் உயிர் வாழ்கிறதென்று எதிர்க்கட்சித் தலைவர் டாக்டர் என். எம். குற்றம் சாட்டி, இந்த அரசாங்கத்துக்கு பொதுஜன ஆதரவில்லை என்றும் ஆளும் உரிமை இல்லை என்றும் சொன்னர்.

நன்றி தெரிவிக்கும் தீர்மானத்துக்கு 6 க்குமேலாக, அதாவது 9 வாக்குகள் அதிகமாகக் கிடைத்தது பற்றி அரசாங்கக் கட்சி மகிழ்ச்சியடையக்கூடும். நூறு பேரடங்கிய சபையில், ஆறு நியமன அங்கத்தவரின் வாக்குகளை ஒதுக்கிப்பார்த்தால், அரசாங்கத்துக்கு 44 பேருடையஆசரவுதான் உள்ளது. இது சபையின் பாதியிலும் குறைவு.

எதிர்க்கட்சிகளிடையே ஒற்றுமையின்றி பல பிளவுகள் ஏற்பட்டிருப்பதே அரசாங்கத்துக்கு முக்கிய பலமாகும்.

இதுவரை எந்த வருஷமுமில்லாதபடி கவர்னர் ஜெனரல் பிரசங்கத்தைப் பற்றிய விவாதத்தின் போது, பார்லிமென்ட் காலரிகளில் அதிகக் கூட்டம். உட்காரவும் இடமின்றிப் பலர் நின்றுகொண்டு கவனித்தனர். வெளியிலும் நீண்ட 'க்யூ' வரிசை.

அரசாங்கம் இந்தக் கண்டத்துக்குத் தப்பமுடியுமா? பிலிப், பெரேரா, கெனமன், கொல்வின் முதலிய பெரிய பீரங்கிகள் எப்படி எப்படி வெடிக்கப் போகின்றன? அரசாங்கத் தரப்பில் இதற்கு என்ன பதில் சொல்லப் போகிறர்கள்? யார் யார் எப்படி வாக்களிக்கிறர்கள்? என்பதை நேரில் பார்க்க மக்களுக்குப் பெரும் ஆவல். இந்தப் பேச்சுகளையும் காட்சிகளையும் 'டெலிவிஷன்' மூலம் பலரும் பார்க்கவும் கேட்கவும் செய்திருந்தால் சினிமாசாலைகளில் கூட்டம் இருந்திராது. பார்லிமென்டில் நடந்த அரசியல் நாடகம் அவ்வளவு ருசிகரமாகவும் வேடிக்கையாகவும் பரபரப்பாகவுமிருந்தது.

### ஆறு திருத்தங்கள்

நன்றி தெரிவிக்கும் தீர்மானத்துக்கு மொத்தம் 6 திருத்தங்களைப் பல்வேறு எதிர்க் கட்சிகளும் கொண்டு வந்தன. சமசமாஜி, சமஷ்டி, யு. என். பி, பிரிந்த உதிரிகள், கம்யூனிஸ்ட் முதலிய கட்சிகளின் சார்பாக எட்டுப்பேர் ஒரு பொதுப் பிரேரணையைக் கொண்டு வந்தனர். வேலையில்லாக் கஷ்டம், விலைவாசிகள் அதிகரிப்பு, லஞ்

(9ஆம் பக்கம் பார்க்க)

## யாழ்ப்பாணத்தில் யப்பானிய கூட்டுறவாளர்

'யப்பானிலுள்ள கூட்டுறவு இயக்கம் அங்குள்ள விவசாயத்தையும், மீன்பிடி தொழிலையும் விருத்தியடைய உதவியுள்ளது. அதுபோலவே, யப்பானைப்போன்ற சிறுதீவான இலங்கையிலும் அது உதவிபுரியவே செய்யும்.' இவ்வாறு தெய்வாவீடமைப்பு, கூட்டுறவுச் சங்கத்தின் தலைவரான திரு. ஸென் வாதம்பே யாழ் விளைதக்காணிவல் மைதானத்தில் நடைபெற்ற இரவு விருந்தின் போது கூறினர். இவ் விருந்து யப்பானிலிருந்து வந்துள்ள கூட்டுறவு தூதுகோஷ்டிக்கு வரவேற்பளிக்குமுகமாக யாழ்விளைதக் காணிவல் மைதானத்தில் சென்ற ஞாயிற்றுக்கிழமை யாழ்ப்பாணம் பலநோக்கு கூட்டுறவுச்சங்கத்தாரால் ஒழுங்குசெய்யப்பட்டிருந்தது. சங்கத் தலைவர் திரு. ஏ. ஈ. தம்பர் இவ் விருந்துக்குத் தலைமை வகித்தார். அவர் தமது தலைமையுரையில் யப்பானிய தூதுகோஷ்டியை வரவேற்றுப் பேசினர்.

யப்பானிய தூதுகோஷ்டியைச் சேர்ந்த திரு. ஸென் வதாம்பே இந்த வரவேற்பு தங்கள் விஜயத்தை மகிழ்ச்சிகரமாக்கியுள்ளதாகவும், தாங்கள் யப்பானிய அரசாங்கத்துக்கும், மக்களுக்கும் இலங்கைமக்களின் வாழ்த்துக்களைத் தெரிவிப்பதாகவும் கூறினர்.

## புதிய வரவு செலவுத் திட்டம்


### பெற்ரேல், மோட்டார் கார் முதலியவை விலை ஏற்றம்

அரசாங்கத்தின் புதிய வரவு செலவுத்திட்டத்தை நிதிமந்திரி திரு. ஸ்ரான்லி டி சொய்சா சென்ற வியாழக்கிழமையன்று ஜனப் பிரதிநிதிசபையிற் சமர்ப்பித்தார். அவருடைய புதிய திட்டத்தின்படி வசூலிக்கப்படும் புதியவரிகளின் மூலம் அரசாங்கத்திற்கு 32 கோடி ரூபாய் வருமானம் கிடைக்குமெனத் தெரிகிறது.

பெற்ரேலின் விலை ஒரு கலனுக்குப் பத்து சதம் வீதம் அதிகரிக்கப்பட்டுள்ளது. மோட்டார் கார்களின் விலை, இறக்குமதி வரிகளின் கூட்டுதலால், அதிகரிக்கும். மற்றும் இறக்குமதி செய்யப்படும் குடிவகைகள் ஒரு போத்தலுக்கு மூன்று ரூபாயாகக் கூட்டப்படும். சாராயத்தின் விலை ஒரு போத்தலுக்கு 2 ரூபாய் அதிகம். கைக்கடிகாரங்களின் இறக்குமதி வரியும் ஏற்றப்பட்டுள்ளது. கொப்பரா, தேங்காய்எண்ணெய், தேங்காய்த்துருவல் முதலிய பொருள்களின் விலைகளும் உயர்த்தப்பட்டுள்ளன.

இவை தான் புதிய வரவு செலவுத் திட்டத்தின் முக்கியமான சில அம்சங்களாகும்.

ஒரு ரூபாவுக்கு மிகுதியான மைல்கள்




பிரிட்ஜ்ஸ்டோன் டையர்கள்

Distributors:

TUCKERS AUTODROME

ஏகவினியோகஸ்தர்கள் :

ஓட்டோஸ் லிமிட்டட்

யாழ்ப்பாணம்

போன்: 496 தந்தி: "ஓட்டோஸ்"

## தொல்லை தந்த வேலை நிறுத்தம் நல்ல முறையில் தீர்ந்தது

— நமது நிருபர் —

யாழ்ப்பாணம்.

யாழ்ப்பாணப் பொதுமக்களுக்குச் சிலநாட்களாக மிகுந்த தொல்லையை விளைவித்த பஸ் வேலைநிறுத்தம் சென்றவியாழக் கிழமையன்று முடிவடைந்தது. இ. போ. ச. அதிகாரிகளுக்கும், ஓம்னி பஸ் தொழிலாளர் சங்கப் பிரதிநிதிகளுக்குமிடையே நடைபெற்ற பேச்சுவார்த்தைகளே இச்சுமுகமான முடிவுக்குக் காரணமாக அமைந்தன. ஆனாலும், இந்த முடிவை ஏற்படுத்திய மூலகர்த்தா யாழ்ப்பாணம் அரசாங்க அதிபரான திரு. எம். ஸ்ரீகாந்தாவேயாவர். இதுபற்றி பஸ்தொழிலாளர்சங்கத்தின்காரியதரிசியான திரு.அ விஸ்வநாதன் நமது நிருபரிடம் கூறியதாவது: "எங்களுக்கும் இ. போ. ச. அதிகாரிகளுக்கும் இடையே நடைபெற்ற பேச்சுவார்த்தைகள் பஸ்தொழிலாளரின் சில முக்கிய பிரச்சினைகளைத் தீர்த்துவைத்துள்ளன. அவையாவன:

1. தொழிலாளர்கள் வேலை நிறுத்தம் செய்துகொண்டிருக்கும் பொழுதே பேச்சுவார்த்தைகள் நடாத்தும் உரிமை.

2. தற்காலிக வேலைநீக்கம் செய்யப்பட்ட திரு. வேலுவின் விஷயம்பற்றி இம்மாதம் முடிவதற்குள் ஒருமுடிவுக்கு வருவது.

3. வேலைநீக்கம்செய்யப்பட்ட 24 தொழிலாளர்களையும் உடனடியாக வேலைக்குத் திரும்பவும் எடுப்பது.

4. தொழிலாளர் சங்கத்தினல் சிபார்சு செய்யப்பட்டுள்ள விசாரணை முறையை இ. போ. ச. ஏற்றுக்கொள்வது.

5. தொடர்ச்சியற்ற வேலை நேரத்தைப் பன்னிரண்டு மணித்தியாலங்களுக்குள் வைத்துக்கொள்வது."

"இந்தவித மகிழ்ச்சிகரமான முடிவை ஏற்படுத்த உதவிய பெருமை யாழ்ப்பாணம் மாவட்ட அதிபர் திரு. எம். ஸ்ரீகாந்தா அவர்களைச் சாரும். அதற்காக, எங்கள் சங்கத்தின் சார்பிலும், பொதுமக்கள் சார்பிலும் அவருக்கு நாம் நன்றி தெரிவிக்கிறேம்".

இச் சுமுகமான பேச்சுவார்த்தைகளில் இ. போ. ச. சார்பாகத் திருவாளர்கள் எச். அல்கம, கப்டன் எஸ். தர்மரத்தினம், கே. வேலுப்பிள்ளை ஆகியோரும், தொழிலாளர் சங்கத்தின் சார்பாகத் திருவாளர்கள் அ. விஸ்வநாதன், ஆர். ஆர். தர்மரத்தினம், ஏ. துரைராஜசிங்கம், என். தேவபாலசுந்தரமும் கலந்துகொண்டனர்.

* * *

### பஸ் ஓடுது பார்!

அன்று வியாழக்கிழமை (9-7-59) மாலை. காரியாலயம் ஒன்றில் ஒருவர் வேலையில் ஈடுபட்டிருந்தார். அப்பொழுது, வெளி விருந்தையிலிருந்து வேலை செய்யும் நண்பரொருவரின் சப்தம் அவருக்குக் கேட்டது. 'பஸ் ஓடுது, பார்' என்று அவர் சத்தமிட்டார். அதைக் கேட்டதும் அங்கிருந்தோர் அனைவரும் வெளியில் வந்து நின்று பார்த்தனர்:— நண்பர் கூறியது உண்மையா என்பதை அறிய. ஆம், உண்மையாகவே ரேட்டில் பஸ்ஓடிக் கொண்டுதானிருந்தது!

## வரி விளம்பரம்

### விற்பனைக்கு

உங்களுக்குத் தேவையான எல்லாவித சாய்ப்புச் சாமான்களுக்கும் **கணேசன் ஸ்ரோர்ஸ்,** 78, கே. கே. எஸ். ரோட், யாழ்ப்பாணம்.

திறமான றங்குப் பெட்டிகள் சூட்கேஸ்கள், சப்பாத்து வகைகளுக்கு **கணேசன் ஸ்ரோர்ஸ்** 78, கே. கே. எஸ். ரோட், யாழ்ப்பாணம்.

பட்டு, பருத்தி, புடைவைகள்' தையல் வேலைகளுக்குத் தேவையான எல்லாவித பொருள்களுக்கும் - **கணேசன் ஸ்ரோர்ஸ்.** 78, கே. கே. எஸ். ரோட், யாழ்ப்பாணம்.

தரத்தில் சிறந்தது - **வீனஸ் சோப்.** வீனஸ் சோப் தொழிற்சாலை, கே. கே. எஸ். ரோட், யாழ்ப்பாணம்.

உடைகள் வெண்மையாக வேண்டுமானால் **வீனஸ் சோப்.** வீனஸ் சோப் தொழிற்சாலை, கே. கே. எஸ். ரோட், யாழ்ப்பாணம்.

அதிக நுரை தந்து உடைகளை விரைவில் வெண்மையாக்குவது **வீனஸ் சோப்.** வீனஸ் சோப் தொழிற்சாலை, கே. கே. எஸ். ரோட், யாழ்ப்பாணம்.

### தேவை

ஏஜென்ஸி மனேஜர் பதவிக்கு ஒருவர் தேவை. அவர் பொருளாதாரத்தில் (Economics) அறிவு மிகுந்த பட்டதாரியாக இருத்தல் வேண்டும். இல்லையேல் இன்சுரன்ஸ் வேலையில் பத்துவருட அனுபவம் இருத்தல் வேண்டும். அன்றேல் நிர்வாகத் துறையில் பதவி வகுத்த ஒருவராக இருத்தல் வேண்டும். சம்பளம் ரூ 400. போக்குவரத்து செலவுப்படி ரூ 150. மனுச் செய்யும் விலாசம்:- **காரியதரிசி, சோசல் அன்ட் எக்கனோமிக் அஷ்சூரன்ஸ் லிமிட்டட், ஸ்ரேஷன் வீதி, யாழ்ப்பாணம்.**

கணக்குப் பதிவதில் பயிற்சி உள்ள காஷியர்கிளாக் தேவை. பிணைப்பணம் ரூ 1000. கட்ட வேண்டும். மனுச்செய்யும் விலாசம்:- **சோஷல் அன்ட் எக்கனோமிக் அஷ்சூரன்ஸ் லிமிட்டட் ஸ்ரேஷன் வீதி, யாழ்ப்பாணம்.**

பிரசார அதிகாரி ஒருவர் தேவை. பொதுவாகக் கல்வி அறிவு மிக்கவராக இருத்தல் வேண்டும் அல்லது நல்ல குடும்பத்தைச் சேர்ந்தவராயும் வெளியிடங்களுக்குச் சென்று காரியங்களைக் கவனிப்பதில் அனுபவம் வாய்ந்தவராகவும் இருத்தல் வேண்டும். மனுச் செய்யும் விலாசம்: **சோஷல் அன்ட் எக்கனோமிக் அஷ்சூரன்ஸ் லிமிட்டட், ஸ்ரேஷன் வீதி, யாழ்ப்பாணம்.**

ஏற்பாடுகளும் ஒழுங்குகளும் செய்யக் கூடியவர்களும் வெளியிடங்களில் காரியங்களைக் கவனிக்கக் கூடிய உதவியாளர்களும் தேவை. மாதவீதம் சம்பளம் கொடுக்கப்படும். வசீகர தோற்றமும் சுறுசுறுப்புமுள்ளவர்களாகவும் நல்ல குடும்பத்தைச் சேர்ந்தவர்களாகவும் இருத்தல் வேண்டும்.

ஒரு மாதப் பயிற்சியின் பின்னரே நிரந்தரமாக்கப்படுவர். மனுச் செய்யும் விலாசம்: **சோஷல் அன்ட் எக்கனோமிக் அஷ்சூரன்ஸ் லிமிட்டட், ஸ்ரேஷன் வீதி, யாழ்ப்பாணம்.**


# அனுராதபுரத் தபால் நிலையத்தின் சேவை என்ன?

## பொது மக்களின் கேள்வி

அனுராதபுரம்.

அனுராதபுரத் தபால் நிலையத்தில் கடந்த ஒருவாரமாக ஏற்பட்டுள்ள நெருக்கடியின் விளைவால், அதன் சேவை என்ன என்பதேயென்று விளங்காத நிலைமை ஏற்பட்டுள்ளது. கொழும்புத் துறைமுகத்தில் ஏற்பட்டுள்ள வேலைநிறுத்தம் காரணமாக அனுராதபுரத் தபால்நிலையத்தலைவர் திரு. இ. இராஜபக்ஸ ஊரில் இல்லை. அவர் ஒரு முன்னாள் இராணுவ அதிகாரியாதலால், கொழும்பில் அவசர சேவைக்கு அழைக்கப்பட்டுள்ளார்.

இந்தச் சமயத்தில் இது எழுதும்வரையில் இரவுத் தந்திகள் யாவும் சாதாரணத் தபாலிலேயே அனுப்பப்பட்டு வருகின்றன. ஆனால் தந்திக்கான கட்டணத்தை வசூலித்து வருகின்றனர்.

இதுவிஷயமாக நமது நிருபர் ஒரு தபால்நிலைய அதிகாரியை விசாரித்தபோது, இப்போதுள்ள தந்தி அதிகாரி (டைப்பிஸ்ட்) மாலை 5-30 மணிக்குமேல் வேலைசெய்வதில்லை என்றும், இரவில் வேலைசெய்யத் தகுதிபெற்ற வேறு ஒருவரும் இல்லையென்றும் தெரிவித்தார்.

தந்திகளின் நிலைமை இவ்வாறிருக்க, பத்திரிகைச் செய்தித் தந்தி பாரங்கள் கடந்த இரண்டரை வாரங்களாகக் கிடைப்பதில்லை என்று தெரிகிறது.

மத்திய தபால் நிலையத்தில் ஏற்பட்டுள்ள குளறுபடியுடன் பழைய நகரில் உள்ள உப தபாற் கந்தோரில் போஸ்டல் ஓடர்கள் முதலியன கிடைக்காமல் இருப்பதால், மக்கள் பெருத்த ஏமாற்றத்துக்கு ஆளாகிறார்கள்.

மந்திரியார் இவற்றைக் கவனிப்பாரா என்ற கேள்வி மக்கள் மனதில் எழுந்துகொண்டே இருக்கிறது.

---

## தமிழ் இசை மணியின் தேவார பாராயணம்

சித்தங்கேணி ஸ்ரீ மகாகணபதிப் பிள்ளையார் கோவிலில் 33 ஓம குண்ட மகாயாக கும்பாபிஷேகமும், தமிழ் வேதப் பன்னிரு திருமுறைப் பாராயணமும் ஆனி மாதம் 8-ந் திகதி (22-6-59) தொடக்கமாக 45 நாட்களுக்கு நடைபெற்று வருகிறது. இவ்வைபவத்தில் சென்னை தமிழிசைமணி திரு. பீ. ஏ. எஸ். இராசசேகரன் அவர்கள் தேவார பாராயணஞ் செய்து வருகின்றார்கள். கிரியைகளிற் பங்குபற்றியும் வழிபாடாற்றியும் இசையமுதைப் பெற்றின்புற்று ஏகுமாறு அடியார்கள் அழைக்கப்படுகின்றனர்.

---

## தேவாரப் போட்டி

அனுராதபுரம்.

இந்துசமயக் கல்விக்கு உறைவிடமாக விளங்கும் அனுராதபுர விவேகானந்த வித்தியாலயத்தில் இல்லங்களுக்கான தேவார, நடன, இசைப்போட்டிகள் நடைபெற்றன. வெற்றி பெற்றவர்கள் விபரம் வருமாறு :-

**தேவாரப்போட்டி :**

**கீழ்ப்பிரிவு:** 1. நா. ஜெயபதி (சரஸ்வதி) 2. த. கந்தசாமி (பார்வதி). 3. இ. இராஜேஸ்வரி (இலக்குமி).

மத்தியபிரிவு: 1. நா. பத்மசுந்தரி (பா). 2. மு. சிவஞானமூர்த்தி (இ). 3. சி. பரமதுரை (ச).

மேற்பிரிவு: 1. நா. பூபதி (ச). 2. ந. சர்வதெய்வதாய் (பா). 3. இ. கமலேசுவரி(பா).

**இசைப்போட்டி :**

பாலர்: 1. நா. அரீசம்மா (இ). 2. இ. சுந்தரபாக்கியம் (இ). 3. மு. நிசுவத்துல்ஜின் (ச).

கீழ்ப்பிரிவு: 1. நா. ஜெயபதி (ச). 2. குரைசா உம்மா (இ). 3. ச. பாலசுப்பிரமணியம் (பா).

மத்தியபிரிவு: 1.மு.சிவஞானமூர்த்தி (இ). 2. ஞா. பத்மசுந்தரி (பா). 3. இ. கண்ணன்(ச).

மேற்பிரிவ: 1. நா. பூபதி (ச). 2. அ. அமராவதி (இ). 3. இ. மங்களேஸ்வரி (இ).

குழுவினர் (கீழ்ப்பிரிவு): 1. பார்வதி. 2. சரஸ்வதி. 3. இலக்குமி.

மேற்பிரிவு: 1. சரஸ்வதி. 2. இலக்குமி. 3. பார்வதி.

**நடனப்போட்டி :**

கீழ்ப்பிரிவு: 1. பார்வதி 2. இலக்குமி. 3. சரஸ்வதி.

மேற்பிரிவு: 1. இலக்குமி. 2. பார்வதி. 3. சரஸ்வதி.

திருக்குடும்பக் கன்னியர் மடத்தைச் சேர்ந்த செல்வி இ. கார்த்திகேசு, வித்தியாலயத் தலைமையாசிரியர் திரு. என். நவரத்தினம், திரு எஸ். கிருஷ்ணபிள்ளை ஆகியோர் இப்போட்டியில் நடுவர்களாகக் கடமையாற்றினர்.

---

## குன்றக்குடி அடிகளார் இலங்கை விஜயம்

தவப்பெருந்திரு குன்றக்குடி அடிகளார் ஜூலை மாதம் 17 ஆம் திகதியளவில் இலங்கைக்கு விஜயம் செய்வார்கள். வட்டுக்கோட்டையில் நடைபெறவிருக்கும் இலங்கை அருள் நெறிமன்ற விழாவில் அடிகளார் பங்கு பற்றிய பின்னர் தொடர்ந்து சில நாட்கள் கீரிமலையில் அல்லது பொருத்தமான வேறோர் இடத்தில் நடைபெறவிருக்கும் சைவ சித்தாந்த வகுப்புகளுக்கு அடிகளார் தலைமை தாங்குவார்கள். வகுப்புகளிற் சேர விரும்புவோர் முன்னதாகவே அனுமதி சீட்டுக்கள் பெற்றுக் கொள்ள வேண்டும். சகல விபரங்களுக்கும் திரு. சி. க. வேலாயுதபிள்ளை, உருத்திரபுரம் P. O. என்ற விலாசத்துக்கு எழுதுக.

# சென்னை இந்து தர்மபரிபாலன கமிஷனர்கள் கொழும்பு விஜயம்

வருகிற ஆடி வேல் உற்சவத்தை முன்னிட்டு மதுரை ஆதீனம் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர பரமாசாரிய சுவாமிகள் இம் மாதம் 17-ந் திகதி மதுரையிலிருந்து விமான மார்க்கமாக கொழும்பு ஜிந்துப்பிட்டி எனும் ஜயந்தி நகர் ஸ்ரீ சுப்பிரமணிய சுவாமி கோவிலுக்கு விஜயம் செய்கிறார்.

சுவாமிகளுடன் திருமுருக கிருபானந்த வாரியும், சென்னை இந்து தர்ம பரிபாலன சபை கமிஷனர் திரு. உத்தண்டராம பிள்ளை, ஐ.ஏ.எஸ், டிபுடி கமிஷனர் திரு.சக்கரை பி.ஏ.,பி.எல்., இவர்களும் வந்து சொற்பொழிவு ஆற்றுவரென்று தெரிகிறது. இக்கமிஷனர்கள் இலங்கை வருவது இதுவே முதல்முறையாகும்.

## அரியாலையில் புதுச் சந்தை யாழ்ப்பாணம் மேயர் திறந்து வைத்தார்

மக்களின் நலன்களைப் பார்த்து அவற்றை அவர்களுக்குச் செய்து கொடுக்கும் சேவையைத் தம் கடமையாக உணருவதாக யாழ்ப்பாண மேயர் திரு. அல்பிறட் துரையப்பா அரியாலைப் புதுச் சந்தையைச் சென்ற புதன்கிழமை (1-7-59) திறந்து வைத்துப் பேசுகையில், குறிப்பிட்டார்.

புதுமுறையில் அமைக்கப்பட்டுள்ள இச்சந்தையை நிறுவ அரியாலை வட்டார நகர சபை அங்கத்தவர் திரு. ச. நடராசா பெருமுயற்சி எடுத்துக் கொண்டார்.

---

கிழக்குத் தபால்: நமது நிருபர்

# தாந்தாமலை திருவிழா

## மந்திரியின் திடீர் விஜயம்

மட்டக்களப்பு.

மட்டக்களப்பிலுள்ள ஒரே சிவன்கோயிலாகிய கொக்கட்டுச் சோலைத் தான்தோன்றி ஈசுவரன் கோயிலால் பரிபாலிக்கப்பட்டு வந்த தாந்தாமலை முருகப் பெருமான் ஆலயத்தில் ஆனி உத்தரம் முதல் திருவோணம் வரை திருவிழா நடத்த மேற்படி ஆலயத்தின் தற்போதய நிர்வாகிகள் தீர்மானித்து அறிக்கை வெளியிட்டுள்ளனர்.

சமீபத்தில் இப்பகுதி சரித்திர முக்கியத்துவம் வாய்ந்ததெனக் கூறிச் சைவர்களின் வழிபாட்டைத் தடை செய்ய முற்பட்ட புதை பொருளாராய்ச்சிப்பகுதியின் முயற்சியை மதியாது தங்களது கடமையைச் செய்ய முற்பட்டிருக்கிறார்கள்.

பல நூற்றுண்டுகளாகத் தான்தோன்றி ஈசுவரன் கோயில் நிர்வாகிகளின் பரிபாலனத்திற்குட்பட்டிருந்த இவ்வாலயத்தில் புதைபொருளாராய்ச்சிப் பகுதி கைவைக்க முற்படுவது நியாயமற்றதென்று நியாய துரந்தரர் திரு. கே. என். குமாரசுவாமி கூறுகிறார்.

1956-ல் வகுப்புக் கலவரமேற்பட்டது முதல் அதிகமான பக்தர்கள் இங்கு முருகனை வழிபடச் செல்கிறார்கள்.

### மட்டக்களப்பில் ஹென்றி அபயவிக்கிரம

சென்ற வாரத்தில் பகிரங்க வேலைப்பகுதி மந்திரி ஹென்றி அபயவிக்கிரம மட்டக்களப்பிற்குத் திடீர் விஜயஞ் செய்தார். தமது தேசிய உடையான சாரம் அணிந்து வந்தார். அவரது காரில் சிங்கக்கொடி பறந்தது அவர் உத்தியோகபூர்வமாக வரவில்லை. சிம்மாசனப் பிரசங்கத்திற்கு வாக்களிக்க திரு. எதிர்மன்னசிங்கத்தை அழைத்துச் செல்வதே அவரது வரவின் நோக்கமாகும். அவர் வைத்தியசாலைக்குச் சென்றபோது திரு. எதிர்மன்னசிங்கம் அங்கிருக்கவில்லை. அவரைத்தேடி வித்தியா கந்தோரில் சந்தித்து அவரைக்கட்டாயம் பாராளுமன்றக் கூட்டத்திற்கு வரும்படி வற்புறுத்தி இணங்கவைத்துச் சென்றுள்ளதாகத் தெரிகிறது.

### மட்டக்களப்புத் தமிழ் பேசும் ஐக்கிய முன்னணி

சென்ற வாரத்தில் அடுத்த பாராளுமன்றத் தேர்தலையிட்டு ஆலோசிக்க ஒரு இரகசியக் கூட்டம் மட்டக்களப்பு வைத்தியசாலையில் திரு. எதிர்மன்னசிங்கம் தலைமையில் நடந்ததாகவும், சென்ற தேர்தலின் பின் இறந்துவிட்ட 'மட்டக்களப்புத் தமிழ் பேசும் முன்னணி,யை உயிர்ப்பிப்பதெனவும், அதன் சார்பில் அபேட்சகர்களை நிறுத்துவதெனவும் தீர்மானிக்கப்பட்டிருப்பதாகச் செய்திகள் உலாவுகின்றன.

### பொத்துவிலை சம்மாந்துறையுடன் சேர்த்ததேன்?

பூமிசாத்திர அமைப்புப்படி பொத்துவிலும் அக்கரைப்பற்றும் அடுத்திருந்தும் அவற்றை இணைத்து ஒரு தொகுதி அமைப்பிற்குப்பதிலாகப் அவர் பொத்துவிலைச் சம்மாந்துறையுடன் இணைத்தது எவ்வகையிலும் நியாயமற்றதென்ற அபிப்பிராயம் தென்பகுதி மக்களிடையே நிலவிவருகிறது.

தற்போதைய கல்முனை, பொத்துவில் பிரதிநிதிகளின் பதவிகளைக் காக்கவே இந்த அநியாயஞ் செய்யப்பட்டுள்ளது என்று கூறிக்கொள்ளப்படுகிறது.


## உங்கள் எதிர்கால வாழ்க்கை சலனமற்றதாகக் காட்சியளிக்க வேண்டுமா ?

அப்படியானால் அந்தப் பொறுப்பை எங்களிடம் ஒப்படையுங்கள்.

உங்கள் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்காக விசேஷ சேமிப்புத் திட்டங்கள் ஏற்படுத்தியுள்ளோம்.

★ ஆயுள் மோட்டார் இன்சூரன்ஸ்
★ விவாக அந்தியகால சேமலாப நிதிகள் - விசேஷ கடன் வசதிகள்
★ கூட்டமைப்பு (Group Schemes)
★ விபத்து
★ மாதத்தவணை கட்டணங்கள் (Monthly recurring Deposit)

இவை போன்று இன்னும் பல விசேஷ அம்சங்கள் ஏற்படுத்தியுள்ளோம்.

முழு விபரங்கட்கு:

**இன்ரநாஷனல் இன்சூரன்ஸ் கம்பனி லிமிட்டெட்**

280, இரண்டாம் மாடி, பெரியகடை. போன்: 526.

இராசா பில்டிங், யாழ்ப்பாணம். தந்தி: "இனிக்கோ"

## ஆசிய நாடுகள் சிலவற்றின் அபிவிருத்தித் திட்டம் : 3

# இந்தியாவின் பொருளாதார அமைப்பு

## அது கையாளும் கொள்கை முறை

— டக்டர் பி. விக்னராஜா —

**பலதரப்பட்ட பொருளாதாரத்தைக் கொண்ட இந்திய நாட்டில் தனிப்பட்ட மூலதனத்தின் அடிப்படையிற் தனிமுயற்சிக்கும் போதிய இடமுண்டு என்றே கூறவேண்டும்.**

கடந்த கட்டுரையில் வெவ்வேறு வகைப்பட்ட பொருளாதார அமைப்பைக் கொண்ட சீனம், யப்பான், ஆசிய நாடுகளைப் பற்றி ஆராய்ந்தோம். அக்கட்டுரையில் விரிவாக எதையும் ஆராய இயலாது போயினும் ஒன்றுமாத்திரம் தெளிவாயிற்று. அதாவது ஒவ்வொரு அமைப்பு முறையிலும் சாதகங்களைப்போலப் பாதகங்களும் உள. எனவே ஒவ்வொரு நாடும் தத்தம் அரசியற் கொள்கைக்கும் கலாச்சாரப் பண்புக்கும் தகுந்தது எது? பொருளாதார நிலைக்கு ஏற்றது எது? என்பவற்றை அலசி ஆராய்ந்தே ஒரு குறிப்பிட்ட முறையைக் கையாள முற்பட வேண்டும் என்பதாகும். ஒரு அமைப்புமுறை ஒரு தேசத்திற் பூரண வெற்றியை ஈட்டிவிட்டதனல் அதுவே இன்னேரிடத்துக்கும் சாலச்சிறந்தது என்பதற்கில்லை. ஒருதேசம் எந்த அமைப்பு முறையைக் கையாள வேண்டும் என்பதைத் தீர்மானிக்கும் பொறுப்பு அந்நாட்டு அரசாங்கத்தையோ தலைவர்களையோ மட்டும் சார்ந்ததுமல்ல. பொதுமக்களும் அதிற் பங்குகொள்ள வேண்டியவர்களே.

பொருளாதார அபிவிருத்தித் துறைகளை அமைப்பதிலும் இவற்றுக்கான வழிவகைகளை எடுப்பதிலும் சீனம், யப்பான் இவற்றிலிருந்து வேறுபட்ட கொள்கையையே இந்திய நாடு கடைப்பிடித்து வந்துள்ளது. திட்டமிடப்பட்ட பொருளாதார வளர்ச்சியின் ஒன்பதாவது வருடத்தை, அதாவது இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தின் நான்காவது வருடத்தை, இன்று இந்தியா அடைந்திருக்கிறது. அத்துடன் 1961 ஆம் ஆண்டு தொடங்கவிருக்கும் அடுத்த ஐந்தாண்டுத் திட்டத்திற்கான ஏற்பாடுகளையும் அரசாங்கம் இப்போது . தொடங்கியிருக்கிறது.

### சோஷலிசக் கொள்கைகள்:

இங்கு குறிப்பிடத்தக்கது என்னவெனில் இந்தியா தனது பொருளாதாரத் திட்ட அமைப்பிற் கையாளும் கொள்கைமுறை என்றே கூற வேண்டும். சீனத்தைப் போன்று இங்கு அரசியல், சமூகத் துறையிலோ அன்றிப் பொருளாதார அபிவிருத்திக்கான முறையிற்தானே தீவிரமான மாற்றங்கள் எதுவும் புகுத்தப்படுவதில்லை. எனினும் கூடிய உற்பத்திப் பெருக்கத்தின்மூலம் மக்களுக்கும் கூடிய உயர்ந்த வாழ்க்கைத்தரம், அதிகமான வேலை வசதிகள், எல்லோருக்கும் எட்டக்கூடிய கல்வி முறை, தொழிற்பயிற்சி, சுகாதார சேவை, வாழ்வில் இயன்றளவு எல்லோருக்கும் சமமான வாய்ப்பு வசதிகள், மற்றும் ஒரு சமூகத்தினர் இன்னெரு பகுதியினரால் சுரண்டப்படுவதற்குச் சந்தர்ப்பம் அளியாமை எனும் கொள்கைகள்மூலம் இந்திய நாட்டில் சோஷலிசக் கொள்கைகள் கடைப்பிடிக்கப்பட்டும் வருகின்றன. இவற்றை எய்துவதற்காக அரசாங்கமும் பெரும் பாகத்தை ஏற்று நடத்துகிறது. ஏற்று நடத்தும்போது, அங்குங்கூட, இதுவரையிலும் இனி மேலும் தனிப்பட்டோர் நடாத்திவரக்கூடிய தொழிற்துறைகளை எல்லாம் அப்படியே அரசாங்கம் தன் கைக்குள் கொண்டுவந்து விடவேண்டும் என்ற கொள்கையும் அனுசரிக்கப் படுவதில்லை. சோஷலிச அடிப்படையைக் கொண்ட சமூக அமைப்பு எனும்போது, அது ஒரு தலைப்பட்ட கொள்கையின் கீழ் இயங்கவேண்டிய ஒன்று என நாம் எண்ணிவிட வேண்டியதில்லை. பலதரப்பட்ட பொருளாதாரத்தைக் கொண்ட இந்திய நாட்டில் தனிப்பட்ட மூலதனத்தின் அடிப்படையிற் தனிமுயற்சிக்கும் போதிய இடமுண்டு என்றே கூறவேண்டும். அதற்கேற்ப, சிறிய அளவில் நடத்தப்படும் தொழிற் துறைகளும் மற்றும் விவசாயமும் அங்கு தனிப்பட்டோர் மூலதனத்தைக் கொண்டே இன்னும் தொடர்ந்து இயங்கிவருகிறது. எனினும் பெரும் அடிப்படைமூலத் தொழிற்துறைகளில், அதிலும் புதிதாகத் தொடங்கப்படும் துறைகளில், நடைமுறை நோக்குக் கருதி அரசாங்கம் தலையிட்டுப் பொறுப்பேற்றும் உடைமை தாங்கியும், வேண்டிய இடத்திற் கட்டுப்பாடு செய்தும் கவனித்து வருகிறது. வர்த்தகத்தைப் பொறுத்தளவில், நேரடியாக அரசாங்கமும் பங்குபெறும் கொள்கை கருத்திற் கொணரப்பட்டபோதிலும், ஒருசில பொருள்களைப் பொறுத்தளவிற்தான் அரசாங்கம் இதிற் தலையிட்டுள்ளது. நிதிவகையிலும், (State Bank) எனும் அரசாங்க வங்கியும் மற்றும் இன்சூரன்ஸ் கொம்பனிகளும் தேசியமயமாக்கப்பட்டபோதிலும் ஏனைய வங்கிகளும் நிதி இயக்கங்களும் தொடர்ந்து தனிப்பட்டு இயங்க அனுமதிக்கப்பட்டுள்ளன. விரைவான அபிவிருத்தியை வளர்ப்பதற்காக நாட்டின் பொருளாதார வளத்தைச் சீர்படுத்தி முறைப்படுத்த நேரடிக் கட்டுப்பாட்டிலும்பார்க்க மறைமுகவழி அமைப்புக்களே இங்கு கையாளப்படுகின்றன.

### முதலாவது ஐந்தாண்டு

முதலீட்டைப் பொறுத்தளவில், முதலாவது ஐந்தாண்டுத் திட்டத்தின்போது, அதாவது 1951 இல் இருந்து 1956 ஆம் ஆண்டுள் இந்தியா 3600 கோடி ரூபா முதலீடு செய்துள்ளது. 1956 இல் இருந்து 1961 வரையுள்ள அடுத்த ஐந்தாண்டில் இத்தொகை ஏறக்குறைய இரட்டிப்படையும் எனக் கருதப்படுகிறது. முதலாவது ஐந்தாண்டின் முன்னர் இந்தியாவின் தேசிய வருமானத்தில் ஐந்துசத விகிதமே நாட்டில் முதலீடு செய்யப்பட்டது. ஆனல் முதலாவது ஐந்தாண்டுத் திட்டத்தின் இறுதியில் முதலீட்டுத்தொகை 7 சத விகிதமாக உயர்ந்தது. இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தின் முடிவிலோ இத்தொகை 10, 11 சத விகிதமாக உயர்ந்து நிற்குமென எதிர்பார்க்கப்படுகிறது.

தேசிய வருவாயிலும், முதலாவது ஐந்தாண்டுத் திட்டத்தின்மூலம் இந்தியா 3 சத விகித அதிகரிப்பையே அடைந்திருக்கிறது. இது ஒரு சிறந்த சாதனை என்றுகருதுவதுடன் இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தின்போது இன்னும் கூடிய உயர்வே எதிர்பார்க்கப்படுகிறது என்பதையும் குறிப்பிடவேண்டியிருக்கிறது. முதலாவது ஐந்தாண்டுத் திட்டத்தின்போது நாட்டுக்குத் தகுந்த பொருளாதார அடிப்படை ஒன்றை ஏற்படுத்துவதிலும் வருங்காலத்திற் கூடிய வளர்ச்சிக்கு இடந்தரத்தக்க மாற்றங்களை அமைப்பதிலும், அத்துடன் பாகிஸ்தானின் பிரிவினையாலும் யுத்தத்தின் விளைவாலும் ஏற்பட்ட பிரச்சினைகளைத் தீர்த்துமுடிப்பதிலுமே கூடிய கவனம் செலுத்தப்பட்டது. அந்த ஐந்தாண்டுத்திட்டத்தின் முடிவில் மேற் கூறிய குறிக்கோள்கள் எய்தப்பெற்றதுடன் நாட்டின் தேசிய வருவாயும் அதிகரித்துள்ளது என்பதைக் கண்டபோது இந்தியத் தலைவர்கள் உண்மையிலேயே பெருமகிழ்வு கொண்டார்கள். அடுத்த ஐந்தாண்டுத் திட்டத்தைக் கூடியதுணிவுடன் தொடர்ந்து நடத்தலாம் என்ற தைரியமும் பெற்ருர்கள். எனவே, இரட்டிப்பான முதலீடும் அதற்கெனத் திட்டமிடப்பட்டது. இத் தொகை மக்களது வாழ்க்கைத்தரத்தை உயர்த்துவதற்கும் மாத்திரமின்றி, வளர்ந்துவரும் சனத்தொகைக்கு கூடிய வேலை வசதி அளிப்பதற்கும் தேவையாயிற்று. மேலும், இந்திய மக்களது வாழ்க்கைத்தரம் உலகின் மிகக் கீழுள்ள நிலையில் இருந்தமையால், இதனை உணர்த்துதல் அத்தியாவசியம் என்பதும் உணரப்பட்டது. சராசரி மக்களால் உட்கொள்ளப்படும் உணவு வகைகள் சத்தில் மிகக் குறைந்தது என்பதும் வீட்டு வசதி அடியோடு போதாது என்பதும் 6 லிருந்து 11 வயதுக்குட்பட்ட பிள்ளைகளிற் பாதித்தொகையினரும் 14 வயதிலுள்ளோரில் ஐந்திலொரு பகுதியினருமே பள்ளிக்குச் செல்கின்றனர் என்பதும் ஏற்றுக்கொள்ளப்பட்ட உண்மைகளே. இந்திய சனத்தொகையிற் பாதிப்பேரில் சராசரியாக ஒவ்வொருவருக்கும் உடை உணவு வகைகளில் மாசத்துக்குச் செலவிடக் கிடைக்கும் தொகை 13 ரூபாயாகும்.

### மிகுந்த கவனம் அவசியம்

இவற்றை நிவர்த்தி செய்வதற்குப் பிரமாண்டமான பிரயத்தனம் அவசியமாகின்றது. இந்தியத் தலைவர்களை எதிர் நோக்கி நிற்கும் பிரச்சினைகள் இவை. கைத்தொழில் அபிவிருத்திகளுக்கு அதிலும் முக்கியமாக அத்தியாவசியமான பலத்த கைத்தொழிற் சாதனைகளுக்கு மேற் கூறிய பிரச்சினைகளைத் தீர்க்கும் முகமாக அரசாங்கம் முக்கியத்துவம் கொடுத்துவருகிறது. வளர்ந்துகொண்டே போகும் பெருந்தொகையான மக்களைக் கொண்ட ஒரு நாடு நில வளமும் போதிய அளவு இல்லாதபோது கைத்தொழில் அபிவிருத்தியிற் கவனம் செலுத்த வேண்டிய நிலைமை ஏற்படுவதுண்டு. இது மக்களுக்கு வேலை வசதியை ஏற்படுத்தும் நோக்குடன் மாத்திரமன்றி நாட்டின் பொது உயர்வை வேண்டியும் கடைப்பிடிக்க வேண்டியதாகின்றது. விவசாய வளர்ச்சியைப் போலன்றி கைத்தொழில் அபிவிருத்திக்குக் கூடிய கவனம் செலுத்துதலும் திட்டங்கள் அமைத்தலும் அவசியமாவதுண்டு. காரணம் இங்கு பிரச்சினைகள் அதிகம். ஒரு கைத் தொழிலைத் தொடங்கு முன்னர் அத் தொழிலுக்கு வேண்டிய மூலப் பொருட்கள் நாட்டிற் போதிய அளவு உண்டா என்பதை முதலிற் தீர்மானித்துக்கொள்ள வேண்டும். இப்பொருட்கள் அந்த நாட்டில் இல்லாவிடினும் வெளி இடத்திலிருந்தாவது குறைந்த விலைக்கு இறக்குமதி செய்து கொள்ள முடியுமா என்பதையும் கவனிக்க வேண்டும். முன்னரும் குறிப்பிட்டதைப் போல் இங்கிலாந்து, ஒல்லாந்து போன்ற சிறிய நாடுகள் இறக்குமதி செய்யப்பட்ட மூலப்பொருட்களைக் கொண்டே தத்தம் கைத்தொழில் வளத்தைப் பெருக்கியிருக்கின்றன. ஆனல் விசால நிலப் பரப்பைக் கொண்ட இந்திய நாட்டிலோ மூலப் பொருட்கள் பல இருக்கின்றன. எனவே கைத்தொழில் அபிவிருத்திக்குத் தேவையாய் வரும் அடுத்த பொருள் இயந்திர சக்தி எனக் கொள்ளலாம். இயந்திரங்களை இயக்குதற்கு வேண்டிய சக்திக்கு முன்னர் எண்ணெயும் நிலக்கரியும் போதுமானதாயிருந்தது.

### வல்லுனர் உதவி

ஆனல் இன்ரு முன்னேற்றமடைந்து வரும் ஒவ்வொரு நாடும் ஜல மின்சார உற்பத்தியின் சக்தியையே பெரிதும் நம்பி வரும் நிலைமை ஏற்பட்டுவிட்டது. அத்துடன் அணுசக்தியின் துணையை நாடும் அளவுக்கும் சில நாடுகள் சென்றுவிட்டன. இவற்றுக்கு அடுத்து கைத்தொழில் அபிவிருத்திக்கு இன்றியமையாதது தேர்ச்சி பெற்ற வல்லுனர்கள் எனலாம். கைத் தொழில்கள் பல முறையான செயல்வகை நல்ல நிர்வாகம் இவை இல்லாமலும் சீர்கெட்டு விடுவதுண்டு. தேர்ச்சி பெற்ருேர் ஓர் நாட்டில் இல்லாது விடில் இதனையும் இன்றைய நிலையில் வேருெரு நாட்டிலிருந்து பெற்றுக்கொள்ள முடிகிறது. கைத்தொழிலுக்கு அத்தியாவசியமான மூல தனத்தைக் கூட இன்று இவ்விதம் பெற முடிகிறது. இவ்விதம் ஒரு நாட்டின் தொழில் அபிவிருத்திக்கு ஆரம்பத்தில் ஏற்படக்கூடிய தடை தொழில் வளர்ச்சிக்கு முறையாகத் தொடங்கப்படாத திட்டமும் நல்ல நிர்வாகமின்மையே ஆகும். இத்தடைகளைத் தீர்த்து வரும்போதுதான் மூலதனம் என்பது முக்கியத்துவம் பெறுகிறது. உதாரணமாக, இந்தியாவைப் பொறுத்த அளவில் முதல் ஐந்தாண்டுத் திட்டத்தின்போது கைத்தொழில் அபிவிருத்திக்கு மூலதனம் ஒரு தடையாக இருந்ததில்லை. இரண்டாவது காலவரையின்போதுதான், ஏனைய அபிவிருத்திகள் ஏற்பட்டு வந்தபோது, மூல தனத்தின் தேவை முக்கியத்துவம் பெறத் தொடங்கிற்று. இக்குறைபாட்டை உள்நாட்டு மூலதனத்தை ஒருமுகப் படுத்துவதுடன், வெளிநாட்டு நிதியை ஏனையோர் முதலீடு செய்வதை தடைப்படுத்தாது விடுவதன் மூலமும் இந்திய அரசாங்கம் சமாளித்து வந்திருக்கிறது.

### வெளிநாட்டு மூலதனம்

இந்தியாவுக்கு வெளிநாட்டு மூலதனம் மற்றைய அரசாங்கங்களுடன் கொண்டு உள்ள உதவி ஒப்பந்தங்களின் மூலமும், உலக வங்கி போன்ற தேசிய ஸ்தாபனங்கள் மூலமும், வெளிநாட்டு முதல் ஈடு செய்பவர்கள் மூலமும் இருக்கிறது. அபிவிருத்தியின் ஆரம்ப காலத்தில் வெளிநாட்டு மூலதனம் கிடைப்பதினல் உள்ள பெரும் நன்மை யாது எனில் மூல தனத்துடன் வரும் தேர்ச்சி பெற்ற நிர்வாகம், நுட்ப திறன், ஆகிய இரண்டுமாம். இவை முன் கூறியது போல தொழில் அபிவிருத்தியின் மேன்மைக்கு மூலதனம் போன்று மிகவும் வேண்டத்தக்கது.

எனவே இந்தியாவின் அனுபவத்தினின்று நாம் அறியக் கிடைப்பது யாது எனில், அபிவிருத்தி அடைந்த நாடுகள் மற்றைய நாடுகளுக்கு கொடுத்து உதவும் மனப்பான்மை நிலவும் தற்போதைய தேசிய சூழ்நிலையில், எல்லா நாடுகளும் தற்கால தொழிலை நுட்ப திறன் கிட்டுவது உடன், சிறந்த தேசத் தலைமையையும் மக்களிடையே வருங்கால சுபிட்சத்துக்கு என ஒரு சில தியாகங்கள் புரியும் மனப்பாங்கும் இருக்குமேயானல் தங்கள் கலாச்சாரத்துக்கும், அரசியல் விருப்பத்துக்கும் ஏதுவானதாக தங்கள் நாட்டின் பொருளாதாரத்தை அபிவிருத்தி செய்து அதனல் வரும் நன்மைகளை நாட்டு மக்களுக்கு கூடிய வாழ்க்கைத் தரம் மூலம் அளிக்கலாம் என்பதுவே ஆகும்.

---

## வடமாகாண ஆசிரியர் சங்கம்

வடமராட்சி இந்து மகளிர் கல்லூரியில் 4-7-59 இல் நடைபெற்ற வடமாகாண ஆசிரியர்சங்கத்தின் 44ஆவது ஆண்டுப் பொதுக் கூட்டத்தில் பின்வரும் உத்தியோகத்தர் தெரிவுசெய்யப்பட்டனர். தலைவர்: திரு. ஏ. வைத்தியலிங்கம், அதிபர் உரும்பராய் இந்துக்கல்லூரி. உப தலைவர்கள்: திரு. எஸ். பி. நடராசா; ஹாட்லிக் கல்லூரி, திரு. ஏ. ஆர். இராசநாயகம்; கொக்குவில் இந்துக்கல்லூரி, திரு. ரி. விசுவநாதன்; யாழ்ப்பாணக்கல்லூரி. பொதுக் காரியதரிசி: திரு. கே. அருணசலம், வட்டுக்கோட்டை இந்துக்கல்லூரி. தனதிகாரி: திரு. ஜே. சந்தியாப்பிள்ளை, அருணேதயக்கல்லூரி, அளவெட்டி.

அகில இலங்கை ஆசிரியர் சங்கநிருவாகசபைக்கும் பிரதிநிதிகள் தெரிவுசெய்யப்பட்டனர்.

சிறுகதை

# ஆத்மா

இ. நாகராஜன்

மணித்தியாலங்கள் நிமிடங்களாகி — நிமிடங்கள் விநாடிகளாகக் குறுகிக் கொண்டிருக்கும் சமயமிது.

'நான்' என்னும் அகங்காரமும் 'எனது' என்ற மமகாரமும் கூட்டாகப் பரிணமித்த 'நான்' என்னும் நானே நான் அறிய முற்பட்டுக் கொண்டிருக்கிறேன்.

இந்தப் பண்டம் எப்படி வந்தது. இதன் பூர்வாங்கம் யாது? என்பது பற்றிய சர்ச்சையில் என்னுள் பல கேள்விகள் கிளர்ந்து சுடர்விட்டுக் கொண்டிருக்கின்றன. ஆனால் என்னால் அதை அறியக்கூடவில்லை.

ஏன் இந்தநிலை? உலகத்துடன் கூடிய சம்பிரதாய நெளிவு சுழிவுகளில் உழலும் அதைப் பற்றிய அறியமுடியாத சங்கடநிலை. திரைபடர்ந்து எங்கும் சர்வ வியாபகமாய் உருவான ஊழிக்கால இருள். ஒளியைப் பிரித்தறிய முடியாத பயங்கரம். இந்த அவலநிலையிலே சுற்றி நிற்கும் அத்தனை விழிகளும் என்னைத் துருவிஆராய முற்பட்டுள்ளன. நான் அதை விளக்கவேண்டும். எப்படி விளக்குவது?

* * *

ஒரே பேரொளி. மனித எண்ணத்தில் உதயமாகும் எந்தக் கல்மிச எண்ணங்களும் தலைகாட்ட முடியாத புனிதம் நிறைந்த இடம் ஒன்று என் முன்னே.

அந்த இடத்தைப் பகுத்தறிவுவாதிகள் இல்லையென்று சத்தியம் பண்ணி விடுவார்கள். ஆனால் பாரம்பரிய பழக்கதோஷத்தில்ஊறியஎன் முரட்டு நம்பிக்கை அதனை உதறவில்லை; நம்பவே செய்கிறது.

அங்கு வந்துவிட்டேன். மனிதன் எதையெல்லாமோ கற்பனை பண்ணி பூச்சாண்டி காட்டி விட்டபோதிலும் அந்த இடத்தின் அமைதியையும், சந்துஷ்டியையும் இதுவரை சரியாக விளங்கிக் கொள்ள முடியவில்லை. ஒரு வேளை அது அவனது ஆற்றலுக்கு அப்பாற்பட்டதோ என்னவோ!

* * *

"நீ யார் என்பதை இப்போது அறியவேண்டும். அப்படித்தானே?"

என்னோடு ஒட்டிக் கொண்ட அந்தராத்மா அடித்துக் கூறியது.

"ஆம்! இதை யாரிடம் கேட்பது. இங்கு எதையும் பிரித்தறிய முடியவில்லையே."

என்னுள் அறியாத மயக்கம். அனைத்தும் ஒன்ருய், ஒன்றே அனைத்துமாக உள்ள இங்கு எது தனித்தியங்குகிறது? இங்கு என்னை அறிந்த அன்னையைப், பிதாவை எப்படித் தேடுவது?

என் முன் இரு......உரு...... இல்லை! அவை? உருவமற்ற அசைவுகள். ஒருவேளை ஊனம் நிறைந்த என் விழிகளினால் அவற்றைக் காணமுடியாது போலும்!

"அதோ அவையிடம் செல்!"

"அவை?"

"உனது பூர்வாஸ்ரம பெற்ருேர். பூமிக்கு உன்னை அளித்தோர் அவர்தாம்".

"என்ன ஒன்றுமே தெரியவில்லை. எதைக் காட்டுகிருய்! அந்தராத்மாவே!"

பூமியிற் படிந்த ஆசாபாசம் உன்னை இன்னும் தொட்டு நிற்கிறது. அதனல் எதுவும் தெரியவில்லை. அவற்றை நாடிச் செல்"

அந்தராத்மாவின் கட்டளையை மீற முடியவில்லை. முன்னேறினேன்.

"நில்லுங்கள்!"

அசைவுகள் நின்றன.

"என்னை யாரென்று உணர்த்துங்கள். பூலோகத்தில் கோரநிலை அடைந்து கிடக்கும் என்னை என்னுற் புரிந்து கொள்ள முடியவில்லை. நினைவு அஸ்தமித்து விட்டது. விளக்குங்கள்! என்னைச் சுற்றிய விழிகளுக்குடையவர்களுக்குத் தெரிவித்துவிட்டு வருகிறேன்"

சிரிப்பு. அது சிரிப்பா? அனைத்தும் நடுங்கியது. கடல் குமுறியது போன்ற தன்மை. நிலை குலைந்தேன்.

அவை முன்னேறின. நான் தொடர்ந்தேன்.

"சொல்லிவிட்டுப் போங்கள்"

"எதை?" உக்கிரத்துடன் முறைத்துக் கேட்டன.

"நீங்கள்தாம் என் அன்னை தந்தையராம்!"

"யார் கூறியது?"

"எனது அந்தராத்மா கூறுகிறது."

"ஓ! பைத்தியம்! எங்களுக்கு எப்படித் தெரியும்? அப்பாற் போய் விடு!"

"நீங்கள் பொய் கூறுகிறீர்கள். உண்மையிலே நீங்கள் தான் பெற்ருேர். ஐயோ, தயை செய்யுங்கள்!"

"பொய் புனையும் மனிதரா நாம்; பிறந்து இறந்து போகும் வரை சிறுகச் சிறுக வளர்ந்து பெருத்த ஆசாபாசத்துடன் கட்டுண்டு மயங்குபவர்கள் அல்ல. எங்களையும் உன்னைப் போலாக்கி விடாதே."

"அப்படி நீங்கள் பெற்ருேர்களில்லையானல்; திரிகாலத்தையும் உணர்ந்த நீங்கள் என்னை யார் என்று கூற முடியுமல்லவா? சொல்லிவிடுங்கள்;"

"சே! என்ன அடம்பிடிக்கிருய். ஒரு காலத்தில் பூலோகத்தில் நாமிருந்தது உண்மை! இன்று உன்னை உனது நிலையைப் பிரித்துக் காட்ட முடியாது. உன்னை இனங் காட்டிக் கொண்டால் எங்கள் நிலைக்கே குந்தகம் ஏற்பட்டு விடும். அப்பப்பா மீண்டும் அந்த உலகத்துக்குத் தள்ளப்பட்டு உன் போல்...... ஐயோ!...... எங்களுக்கு வேண்டாம் நீயே முயன்று, உன்னை அறிந்து கொள்."

"எப்படி அறிவது? எல்லாமே ஒரே தன்மையாக இருக்கும் இங்கு எதை எவரிடம் கேட்டறிவது?"

"அறியாமலே இருந்து விடு."

"என்ன? இவ்வளவு தூரத்துக்கு வந்து அதை அறிய முடியாது திரும்புவதா?"

"ஆம்! அதுவும் நல்லது. உனது பூலோகத்து உடல் எண்ணற்ற காயங்களாற் கோரப்படுத்தப் பட்டுள்ளது. அதை எவரும் இனங் கண்டு பிரிக்க முடியாத வகையில் நைந்து விட்டது. நீ அறிந்து விட்டால் இன்னும் ஆபத்துத்தான்!"

"ஏன்?"

நீ இன்னும் சில விநாடிகளுள் இங்கு வந்து விடுவாய். அப்போது அதுஉனக்குஅவசியமுமில்லை. அற்ப நேரத்துக்குள் நீ ஏன் அவர்களுக்கு அறிமுகப்படவேண்டும். இப்போது ஏக அனுதாபத்துடன் கணிக்கப் படுகிருய். அறிவதினல் சில விழிகள் உன்னை வெறுப்புடன் நோக்கும். அதுவீண் வேலை.

* *

அசைவுகளின் சலனம் அப்புறம் அங்கில்லை. ஏகப் பரந்துள ஒளி வெள்ளத்துள் ஐக்கியப் பட்டுக் கொண்டன. நான் கீழே கீழே வந்து கொண்டிருக்கிறேன்.

அந்தக் கூட்டம் இன்னும் கலையவில்லை. என்னைத் தாங்கி நிற்கும் உடல் அப்படியே அங்கே இன்னும் கிடக்கிறது.

அது உடலா? சல்லடைக் கண்கள். பற்றும் பாசமும் கூடிக் கலந்த வெறியின் தாக்குதலுக்கு ஓர் அரிய எடுத்துக் காட்டு. அப்பப்பா! அந்த உடல் எந்தப் பகுதியைச் சேர்ந்தது என்பதை அறிவதிற்ருன் அந்த மனிதக் கூட்டத்திற்கு இன்னும் அக்கறை இருக்கிறது.

* * *

"அதோ உடல் அசைகிறது. உயிர் வந்து விட்டது. இப்போது அந்த வாய் முணுமுணுக்கிறது."

கூட்டத்தில் ஒரு குரல் உடலைச் சுட்டிக் காட்டி இதைக் கூறுகிறது.

"அப்பப்பா! நான் யாரென அறிவதிற்ருன் எத்தனை துடிப்பு. சே! இதுதாஞ இவர்கள் அனுதாபம்."

வேண்டாம் அந்த அனுதாபம். அப்படியே இருக்கட்டும்.

செட்டையைக் கழற்றி விடும் அரவம் போன்று ஆத்மாவை அந்த உடலினின்றும் பிரித்து எடுத்துக் கொண்டேன். இப்போது நான் இல்லை. நானுகிய உடல் அதோ, உணர்ச்சியிழந்து அசைவற்றுக் கிடக்கிறது.

ஆகாயத்தை நோக்கிச் செல்லும் உருவமற்ற வெறும் அசைவாக- இதுவரை உடலோடு சேர்ந்து நான் என்ற மமதையிலும் அகங்காரத்திலும் எற்றுண்டு சென்ற அந்த ஆத்மா செல்லுகிறது.

சுற்றியுள்ள அனைத்தும் கீழே. அது மேலே. "சே! இந்த உடல் எவ்வளவு ஆபாசத்துக்கு என்னை ஆளாக்கி விட்டது" என்று திட்டிக் கொண்டே செல்லுகிறது. ஒரு கனவுதானிது.

முன்னே ஒளி. வஞ்சமும், பீதியும், துன்பமும் விரவ முடியாத புனித இடத்துக்கு அது வந்து விட்டது.

ஆனந்தமும் அமைதியும் கைகோத்து விளையாடும் அங்கே சேர்ந்து கொண்டது. இனி அதற்கு என்ன அக்கறை.

எல்லாம் ஒன்று! அப்போது அது? அதனுள் ஒன்று. சர்வ அத்வைதமான சேர்க்கையில் இனி அது துவைதமாகி விடப் போவதில்லை. இது நிச்சயம். ஏனெனில் இனி அது நான் அல்ல.அப்போது நான்என்பது என்ன?

* * *

அதை நான் தேட முடியாது. சொல்லவும் முடியாது.

ஊழியூழியாகத் தேடினும் நான் அகப்படப் போவதில்லை. எல்லையற்ற கால சமுத்திரத்துள் பெரிதாய் - சிறிதாய் - குறுணியாய் - அணுவாய் - எதுவுமற்ற ஒன்ருய் ஆகிவிட்ட பின் எதுவென்ற ஆராய்ச்சி பயனற்ற ஒன்றுதானே.

'ஹென்ற்லி'
உடை அலங்காரத்தின்
உன்னத அடையாளமாகும்

ஹென்ற்லி

★ சேட்
★ காற்சட்டை
★ ஷோட்ஸ்

ஹென்ற்லி சேட், காற்சட்டை, ஷோட்ஸ் ஆகியவற்றை அணியும் ஆடவரும், இளைஞரும் சௌகரியத்தை அனுபவிப்பதுடன் வசீகரமான தோற்றத்தையும் பெற்று அழகுடன் விளங்குகின்றனர்.

ஹென்ற்லி உடைவகையில் நீங்கள் எதைத் தெரிந்தெடுத்து வாங்கினுலும், அது கொடுத்த பணத்திற்கு நிறைந்த பெறுமதியாகும்.

ஹென்ற்லி (காமெண்ட்ஸ்) லிமிடெட்,
பழைய விமான நிலைய வீதி,
( Old Air Port Road )
இரத்மலானை.

# ஆத்மீக வளர்ச்சிக்கு பள்ளி வாசல்களின் உதவி

அனுராதபுரம்

"பள்ளிவாசல் இல்லையே என்ற பெருங்குறை இன்று நீங்குகிறது. கிராமப் பகுதியில் உள்ள மக்களுக்கு மதக் கடமைகளைச் சரிவரச் செய்ய முடியாமலிருக்கின்றது என்ற குறையும் இன்ருேடு தீர்ந்து விடுகிறது. மனிதவாழ்க்கையில் கடவுள் என்ற அம்சம் செய்யும் மகோன்னத உதவிகளை நாம் ஒவ்வொருவரும் மறந்து விடாமல், மதக் கொள்கையில் பரிபூரண நம்பிக்கை வைக்க வேண்டும்!" இவ்வாறு 20,000 ரூபாய் செலவில் அனுராதபுரத்துக்கருகில் உள்ள கம்பிரிகஸ்வவ என்ற முஸ்லிம் பகுதியில் கட்டப்பெற்ற புதிய பள்ளிவாசலைத் திறந்து வைத்துப் பேசுகையில் அல்ஹாஜ் சி. பி. முகம்மது குறிப்பிட்டார்.

அன்னரின் பெருமுயற்சியால் எழுந்த இப்பள்ளி வாசல் இப்பகுதியிலுள்ள மக்களின் முக்கிய தேவையைப் பூர்த்தி செய்கின்றது. திறப்பு விழாவின் போது, அனுராதபுரம் வை. எம். எம். ஏ. செயற்குழு உறுப்பினர் ஜனப் எம். ஏ. சுல்தான் பேசியதாவது:

"பள்ளிவாசல்களை வெறும் அலங்காரப் பொருள்களாகவும் இடங்களாகவும் நாம் கருதக்கூடாது. அவை ஆத்மீக வளர்ச்சிக்கு உதவும் புண்ணிய ஸ்தலங்கள் என்பது நம் எல்லோர் மனதிலும் இருக்கவேண்டியதாகும்"

முஸ்லிம் மத ஆசாரப்படி மௌலவி எம். எம். ஆலிம் சாயிபு முதற் தொழுகையை நடத்தினுர். பின்னர் கம்பிரிகஸ்வவ கிராமச்சங்கத் தலைவர் ஜனப் எஸ். எஸ். இஸ்மாயிலும், கிராம வளர்ச்சிச் சங்கக் காரியதரிசி ஜனப் யு. ஜமால்தீனும் பேசினுர்கள்.

பள்ளிவாசல் கட்டுவதற்குப் பொருளுதவியையும் மற்ற உதவிகளையும் அல்ஹாஜ் சி. பி. முகம்மது செய்திருந்தார்.

(ந. நி.)

**இயேசு கிறிஸ்து திருமணத்தைப் புகழ்ந்து விட்டுச் சொல்லளவில் அமைந்து நின்று விடவில்லை. கானாவூர்த் திருமணத்தில் தாமும் கலந்து கொண்டார்.**

# கிறித்தவத் திருமணம்

— பேராசிரியர் மு. சு. அருள்சாமி —

[தமிழ்த் துறைத் தலைவர், இலோயலாக் கல்லூரி, சென்னை]

[20-6-59 இதழின் தொடர்ச்சி]

அன்புள்ள உள்ளங்கள் இசைந்து ஒன்றாய்க் கலத்தலே திருமணம். இப்பேருண்மையை இயேசுபெருமான் அழகுபடக் கூறியிருக்கின்றார். "இருவரும் ஒரே தசையாய் இருப்பார்கள். ஆகவே அவர்கள் இனி இருவரல்லர்; ஒரே தசையாய் இருப்பார்கள்—மார்க்கு 10 : 8—9" என்னும் அழகுமொழியின் பொருள் ஆழத்தை ஆய்ந்து பார்க்கும்போதுதான் திருமணத்தின் உண்மைப்பொருள் தெரிகிறது. இருவேறு நெஞ்சங்கள் கலக்கின்றன. இருவேறு தசைகள்—உடல்கள் ஒன்றுகின்றன. ஆதலின் திருமணம் ஒரே நெஞ்சமாதல்—ஒரே உடலாதல்—ஒரே தசையாதலாகும். இக் கருத்தினை இலக்கியச்சுவை ததும்பக் கூறும் செந்தமிழ்ப் பாடலைக் காண்போம். நெஞ்சங்கலந்த நிலையில் தலைமகன் கூறுகின்றான். "என் தாய் யாரோ? உன் தாய் யாரோ! என் தந்தையும் உன் தந்தையும் எவ்வழியாலும் உறவல்லர். எனக்கும் உனக்கும் எவ்விதப் பழக்கமும் இல்லை. வானத்து மழைநீர் மண்மேல் பாய்ந்து கலந்தாற்போல அன்பு நிறைந்த நெஞ்சங்கள் தாமே கலந்தன." இப்பொருள் கலந்த பாடல் இது:

"யாயும் ஞாயும் யாரா கியரோ
எந்தையும் நுந்தையும் எம் முறைக் கேளிர்
யானும் நீயும் எவ்வழி அறிதும்
செம்புலப் பெயல்நீர் போல
அன்புடை நெஞ்சம் தாம் கலந்தனவே."

**குறுந்தொகை 40**

எப்படிக் கூறினோம்? என்ற வியப்பு தலைவன் உள்ளத்தில் தோன்றுகிறது. இறை கூட்டுவித்தார் என்ற உண்மையை உணர்கிறான். திருமணம் நெஞ்சக் கலப்பு. அது இறைவன் ஏற்பாடு. இறைவனே அன்பு பொங்கும் தலைவன் தலைவியரை இணைத்து வைக்கிறார். "இறைவன் இணைத்தவை மனிதன் பிரிக்காதிருக்கக் கடவன் (மக் 19 :—6)" என்னும் திருமொழி இறைவனுக்கு மக்கள் திருமணத்தின் மீதுள்ள அளவு கடந்த ஆர்வத்தைக் காட்டுகிறது. இறைவன் திருவுள்ளப்படி இசைந்த இரு உள்ளங்கள் கலப்பதற்கு யாவரும் துணைநிற்கவேண்டும். திருமணத்தில் உற்றார், பெற்றார், ஊரார் அனைவரும் செய்யத்தக்க பெரும்பணி இதுவே. உள்ளக்கலப்பின் அறிகுறியாய்த் தாலியோ, மற்றும் சடங்குகளோ அமையுமாயின் அவற்றைப் பாராட்ட வேண்டும். கலக்காத உள்ளங்களைக் கட்டும் தாலியால் இணைத்துவிட்டோம் என்றெண்ணுவது அறியாமை. பொற்றாலியைப் பக்தியோடு கட்டினாலுங்கூட உள்ளங்கள் ஒன்றா நிலையில் அது திருமணமல்ல. இந்நிலையில் திருமணம் ஊராரை ஏமாற்றும் வெளிப்பகட்டாகவே இருக்கும்.

## புனித விழா

ஒரு வீட்டில் திருமணம். ஊர்ச் சிறுவருக்கெல்லாம் கொண்டாட்டம். விளையாடலாம்; வேடிக்கை பார்க்கலாம்; நல்ல விருந்தும் கிடைக்கும் என்று நினைக்கிறார்கள். பேழையில் உறங்கிக்கிடந்த பொன்னணி, பட்டுடை பவனிவருவதற்குரிய நாள் என்று கருதுவர் மங்கையர். அவர் தம் மனத்தில் வரப்போகும் திருமணத்தில் வழங்கவேண்டிய விமரிசனம் பற்றிய ஆராய்ச்சி நிலவும். ஆனால் அவ்வூர்ச் சான்றோர்களோ திருமணத்தைப் பீடும் பெருமையும் நிறைந்த புனித விழாவாகக் கருதுகின்றனர். மணமக்கள் நூறு ஆண்டுப் பயிர். அவர் தம் வாழ்க்கை மலரவேண்டும். மண்ணும் விண்ணும் மணக்கும்படி அவர்கள் வாழவேண்டும் என்று ஆவலுறுகின்றனர். மணமக்களின் அருகே வந்து, இருந்து, இதயம் கனிவுற வாழ்த்துகின்றனர். "இறைவா இவர்கட்கு மங்கலம் நிறைந்த மணவாழ்வை அளியும்" என்று ஆண்டவனை வேண்டுகின்றனர். சான்றோர்கள் திருமணத்தின் பெருமையை இலங்கச் செய்கிறார்கள். இயேசுவின் அருள் வாக்கு திருமணத்திற்கு ஈடில்லாத பெருமையை அளித்துள்ளது. "திருமணம் யாவருக்குள்ளும் பெருமைகொண்டதாயும் மணமஞ்சம் அசுசிப்படாததாயும் இருக்கக்கடவது (எபிரேயர் 13:-4)" என்னும் திருநூல் (பைபிள்) மொழியை நோக்கும்போதுதான் இல்லறத்தை இழித்துக் கூறுவோருடைய பழிச்சொல்லின் புன்மை நன்கு விளங்குகிறது.

## கானாவூர் திருமணம்

இயேசு கிறித்து திருமணத்தைப் புகழ்ந்துவிட்டுச் சொல்லளவில் அமைந்து நின்றுவிடவில்லை. கானாவூர்த் திருமணத்தில் தானும் கலந்துகொண்டார். திருநூல் தரும் செய்தி படித்துப் பாராட்டுதற்குரியது. "மூன்றும் நாளில் கலிலேயாவில் உள்ள கானா ஊரில் திருமணம் நடந்தது. இயேசுவின் தாயாரும் அங்கே இருந்தாள். இயேசு தம் சீடரோடுகூட அத்திருமணத்திற்கு அழைக்கப்பட்டார். கொடிமுந்திரிச் சாறு (திராட்சை ரசம்) குறைந்து போனபோது, இயேசுவின் தாய் அவரைப்பார்த்து அவர்களுக்கு முந்திரிச்சாறு இல்லையென்றாள். இயேசு அவளிடம்: 'அம்மா எனக்கும் உனக்கும் என்ன? என்வேளை இன்னும் வரவில்லை' என்றார். அவர் தாய் பரிமாறுவோரைப் பார்த்து "அவர் உங்களுக்கு ஏதேதுசொல்லுகிறாரோ அதையெல்லாம் செய்யுங்கள்" என்றாள். யூதரின் தூய்மையாக்கும் முறைமைக்கிசைய ஆறு கல் தொட்டிகள் அங்கே வைக்கப்பட்டிருந்தன. ஒவ்வொன்றும் இரண்டுமூன்று குடம் தண்ணீர் பிடிக்கும். இயேசு தொட்டிகளைத் தண்ணீரால் நிரப்புங்கள் என்று அவர்களுக்குச் சொன்னார். அவர்கள் அவைகளை விளிம்புவரை நிரப்பினார்கள். அவர் அவர்களிடம், 'இப்பொழுது மொண்டு தலைமைப் பந்தியாளனிடம் (விசாரிப்போனிடம்) கொண்டுபோங்கள் என்றார். அவர்கள் கொண்டு போனார்கள். முந்திரிச்சாறாய் மாறின தண்ணீரைத் தலைமைப் பந்தியாளன் சுவைபார்த்தான். அது எங்கிருந்து வந்தது என்று அவனுக்குத் தெரியாது. அத் தண்ணீரை மொண்டுவந்து பரிமாறுவோருக்குத்தான் தெரியும். தலைமைப் பந்தியாளன் மணமகனை அழைத்து அவனிடம், "எந்த மனிதனும் முதலில் நல்ல முந்திரிச் சாற்றைப் பரிமாறி, மக்கள் நன்றாய்க் குடித்தபின் கீழ்த்தரமானதைப் பரிமாறுவான். நீரோ நல்ல முந்திரிச்சாற்றை இதுவரைக்கும் வைத்திருந்தீரே" என்றான். இயேசு கலிலேயாவில் உள்ள கானா ஊரில் புதுமைகளின் இத்துவக்கத்தைச் செய்தருளினார்; தம் மகிமையை வெளிப்படுத்தினார். அவருடைய சீடர் அவர்மீது நம்பிக்கை வைத்தனர்." இயேசு பெருமான் தம் முதற்புதுமையை நிகழ்த்தித் திருமணம் விண்ணும் மண்ணும் புகழும் பெருமை படைத்ததென்பதை உலகுக்கு உணர்த்தியுள்ளார்.

திருமணமும் பரிசும் இணைபிரியா இரட்டைப் பிறவிகள். நண்பர்க்குத் திருமணம் என்றால் நல்ல பரிசு அளிக்க வேண்டுமென்றுவிரும்புகிறோம். நண்பரின் இதயத்தைக் கவரும் எழில் மிக்க பொருளாக இருக்க வேண்டுமே என்றெண்ணி ஆய்ந்து எடுத்து ஏந்திச் செல்கிறோம். பெண்ணைப் பெற்றோர் மணமகன் வீட்டார் குறை கூற இடமின்றிச் சீர்வரிசைகளை வழங்கிவிட வேண்டுமே என்று கவலை கொள்கின்றனர். கையில் பொருள் இல்லையென்றாலும் கூட கடன் வாங்கியேனும் கொடுக்கும் பரிசுகளை குறைவின்றி அளிக்க விரும்பித் துடிக்கின்றனர். வாக்களித்த பட்டியல்படி வகை வகையாய்ப் பரிசுகளைக் கொண்டு வந்து இறக்குவார்களா? என்ற எண்ணத்தால் ஐயம் கலந்த அச்சம் அவர்தம் உள்ளத்தே நிலவுவதுமுண்டு. பலரும் பரிசு பற்றிப் பல்வேறு எண்ணங் கொள்கிறோம். உண்மையான திருமணப் பரிசு எதுவென்பதை மறந்து விட்டோம். ஆனால் இயேசு பெருமானின் அடியார் புனித சின்னப்பர் (புனி. பால்) இப்பரிசு பற்றிப் பேசியிருக்கிறார். மங்கை தன் மணாளனுக்காக வைத்துக் காத்திருக்கும் பரிசு பற்றிக் கூறியிருக்கிறார். அன்பு கனிந்ததும், களங்கமில்லாததுமான கன்னி இதயம் தாங்கிய கறை படாப் பொன்னுடலே காரிகை தன் கணவனுக்கு அளிக்கும் திருமணப் பரிசு. ஒழுக்கம் நிறைந்ததும் உறுதி வாய்ந்ததும் உயர் அன்பு பொங்குவதுமான உள்ளம் பொருந்திய மாசற்ற மணியுடலே மணவாளன் தன் மங்கைக்கு ஏந்திச் செல்லும் திருமணப் பரிசு. கொடுத்த பரிசைத் திருப்பிப் பெறுவார் உலகத்தில் இலர். திருமணத்திற்குப்பின் மனைவி உடலுக்கு உரிமை படைத்தவன் கணவனே. கணவன் உடல் உரிமை, காதல் மிக்க மனைவிக்கே உரியது. திருநூலில் இவ்வுண்மையைக் கண்டு மகிழலாம். "மனைவி தன் உடலுக்கு அதிகாரி அல்லள். கணவனே அதற்கு அதிகாரி. அப்படியே கணவனும் தன் உடலுக்கு அதிகாரியல்லன். மனைவியே அதற்கு அதிகாரி." (1 கொரிந்தியர் 7:4) இங்குக் கூறப்படும் திருமணப் பரிசிலுக்கு ஈடு உலகில் வேறு எதுவுமில்லை.

"பளபளவென்று மின்னும் பத்தரை மாற்றுப் பசும் பொன் அல்லோ என் மருமகள்; அவளது பூப்போன்ற பாதம் பூமியில் படவிடுவேனா?" என்று வாய்ப்பறை சாற்றுவாள் மாமி. மருமகள் வீட்டுக்கு வந்து மணிசிலவே ஆகிறது. என்றாலுங் கூட அன்னமென அடியெடுத்து வைக்கும் மருமகள் மீது பொறாமை பொங்கி "வேகமாக நடக்காதே மெல்லிய தரை அதிர்கிறதே, பொன் போன்ற தளம் கெட்டு விடுமே" என்று பக்குவமுறக் கூறுவாள் மாமி. அண்ணன் மனைவி—அழகான அண்ணிக்காகக் காத்திருப்பார்கள் உடன் பிறந்த பெண்கள். அண்ணிக்கு வேளைக்கொரு பட்டு உடுத்தி, விதவிதமாகக் கொண்டை போட்டு வகை வகையாய்ப் பூச்சூட்டி ஓவியம் போல் ஒப்பனை செய்து தங்கள் நடுவே உட்கார வைத்து அன்றாடம் ஆலாத்தி சுற்றி அகமகிழ வேண்டுமென்றுதான் எண்ணுவார்கள். அண்ணி வீட்டிற்குள் அடியெடுத்து வைத்ததும் அவர்கள் உள்ளத்தில் உள்ள அன்பு வெளியேறும். அங்குப் பொறாமை குடிபுகும். வஞ்சமில்லாத அண்ணனை மயக்கித் தன் மடிக்குள் வைத்துக் கொண்ட மாயக்கள்ளியாக மாறிவிடுவாள் முன்னாள் ஆருயிர் அண்ணி. இன்று வந்தவளுக்கு எம் வீட்டில் இவ்வளவு உரிமையா என்று எல்லாரும் பொருமுவர். இல்வாழ்க்கை இன்பச் சோலையாக இருக்குமென்று நினைத்தான் தலைவன். திரும்பிய பக்கமெல்லாம் சுருக்கென்று தைக்கும் முட்காடாக அது மாறிவிட்டதைக் கண்டு மனம் புழுங்குகிறான். எத்தனையோ இல்லங்களில் இணைந்த உள்ளங்களின் நிலை இத் துன்பநிலையாய் இருப்பதை நாம் காண்கிறோம். கலந்த நெஞ்சம்—ஒன்றிய ஒருடல் இனிமையுற வாழ்வதற்கு இடமளித்து நாம் சற்று விலகி நிற்க வேண்டும். "இக்காரணத்தால் கணவன் தன் தந்தையையும் தாயையும் விட்டுத் தன் மனைவியோடே இசைந்திருப்பான் (புனி மத்தேயு 19: -5) என்னும் திருநூல் மொழியை உணர்ந்து திருமணமானபின் மணமக்கள் இணைந்து நல்லின்பம் பொருந்த வாழும்படி தனித்த நல் வாழ்வளிக்க வேண்டியது பெற்றோர்கள் கடமை.

(தொடரும்)

**யாழ்ப்பாணம்**

**ஐக்கிய இலாப நிதி**

— 1918-ஆம் ஆண்டு தாபிதமானது —

**வங்கிக்காரர் மூலநிதி 8 லட்சம் ரூபா.**

**இதுவரையிற் கொடுக்கப்பட்ட பங்குப்பணம் ரூபா 616313,00**

**100 ரூபா விகிதமான 8000 பங்குகள்**

**பங்குப்பணங்கட்டுமுறை**

மாதமொன்றுக்கு 1 ரூபா விகிதமாக 80 மாச காலத்திற்கு மாசந்தோறும் கட்டப்படவேண்டியது. குறித்த காலமுடிவில் பங்கொன்றுக்கு ரூபா 100-00 திருப்பிக் கொடுக்கப்படும். பங்குகள் எந்தநேரமும் வாங்கலாம்.

**தினசரிப் பற்றுவரவு**

எச்சநிதி சராசரி 500 ரூபாவுக்குக் குறையாமல் இருக்குமானால் ஒருவிகித வட்டியுடன் தினசரிப் பற்றுவரவு செய்யலாம்.

**தவணை வரையறுக்கப்பட்ட க்ஷேமப்பணம்**

க்ஷேமப்பணம் 12 மாசம், 36 மாசம் என்னும் காலங்கள் வரையறுத்து ஏற்படும் வட்டியும் முறையே 6 விகிதமும் 8 விகிதமுமாகக் கொடுக்கப்படும்.

**உண்டியல்கள்**

கொழும்பிலுள்ள 'நாஷனல்' வங்கியிலும் 'இம்பீரியல்' வங்கியிலும், இந்தியாவிலுள்ள பிரதான பட்டினங்களிலும் மாற்றத்தக்க விதமாகக் கொடுக்கப்படும். தொடுவாய் இராச்சியப் பகுதியிலுள்ளவர்களுக்குக் கொடுக்கவும்வாங்கவுமான விசேஷ ஒழுங்குகள் செய்யப்பட்டிருக்கின்றன.

**கடன்**

நகைகள் ஈடு வைத்துக்கொண்டு கடன் கொடுக்கப்படும். முதலையும் பாகமாகக் கொடுக்கலாம்.

**இன்னும் வேண்டிய விபரங்களை என்மூலமாக அறிந்துகொள்ளலாம்.**

**எஸ். கனகசபை**
சிறாப்பர்

Std. 14.

II

வடமராட்சி மாதிரிகடலேரித்திட்டம் நடைமுறையில் இருந்து நான்கு வருடங்களானதும் 1923 இல் கேள்விக்கொத்துமூலம் அபிப்பிராயம் திரட்டப்பட்டது. திட்டத்தை ஆதரிப்பவரின் எண்ணிக்கை மிக அதிகமாக இருந்தது. கரவெட்டி கிழக்கு, துன்னாலை தெற்கு போன்ற இடங்களில் பல புதிய இடங்கள் நெல்வயல்களாக்கப்பட்டன. விளைச்சலின் அளவு பல இடங்களில் அதிகரித்திருந்தது. கோடைகாலத்தில் ஆடு மாடுகள் கடலேரி நீரைக் குடிக்கக்கூடியதாக இருந்தது. கடற்கரையோரப் புல்வெளிகளில் புல் செழித்து வளரத்தொடங்கின. சிலர் தமது கிணற்றுநீர் நன்நீராகி விட்டதெனவும் கூறினர்.

இத் திட்டத்தினால் பல நன்மைகள் ஏற்பட்டமையால் ஏனைய கடலேரிகளிலும் இத் திட்டத்தை மேற்கொள்ளலாம் என்ற கொள்கை உறுதியடைந்தது.

1930ஆம் வருட அளவில் யாழ்ப்பாணக் கடலேரிகளை நன்னீரேரிகளாக்கும் திட்டம் கட்டாயமாக நடைமுறைக்குக் கொண்டுவரப்படவேண்டும் என சட்ட நிரூபண சபையில் உறுப்பினராக இருந்தவரும் பருத்தித்துறை பிரமுகருமான காலஞ்சென்ற திரு. கே. பாலசிங்கம் வற்புறுத்தினர்.

### 'வெப்' அறிக்கை

யாழ்ப்பாணக் குடாநாட்டுக் கடலேரித் திட்டத்தை விவரமாக ஆராய்ந்து அறிக்கை சமர்ப்பிப்பதற்கு நியமிக்கப்பட்ட பெரும்பிரிவு நீர்ப்பாசன எஞ்சினியரான திரு. எவ். ஆர். கி. வெப் 1945 இல் தமது விரிவான அறிக்கையை வெளியிட்டார். இதன்பின்பு யாழ்ப்பாணக் கடலேரித்திட்டத்துக்கு "பாலசிங்கம்—வெப் திட்டம்" என்ற பெயருங் கிடைத்தது.

இலங்கை அபிவிருத்தித் திட்டம் 4

# யாழ்ப்பாணக் கடலேரி: அணைக்கட்டு வேலைகள்

**யாழ்ப்பாணக் குடாநாட்டுக் கடலேரித் திட்டத்தை விபரமாக ஆராய்ந்து அறிக்கை சமர்ப்பிப்பதற்கு நியமிக்கப்பட்ட பெரும்பிரிவு நீர்ப்பாசன எஞ்சினியரான திரு. எவ். ஆர். கி. வெப் 1945-இல் தமது விரிவான அறிக்கையை வெளியிட்டார்.**

வ. மகாதேவன்

'வெப்' அறிக்கையில் யாழ்ப்பாணக் கடலேரிகள்பற்றிக் கொடுக்கப்பட்டிருந்த சில புள்ளிவிபரங்கள்பின்வருமாறு:

கடலேரிகளின் பரப்பளவு:
வடமராட்சிக் கடலேரி 30 சதுரமைல்.
உப்பாறு 10 சதுரமைல்.

நீரேந்து பரப்பின் அளவு:
வடமராட்சிக் கடலேரி 115 சதுரமைல்.
உப்பாறு 85 சதுரமைல்.


கடலேரியைச் சூழ்ந்திருக்கும் பயிரிடப்படாத நிலத்தின் பரப்பு 17.15 சதுர மைல் அல்லது 10,967 ஏக்கர்.

நீரேந்து பரப்பில் பயிரிடப்படும் நிலத்தின் பரப்பளவு 30.03 சதுர மைல் அல்லது 20,500 ஏக்கர்.

**நில உபயோக விபரம்:**

1. ஏறத்தாழ 25,000 ஏக்கர் பிரதேசத்தில் வருடத்தில் அதிக மாதகாலத்திற்கு உப்பு நீர் பரந்திருப்பதால் உப்பு எடுப்பதற்கும் குறைந்ததர மீன்பிடித் தொழிலுக்குமே பயன்தரக்கூடியதாக இருக்கின்றது.

2. சுமார் 11,000 ஏக்கர் பிரதேசம் காலத்துக்குக்காலம் உப்புநீரால் ஆழ்த்தப்படுவதால் ஒரு உபயோகமும் இன்றி இருக்கின்றது.




3. சுமார் 20,000 ஏக்கர் பிரதேசம் நெல்விளை நிலமாக இருக்கிறபோதிலும், உப்பு நீரால் பாதிக்கப்படுவதாயும், விளைச்சல் குறைவானதாயும் இருக்கின்றது.

கடல்நீர் கடலேரிக்குள் புகாமல் அணைகள் கட்டப்பட்டால் மேலே 1இல் குறிப்பிடப்பட்டுள்ள நிலம் நன்னீரேரியாகவும், 2இல் குறிப்பிடப்பட்டுள்ள நிலம் விளைநிலமாகவும், 3இல் குறிப்பிடப்பட்டுள்ள நிலம் உப்புநீரால் பாதிக்கப்படாத நிலமாகவும் கூடிய விளைச்சலைக் கொடுக்கும் நிலமாகவும் மாறிவிடும் என திரு. வெப் தமது அறிக்கையில்கூறினர்.

### குடாநாட்டில் திட்ட வேலைகள்

வடமராட்சிக் கடலேரியை நன்னீரேரியாக மாற்றுவதற்கு அணைகள் கட்டும் வேலைகள் 1947 இல் ஆரம்பமாகி 1953 இல் முடிவடைந்தன. தொண்டைமானாற்றில் கட்டப்பட்டுள்ள 613 அடி நீளமான அணைக்கட்டில் 200 அடி கொங்கிறீற்றினால் கட்டப்பட்டுள்ள மேலதிக நீர் வடியும் அணையாகவும் (Spillway Dam) எஞ்சிய 413 அடி நீளமான பாகத்தில் 18 மதகுக் கதவுகளும் பொருத்தப்பட்டிருக்கின்றன. வடமராட்சிக் கடலேரியை உப்பாற்றிலிருந்து பிரிக்கும் ஒரு அணையும் கட்டப்பட்டது. வடமராட்சிக் கடலேரித் திட்டத்தினால் சுமார் 15,000 ஏக்கர் விளைநிலமாக்கப்படும்.

உப்பாற்றை நன்னீரேரியாக்குவதற்கு அரியாலைப் பாலத்தின் கீழும் கடல்நீர் புகாமல் ஒரு அணை கட்டப்பட்டிருக்கின்றது.

### ஆனையிறவுக் கடலேரித் திட்டம்


பிரதி நீர்ப்பாசன அதிபதியாக இருக்கும் திரு. எஸ். ஆறுமுகம் 1954 ஒக்டோபரில் எழுதிய ஒரு கட்டுரையில் ஆனையிறவுக் கடலேரித்திட்டம் பற்றிய விபரங்களை வெளியிட்டார். சுமார் 14,400 ஏக்கர் விஸ்தீரணமுள்ள ஆனையிறவுக் கடலேரியினுள் கனகராயன் ஆறு, நெதலி ஆறு, தெரேலின் ஆறு போன்ற நதிகள் பாய்கின்றன. ஆனையிறவுப் பாலத்தின் கீழும் கிழக்கே சுண்டிக்குளத்துக்கு அண்மையிலும் அணைகள் கட்டி கடல்நீரைத் தடைசெய்து ஆனையிறவுக் கடலேரியை நன்னீரேரியாக்கலாம். கிழக்கே அமைக்கப்படும் அணை ஒன்றேகால் மைல் நீளமானதாகவும் மேற்பாகத்தில் ஒருமோட்டார் வீதியை உடையதாகவும் இருக்கும்.

அதன்பின்பு ஆனையிறவுக் கடலேரியை வடமராட்சிக் கடலேரியோடு ஒரு கால்வாய் மூலம் இணைக்கலாம். இக் கால்வாய் மான்தலைப் பிள்ளையார் கோவில் அண்மையாக முள்ளியான்வரை செல்லும். இதனால் ஆனையிறவுக் கடலேரியை நன்னீரேரியாக்குவதற்குப் பயன்படும். கனகராயன் நதியின் பெருக்கு நீர் வடமராட்சிக் கடலேரியின் நீரை நன்னீராக்குவதற்கும் உதவும். இப்படியாக இணைக்கப்பட்டதும் கனகராயன் ஆற்றுநீர் தொண்டைமானாறுவழியாகவும், அரியாலை வழியாகவும் கடலை அடையும். இத்திட்டம் இப்பொழுது எந்த நிலையில் இருக்கிறதென்பது தெரியவில்லை.

(15ஆம் பக்கம் பார்க்க)

கோழிப் பண்ணை பயன்தர
லே அன்ட் பிறே ஸ்தாபனத்தாரால்
அளிக்கப்படும் தானிய உணவுவகைகளை ஊட்டுங்கள்

இ



பிணியால் அவைகள் காக்கப் படுவதற்கு உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் தேர்ந்த வைத்தியர்களால் கண்டு பிடிக்கப்பட்ட மருந்து வகைகள் உண்டு.

இ

Ley & Frey

T' Phone: 2751, P. O. Box: 944, T' Gram: "EDRAJ"

கோழிப்பண்ணை, மந்தை வளர்ப்பு ஆகிய உயிரினங்களை ஊட்டி வளர்க்கும் துறையில் பிரபலமடைந்த வியாபாரிகள்.

உடனே எழுதுங்கள், விலைப்பட்டியல் அனுப்பி வைக்கப்படும்.

கிளை: ஸ்ரான்லி ரேட், யாழ்ப்பாணம்.

தலைமைக்காரியாலயம்: 65, ஆட்டுப்பட்டித் தெரு, கொழும்பு.

கண்ணோட்டம் 8

# ஓர் அவசர தேவை

வளர்ந்துவரும் ஒரு நகரத்துக்கு முக்கியமான தேவைகள் பல. ஒரு பட்டினத்திற்கு அவசரம் வேண்டியவை யாவை என்று ஒருவரைக் கேட்டால், அவர் உடனே, 'பொலீஸ் நிலையம், தபாற்கந்தோர், நூல்நிலையம்' இப்படி அடுக்கிக் கொண்டே போவார். ஆனால், ஒன்றைமாத்திரம் இவ்வளவு இலகுவாகக் கூறிவிடமாட்டார். அதுதான் தீயணைக்கும் படை (பயர் பிறிகேட்).

ஒரு நகருக்கு ஒரு பொலீஸ் நிலையம் எவ்வளவு அவசியமோ, ஒரு நூல்நிலையம், ஓர் ஆஸ்பத்திரி எவ்வளவு அவசியமோ அவ்வளவு அவசியமானது ஒரு தீயணைக்கும் படையும். இதனை யாழ்ப்பாணம் இன்னும் தெரிந்துகொண்டதாகத் தெரியவில்லை. எத்தனையோ முன்னேற்றங்கள் நடைபெற்றுவரும் யாழ்ப்பாணப் பட்டினத்திலே ஒரு தீயணைக்கும் படையோ, அல்லது தீயணைக்கும் யந்திரமோ இல்லாதிருப்பது பெரியஅதிசயமே.

யாழ்ப்பாண நகரம் மற்றைய நகரங்களைப்போல் கட்டட நாகரிகத்தில் முன்னேறவில்லை. இன்னும் எங்கள் நகரத்தில் கிடுகுவேலிகள் சூழ்ந்த வீடுகள் இருக்கத்தான் செய்கின்றன. நகரத்தின் எல்லைக்குள்ளேயே அதிகமான கிடுகு வேலிகளை இன்றும் நாம் காண்கின்றோம். இந்தச் சூழ்நிலையில் ஒரு சிறு நெருப்பும் பெருநெருப்பாகக் கூடிய அபாயம் நம்மிடையே நிலவிவருகின்றது. ஆறு பெருக முன்னமே அணைகட்டிவிடுவதுதான் விவேகமான செயலாகும. அதுபோலவே, எந்நேரமும் நேரக்கூடிய இந்த அபாயத்தை நீக்குவதற்கு, நகரத்திலே ஒரு தீயணைக்கும் படை நிறுவப்படவேண்டியது அவசியமாகின்றது.

இவ்விஷயம்பற்றி யாழ்ப்பாணம் மாநகரசபையோ அல்லது பொதுமக்களோ இதுவரை தீவிர ஆர்வம் காட்டாதது வியப்பை உண்டாக்குகின்றது. ஆனால், கடந்த வகுப்புவாதக் கலவரங்களின்போது இந்நகரில் நடந்த சம்பவங்கள் எங்கள் ஞாபகத்தைவிட்டு இன்னும் மறையவில்லை. யாழ்ப்பாணத்தில் அந்நேரம் பலவிடங்களில் அக்கினிதேவன் விஜயம் செய்திருந்தான். ஆனால், நல்ல காலம்! அவன் தன்னுடைய வேலையைத் தெருவிலேயே செய்துகொண்டான். அக்கம் பக்கத்திலுள்ள வேலிகளில் அத்தீ பிடித்து எங்கும் பரவியிருந்தால், என்ன நேர்ந்திருக்கும் என்பதை நாம் கூறத் தேவையில்லை. ஆனால், ஒரு தீயணைக்கும் படை மாநகரசபையிடம் அந்நேரத்தில் இருந்திருக்குமாயின் அது உடனேயே அத்தீயைப் பரவவிடாமல் அவித்துவிடும்.

இனிமேலாவது அரசினரும் பொதுமக்களும் இவ்விஷயத்தில் அக்கறை காட்டவேண்டும். இலங்கையின் முக்கிய நகரங்களில் ஒன்ருன யாழ்ப்பாணப் பட்டினத்தில் தீயணைக்கும் படை இல்லாதிருப்பது, நம் நகரத்திற்கு ஒரு இழுக்காகும். இதுவிஷயமாக, மாநகரசபையும் பொதுமக்களும் தீவிர முயற்சிசெய்து அதிவிரைவிலேயே யாழ்ப்பாணப் பட்டினத்துக்கு ஒரு தீயணைக்கும் படையை நிறுவவேண்டும்.

# வடமாகாணத்தில் கம்யூனிஸ்ட் கட்சி

## வளர்ச்சி அடைந்து வருகிறதாம்

### காங்கேசன்துறை, சங்கானை இவ்விடங்களில் கம்யூனிஸ்ட் நிர்வாகம்

## இலங்கையில் 'பாஸிஸ' எதேச்சாதிகார ஆட்சி ஏற்படலாமென்று எச்சரிக்கை

**இலங்கையில் கம்யூனிஸ்ட் கட்சி தோன்றி 16 ஆண்டுகள் ஆகின்றன. இதை முன்னிட்டு அக்கட்சியின் "போர்வர்ட்" பத்திரிகையின் விசேஷ மலரில் கட்சியின் வளர்ச்சி, செல்வாக்கு, பலம், நோக்கங்கள் என்பன குறித்து விளக்கி வெளியாகியுள்ள விபரங்களின் சுருக்கம் இது:-**

"எம். ஈ. பி. கூட்டு அரசாங்கம் குலேந்துவிட்டது. இப்போது அரசாங்கத்தில் வலதுசாரிகளே ஆதிக்கம்வகிக்கிறார்கள். அவர்களை முறியடிக்க, கம்யூனிஸ்ட் கட்சியைப் பலப்படுத்துவதுடன் மற்ற முன்னேற்ற சக்திகளுடன் நெருங்கி ஒத்துழைக்கவேண்டியது அவசியமாகும்.

"பிற்போக்குச் சக்திகளை நாம் முற்றாகத் தோற்கடிக்காவிடில், இலங்கையிலே ஒரு சர்வாதிகார 'பாஸிஸ்ட்' ஆட்சி ஏற்படலாம். ஏகாதிபத்திய, இராணுவ, பொருளாதார ஆதிக்கத்துக்கு நாம் உட்படக்கூடிய ஆபத்து ஏற்படலாம். பாகிஸ்தான், தாய்லந்து, ஈரான் முதலிய பல நாடுகளிடமிருந்து நாம் பாடம் கற்கவேண்டும்" என்றிவ்வாறு இலங்கை கம்யூனிஸ்ட் கட்சியின் தலைவரான டாக்டர் எஸ். ஏ. விக்கிரமசிங்க, தங்கள் கட்சியின் 16ஆவது ஆண்டு நிறைவு சம்பந்தமாக வெளியாகியுள்ள "போர்வேர்ட்" என்ற பத்திரிகையின் விசேஷ மலரில் குறிப்பிட்டிருக்கின்றார்.

### திரு. பீட்டர்கெனமன்

அம் மலரில் காரியதரிசி திரு. பீட்டர் கெனமன் எழுதியதாவது:

"1940ஆம் வருஷத்திலே இடதுசாரி இயக்கத்தில் முதல் முதலாகப் பிளவு ஏற்பட்டதிலிருந்து எல். எஸ்.எஸ். பி. கட்சி டிராட்ஸ்கீய பாதையைப் பின்பற்றியது. அதில் பலநெருக்கடிகளும் பிளவுகளும் ஏற்பட்டதுடன், அதன் அரசியல் தன்மையும் மாறியது.

தொழிலாளரின் இலட்சியங்களை சமசமாஜக் கட்சி பிரதிபலிக்கவில்லை. சமதர்ம தேசங்கள்மீதும் சர்வதேச கம்யூனிஸ்ட் இயக்கத்தின்மீதும் விரோத மனப்பான்மை காட்டுகின்றது. உலகத்திலே சமதர்மம் வெற்றிகரமாக முன்னேறி வருகையில், அப் பாதையிலிருந்து இலங்கைத் தொழிலாளரைப் பிரித்து, பிரபுத்துவ ஜனநாயகத்துக்கு அடிபணிந்து, பிற்போக்குச் சக்திகளுக்குத் தூபம் போடுகின்றது" என்கிறார்.

கம்யூனிஸ்ட் கட்சியோ, இலங்கையிலே அந்நிய முதலாளித்துவ சுரண்டல்களை அம்பலப்படுத்தி, அதை எதிர்த்துப் போராடியுள்ளது. கிராமங்களில் ஜாதிக்கொடுமையை எதிர்த்தும்ஜனநாயகத்துக்காகவும் போராடியதால், ஏழைகளும், தாழ்த்தப்பட்டவர்களும் கம்யூனிஸ்ட் கட்சியை அதிகமாக ஆதரிக்கிறார்கள்.

பல ஸ்தலஸ்தாபனங்களிலே கம்யூனிஸ்டுகள் தலைவர்களாகத் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். இக் கட்சி பலமடைந்து வருவதற்கு இது ஓர்அத்தாட்சி. பெர்ஸி விக்கிரமசிங்க, ஸிஸில் டி சில்வா: டேவிட் சொய்ஸா, எஸ். ஜயசிங்கம், ராலி பெர்ணண்டோ, எஸ். முத்தையா, டாக்டர் எஸ். வி. சீனிவாசகம், பி. ஜே. ஜயவர்த்தன, நிமல் டி ஸில்வா, எச். பி ஜினதாச முதலியவர்கள் ஸ்தலஸ்தாபனத் தலைவர்களாகத் தொண்டாற்றி, கம்யூனிஸ்டுகள் பொதுஜனப் போராட்டத் தலைவர்கள் மட்டுமன்றி திறமைமிக்க நிர்வாகிகள் என்பதையும் காட்டியிருக்கின்றார்கள்.

முன்னேற்றச் சக்திகள் வெற்றிபெறக் கம்யூனிஸ்ட் கட்சியைப் பலப்படுத்த வேண்டும். இதற்காகக் கட்சியின் 16 வது ஆண்டு விழாவைக் கொண்டாட, "கட்சியைப் பலப்படுத்தும்" இயக்கத்தை முதற்படியாக ஆரம்பித்து இருக்கிறோம்" என்று அவர் குறிப்பிட்டுள்ளார்.

### வடமாகாணத்தில்

வடமாகாணத்திலே 1947-ம் வருஷந்தான் இக்கட்சி ஆரம்பிக்கப்பட்டது. என்றாலும் கட்சி வெகு சீக்கிரத்தில் வளர்ந்துள்ளதாக வடமாகாணக் கட்சிக் காரியதரிசி ஐ.ஆர். அரியரத்தினம் எழுதியுள்ள ஓர் கட்டுரையிற் குறிப்பிடுகின்றார்:

"ஏழு அங்கத்தவர்களுடன் தான் கட்சி ஆரம்பிக்கப்பட்டது. என்றாலும் பி. கந்தையாவைப் பருத்தித்துறைத் தொகுதிக்கு அபேட்சகராக நிறுத்தி 3000 வாக்குகளைப் பெற முடிந்தது. சிறுபான்மைத் தமிழர்களின் ஆதரவு எங்களுக்கு அதிகம் இருக்கிறது.

சுருட்டுத் தொழிலாளர் சங்கம், ஸ்தலஸ்தாபன தொழிலாளர் சங்கம் முதலிய தொழிற் சங்கங்களை அமைத்துத் தொழிலாளர் போராட்டங்கள் பலவற்றை நடத்தினோம். மரவரி முறையை நீக்காமற் தடுக்கத் தீவெங்கும் கிளர்ச்சி செய்தோம்.

1954 ஆம் ஆண்டில் யாழ்ப்பாணம் மாநகரசபையில் முதல் கம்யூனிஸ்ட் அங்கத்தவராக எம். கார்த்திகேசன் தெரிவு செய்யப்பட்டார். 1953 ஆம் வருஷ 'ஹர்த்தால்' எங்கள் பலத்தைப் பெருக்கியது. யு. என். பி. யுடன் வகுப்புவாதத் தலைவர்கள் ஒத்துழைப்பதால் தமிழ்த் தொழிலாளருக்கு எவ்வித சலுகையும் கிடைக்க முடியாதென்பது, அரிசி விலை உயர்த்தப்பட்டதிலிருந்து தெளிவாயிற்று. பொதுப் போராட்டத்திலே குடாநாட்டுத் தொழிலாளர், சிங்களத் தொழிலாளருடன் சேர்ந்தனர்.

தொழிலாளரைப் பிளவுபடுத்தக் கொத்தலாவலை ஆட்சி, மொழிப்பிரச்சினையைக் கிளப்பியது. மொழிக்கிளர்ச்சியால் ஏற்பட்ட வகுப்புவாதத்தை எதிர்த்துப் போராடினோம்.

1954 ஆம் வருடம் நடந்த பிரதேச மகாநாட்டில், பிரதேச சுயாட்சி அளிக்கப்படவேண்டுமென்றும் அதுவே பிரச்சினையைத் தீர்க்கச் சரியான வழியென்றும் செய்யப்பட்ட தீர்மானத்தையே அடுத்த கம்யூனிஸ்ட்கட்சி காங்கிரசும் நிறைவேற்றியது.

1954 முதல் முன்னேற்றம் துரிதமாயிற்று. சிறுபான்மை தமிழர் மகாசபையில் தீவிர பங்குபற்றி, சமூக அநீதிகளையும் பொருளாதார அநீதிகளையும் எதிர்த்தோம். இன்று சிறுபான்மைத் தமிழர்களிடையே முக்கிய அரசியல் கட்சியாக இருக்கின்றோம்.

பொருளாதார நெருக்கடிகளும், வேலையில்லாக் கஷ்டமும் அதிகரித்ததால், தொழிலாளரிடையும், விவசாயிகளிடையும், வாலிபர்களிடையும் எங்கள் செல்வாக்கு அதிகரித்தது. தொழிற்சங்கங்கள் பல அமைக்கப்பட்டதுடன், கம்யூனிஸ்ட் வாலிபர் சங்கமும் பல இடங்களில்ஏற்பட்டன.

1956-ம் வருஷம் திரு. பி. கந்தையா பருத்தித்துறைத் தொகுதியில் எம். பியாக வெற்றி பெற்றார். எங்கள் 4 அபேட்சகர்கள், 30 ஆயிரம் வாக்குகளுக்கு மேல் பெற்றனர். மக்களை வகுப்புவாதம் பிளவுபடுத்தாமல் நாங்கள் தடுத்து வருகின்றோம்.

பல ஸ்தல ஸ்தாபனங்களில் கம்யூனிஸ்ட் அங்கத்தவர்கள் உள்ளனர். வவனியாவில் சுந்தரலிங்கத்தையும், சமஷ்டிக் கட்சியையும், எஸ். எம். யூசுப் தோற்கடித்தார். இரு சபைகளில் கம்யூனிஸ்ட் 'மெஜாரிட்டி' இருக்கின்றது. காங்கேசன் துறையில் டாக்டர் சீனிவாசகம் தலைவராக இருக்கின்றார். சங்கானையில் என். முத்தையா தலைவர்.

வட மாகாணத்தில் எங்கள் கட்சி வரவரப் பலப்படுமென்பதே எங்கள் கட்சியின் நம்பிக்கை" என்று அவர் குறிப்பிட்டுள்ளார்.

# கேரளத்தில் உருவாகும் நிலைமை

## மத்திய அரசாங்கம் தலையிடுமா?

கேரளத்துக்குப் பாரதப் பிரதமர் நேரு விஜயம் செய்ததைத் தொடர்ந்து கேரள முதலமைச்சர் திரு. நம்பூதிரிபாத் கல்விச்சட்டப் 11 ஆம் பிரிவைத் தற்காலிகமாக நிறுத்திவைத்து, சகல கட்சித் தலைவர்களையும் ஒரு மாநாட்டுக்கு அழைத்தார். இவருடைய அழைப்பைக் கேரள காங்கிரஸ், பிரஜா சோசலிஸ்ட் கட்சி போன்ற எதிர்க்கட்சிகள் நிராகரித்துவிட்டுத் தமது எதிர்ப்பு இயக்கத்தைத் தீவிரப்படுத்தி வருகின்றன. ஒத்துழையாமை, பொதுவேலை நிறுத்தம் முதலியன மேற்கொள்ளப்படுவதற்கான ஆயத்தங்கள் நடைபெறுகின்றன.

இராச்சிய எதிர்க்கட்சிகள் கேரள முதலமைச்சரின் அழைப்பை வெறும் கண்துடைப்பு எனத் தட்டிக் கழிக்காமல் மாநாட்டிற் கலந்துகொண்டு அது தோல்வியடைந்தால் எதிர்ப்பு இயக்கத்தை வலுப்படுத்தக் காரணங்கள் இருக்கின்றன. கேரள அரசாங்கம் ராஜிநாமாச் செய்யும்வரை எதிர்க்கட்சிகள் ஆர்ப்பாட்டங்களும் குழப்பங்களும் செய்து வரும் என்ற நிலை உருவாகியிருக்கின்றது. கேரள அரசாங்கம் ராஜினாமாச்செய்து பொதுத்தேர்தல் நடாத்துவதே கேரளச் சிக்கல்கள் தீர்வதற்கு வழியாகும் எனப் பிரதமர் நேருவும் இந்திய காங்கிரசின் மத்திய பாராளுமன்றச் சபையும் அறிக்கை வெளியிட்டிருக்கின்றார்கள்.

### துப்பாக்கிப் பிரயோகம்

செரியத்துராவில் 3-7-59 இல் பொலிசார் துப்பாக்கிப் பிரயோகம் செய்ததன் விளைவாக மூவர் இறந்தனர்; நால்வர் காயமடைந்தனர். இதற்குமுன் மூன்றுமுறை அங்கமாலி, புல்லுவிலா, கொச்சுவெளி ஆகிய இடங்களில் நிகழ்ந்த துப்பாக்கிப் பிரயோகங்களில் 12 பேர் இறந்து .36 பேர் காயமடைந்தனர். 4-7-59 இல் பெண்களும் எதிர்ப்பு இயக்கங்களில் தீவிரமாக ஈடுபட்டனர். நிலைமை மேலும் மோசமடைந்து மத்திய அரசாங்கம் தலையிட வேண்டி ஏற்படுமா? கேரள காங்கிரஸ் இந்நிலைமையை உருவாக்குவதற்காகவே உழைத்து வருகிறது என கேரள முதல் அமைச்சர் குறை கூறியிருக்கின்றார். கேரள காங்கிரசின் நடவடிக்கைகளை இராஜாஜி, தேஷ்முக், கட்கில் போன்ற பிரமுகர்கள் கண்டித்திருக்கின்றனர்.

## இந்தியா

### வெள்ளப்பெருக்கு

அஸ்ஸாம் இராச்சியத்திலும், காஷ்மீர் இராச்சியத்திலும் வெள்ளப்பெருக்கினால் பெருஞ்சேதம் ஏற்பட்டுள்ளது. பலர் உயிர்நீத்துள்ளனர். மேற்குப் பாகிஸ்தானிலும் கிழக்குப் பாகிஸ்தானிலும் வெள்ளப் பெருக்கினால் பெருநஷ்டம் ஏற்பட்டுள்ளது எனச் செய்திகள் கூறுகின்றன.

### இந்திய உபஜனாதிபதி

உபஜனாதிபதி டாக்டர் இராதாக்கிருஷ்ணன் பிலிப்பைன் தீவுகள், ஐக்கிய அமெரிக்கா, மேற்கு ஜேர்மனி ஆகிய நாடுகளுக்கு விஜயம் செய்வதற்காக 4-7-59 இல் புறப்பட்டார். 6-7-59 இல் பிலிப்பைன் தீவுகளின் தலைநகராகிய மணிலாவுக்கு வந்துசேர்ந்தார். இவருடைய சுற்றுப்பிரயாணம் முடிவடைய மூன்று வாரங்கள் செல்லும் எனத் தெரிகிறது.

# ஈழத்துக்கும் தமிழகத்துக்கும் கலாசார இணைப்பு

## குழந்தைக்கவிஞருக்கு யாழ்ப்பாணத்தில் வரவேற்பு

— நமது நிருபர் —

எதிர்கால உலகத்தை நிர்மாணிக்கும் சிற்பிகள் இன்றைய குழந்தைகளே. இவர்களின் ஆக்கத்துக்காக உழைத்து வரும் குழந்தைக் கவிஞர் திரு. அழ. வள்ளியப்பா அவர்களை எழுத்தாளர்கள், கலைஞர்கள், இரசிகர்கள் சேர்ந்து வரவேற்ற வைபவம் சென்ற செவ்வாய்க்கிழமை 7-7-59 மாலை வண்ணை வைத்தீஸ்வர வித்தியாலய மண்டபத்தில் நிகழ்ந்தது.

யாழ்ப்பாண மாவட்ட அதிபதி திரு. எம். ஸ்ரீகாந்தா தலைமையில் ஆரம்பமான இவ்வைபவத்தில் வரவேற்புரை நிகழ்த்திய வித்தியாலய அதிபர் திரு. ச. அம்பிகைபாகன் கவிஞர் அழ. வள்ளியப்பாவின் குழந்தை இலக்கிய சேவையைப் பாராட்டியதுடன், ஈழநாட்டு அறிஞர்கள் எவ்வகையில் தமிழின் மறுமலர்ச்சிக்குத் தொண்டாற்றினர் என்பதுபற்றியும் சபையோர்க்கு எடுத்துக்காட்டினார்.

தலைவர் திரு. ஸ்ரீகாந்தா பேசுகையில் "பல பெரியார்களை வரவேற்று அன்னாரின் சேவைகளை வியந்து போற்றிய பெருமை எமக்குண்டு. ஆனால் குழந்தைகளின் அகக்கண்ணைத் திறந்து எதிர்காலத்தில் மாண்புடன் விளங்கச் செய்வதையே தனது ஒரே இலட்சியமாகத் தொண்டாற்றிவரும் திரு. அழ. வள்ளியப்பா அவர்களை வரவேற்பது மிகச் சிறப்பான ஒரு காரியமாகும். 1950ஆம் ஆண்டு குழந்தைகள் சங்கத்தை நிறுவி அதற்கு ஆக்கபூர்வமான தொண்டு செய்துவரும் கவிஞர் ஈழத்துக்கும் தமிழகத்துக்குமிடையே ஓர் கலாச்சார பாலத்தை ஏற்படுத்தியிருக்கிறார். இப்பாலத்தினூடே எதிர்காலத்தில் இரு நாட்டினரது இலக்கிய வளமும் பெருகும்" என்று குறிப்பிட்டார்.

" திரு. அழ. வள்ளியப்பா அவர்களுடைய ஆழ்ந்த புலமை பற்றி என்னால் கூறுவது சாத்தியமற்றது. ஆனால் ஒரு சில மணித்தியாலங்கள் அவருடன் பேச வாய்ப்புக் கிடைத்ததன் மூலம் அவரது குழந்தை உள்ளத்தை என்னால் ஓரளவு அறிந்துகொள்ள முடிந்தது. நாட்டின் ஜீவசக்தி குழந்தைகள் தாம் என்பதை அறிந்து அநேக கவிதைகளை யாத்து அவர்கள் பிஞ்சு நெஞ்சங்களை வளப்படுத்திய கவிமணியவர்களினால் இக் கவிஞர் புகழப்பட்டாரென்றால் இவரது ஆழ்ந்த புலமையை நாம் அளவிடலாகாது" இவ்வாறு ஆசிரியர் க. தி. சம்பந்தன் பேசுகையில் குறிப்பிட்டார்.

தனக்களித்த வரவேற்புக்கு நன்றி தெரிவித்துப் பேசுகையில் கவிஞர், அழ. வள்ளியப்பா பின்வருமாறு கூறினார்:

குழந்தைகளுக்கு ஒரு சிறு தொண்டு செய்தாலுமே உலகம் அதைப் பெரிதாகக் கொள்ளும். அமரராகிய கவிமணி அவர்களின் வாழ்த்தே என்னை இத்துறையில் ஊக்குவித்தது. அவர்களுடன் நெருங்கிப்பழகி அவரது கவிதைகளை ஊன்றிப் படித்து இத்துறையில் இறங்கினேன். என்னுடைய பாடல்களில் நல்லதுண்டானால் அது கவிமணி அவர்களை நான் வழிகாட்டியாகக் கொண்டமையால் ஏற்பட்ட பெறுபேறுதான்.

'பிள்ளைப்பாட்டு' என்னும் நூலை உங்கள் நாட்டைச் சேர்ந்த அறிஞர் திரு. கே.எஸ். அருணந்தி அவர்கள் 1935 ஆம் ஆண்டளவிலேயே ஆக்கிவிட்டார் என்றால் குழந்தை இலக்கியத்தின் வளர்ச்சிக்கு எங்களுக்கு முன்பே ஈழத்தறிஞர்கள் சிந்தித்துச் செயலாற்றிவிட்டார்கள் என்றுதான் கூறவேண்டும். ஆனால் இன்றுவரை இந்நூல் அதிகம் பேருக்குத் தெரியாதிருந்தமையே வருந்தக்கூடியதொன்றாகும். இதனைக் குழந்தைகள் நூல்களுள் ஒன்றாகக் கொள்ளல் அவசியம். இதுபோன்ற பணிகளைத் தொடர்ந்துசெய்து குழந்தை இலக்கியத்தை வளப்படுத்த வேண்டும்.

நெல்லியடியில் 8-7-59 நடைபெறவிருந்த குழந்தை எழுத்தாளர் கிளைச்சங்க விழாவிற் கலந்துகொள்ள முடியாமையால் நெல்லியடி குழந்தை எழுத்தாளர் சங்கத்தினர் சங்கத்தின் சார்பில் எழுதிய வரவேற்பிதழை இவ்வைபவத்திலேயே வழங்கினர்.

(15ஆம் பக்கம் பார்க்க)

# ஈழநாடு

யாழ்ப்பாணம், விகாரி ஆண்டு ஆனி மீ 27 உ (11-7-59)


## வரவு - செலவுத் திட்டம்

"ஆன முதலில் அதிகம் செலவானல் மானமழிந்து மதிகெட்டு ......" என்பது முதுரை.

சென்ற மூன்று ஆண்டுகளாக இலங்கை அரசாங்கம் வருமானத்தைவிட அதிகச் செலவே செய்துவருகின்றது. 1957—58 ஆம் வருஷத்தில் பதினைந்து கோடி ரூபாய் துண்டுவிழுந்தது. நடப்பு வருடத்திலே 48 கோடி ரூபாய். 1959—60 ஆம் வருடத்தில் 39 கோடி ரூபாய் துண்டுவிழுமென்று நிதிமந்திரி எதிர்பார்க்கின்றார்.

வெளிநாட்டு உதவிகள், கடன்கள், புதிய வரிகள் இவை மூலம் துண்டுவிழும் இத்தொகையைச் சரிக்கட்டலாம் என்று கூறப்படுகிறது. எதிர்காலத்தில் பலனும் லாபமும் அளிக்கக்கூடிய அபிவிருத்தித் திட்டங்களுக்காக அதிகச் செலவுசெய்வதாயின் பரவாயில்லை. ஆனல், புதிய அபிவிருத்தித் திட்டங்கள் எதுவும் காணேம். ஏற்கெனவே ஆரம்பித்த சில வேலைகளைத் தொடர்ந்து நடத்தவே உத்தேசித்துள்ளனர். நீர்ப்பாசனம், கைத்தொழில் இலாகாச் செலவுகள் பெரிதும் குறைக்கப்பட்டிருக்கின்றன.

புதிய அபிவிருத்தித் திட்டங்களை ஆரம்பிக்காததில் வியப்பெதுவும் இல்லை. அரசாங்கத்தின் ஆயுளே நித்திய கண்டமாக இருக்கிறது. ஆகவே, புதிய திட்டங்களை இது எப்படி ஆரம்பிக்கும்? ஆரம்பித்தாலும் அவற்றை நடத்திவைக்க முடியுமா? நிலைமையின் நெருக்கடியை உணர்ந்து புதிய திட்டங்கள் எதுவும் மேற்கொள்ளாமல் இருப்பது இயற்கையே.

அப்படியிருந்தும் வருமானத்தைவிடச் செலவுகள் மிகவும் அதிகமாகவுள்ளன. இராணுவம், போலிஸ் இலாகா செலவுகள் அதிகரிக்கின்றன. நாட்டில் கலவரங்களும் கிளர்ச்சிகளும் அதிகரிக்கும் என்று அரசாங்கம் எதிர்பார்த்து, இப்பாதுகாப்புகளைச் செய்கிறதுபோலும். இராணுவத்தில் 'பயனியர்' படைகளை அமைத்துள்ளதாற் செலவுகள் பெருகலாம். இலங்கையின் நிதிநிலைமை மோசமாக இருக்கையில், இவ்வித செலவுகளை அதிகரித்துக் கொண்டு போனல், முடிவு என்னவாகும் என்பதை விளக்கத் தேவையில்லை.

மதுவிலக்கைப் படிப்படியாக நடைமுறைக்குக் கொண்டுவரப் போவதாகக் கூறிய அரசாங்கம், சாராயம் மூலம் அடுத்த வருஷத்தில் ஒருகோடி ரூபாய் அதிகவருமானம் பெறவும், வெளிநாட்டுக் குடிவகைகளின் சுங்கவரிமூலம் அதிக தொகை பெறவும் திட்டமிட்டுள்ளது! பூரண மதுவிலக்கு வேண்டும் என்ற பௌத்த கமிஷன் அறிக்கையை நடைமுறைக்குக் கொண்டுவருவதாக உறுதிகூறிய அரசாங்கம், குடிபெருகுவதற்கும், அதன்மூலம் வருமானம் அதிகம் பெறவும் உத்தேசித்து இருப்பது அவ்வுறுதிமொழிக்கு நேர்மாறாகும். இதனல் நாட்டில் குழப்பங்களும் குற்றங்களும் பெருகக்கூடிய ஆபத்தும் உண்டு.

அதிக சோதனைகளுக்கிடையில் இந்த அரசாங்கம் நடக்கின்றது. அசாதாரண இந்நிலையில், இது "காவல் மந்திரி சபை"யாகவே இருந்து நாளை ஓட்டிவரவேண்டியுள்ளது. அதனல் இந்த அரசாங்கத்திடம் விசேஷமாக எதையும் எதிர்பார்க்கமுடியாதுதான். ஆனல் அதிக கடன்பட்டும், கஷ்டங்கள் அதிகரிப்பதாயின், ஜனநாயகம் என்று கூறப்படும் இந்த ஆட்சிமுறையிலேயே பொதுமக்களுக்கு அவநம்பிக்கை அதிகரிக்கும்.

---

## சகிக்க முடியாது

இவ்வாரத்தில் அரசாங்கம் திரட்டிய "பயனியர் படை"க்கு ஐயாயிரம் பேர் தேவை என்று விளம்பரப்படுத்தினர். வேலையில்லாமல் இருப்பவருக்கே சலுகை அளிக்கப்படுமென்றும் அறிவித்தனர். இந்த விளம்பரத்தைக் கண்டதும், பல மடங்கு அதிகமானவர்கள், பல பர்லாங் தூரம் 'கியூ' வரிசையில், முதல் நாள் இரவிலிருந்தே காத்துக் கிடந்ததையும், இதில் பலர் ஏமாற்றத்துடன் திரும்பியதையும் பார்த்தோம். நாட்டில் வேலையில்லாக் கஷ்டம் எவ்வளவு அதிகமாகவுள்ளதென்பதை இக் காட்சிகள் வெளிப்படுத்தின.

கொழும்புத் துறைமுகத்திலும் வேறு அத்தியாவசிய சேவைகளிலும் வேலை நிறுத்தம் ஏற்பட்டால், அதைச் சமாளிப்பதற்காகவே 'பயனியர்' படையைத் திரட்டுவதாக அறிவிக்கப்பட்டது. ஆனல் வேலை நிறுத்தங்களை முறியடிக்கவும் தொழிலாளரின் நியாயமான கோரிக்கைகளை மறுக்கவுமே தங்களுக்கு எதிராக இப்படை திரட்டப்படுவதாக, தொழிற் சங்கத் தலைவர்கள் கண்டிக்கிருர்கள். சென்ற யுத்தம் முடிந்ததும், பிரதமர் சேர் ஜோன் கொத்தலாவலையும் இவ்வித தொழிலாளர் படையைத் திரட்டியதாயும், அவர் கதி அதோகதி ஆகிவிட்டதாயும் சுட்டிக் காட்டப்படுகின்றது.

தொழிலாளருக்கு நியாயமான உரிமைகள் அளிக்கவேண்டியதே. 'பயனியர்' படைகளைத் திரட்டி, அவர்களது உரிமைகளை வெகு காலத்துக்கு மறுக்க முடியாது. ஆனல் இதே சமயம் பொது மக்களின் நன்மையையும் நாட்டின் நலத்தையும் முக்கியமாகப் பாதுகாக்க வேண்டிய கடமை அரசாங்கத்துக்கு மட்டுமன்றி, எதிர்க்கட்சிகளுக்கும் உண்டு.

கொழும்புத்துறைமுக வேலை நிறுத்தத்தால், பொதுமக்களுக்கும், நாட்டின் நற் பெயருக்கும் மிகவும் தீங்கேற்பட்டுள்ளதென்பதை யாரும் மறுப்பதற்கில்லை. இவ்வித அத்தியாவசிய சேவைகளில் ஈடுபட்டவர்கள், நாட்டுக்கு மிக முக்கியமான பணி செய்பவர்கள். அவர்கள் விஷயத்தில் அதிக தாராள மனப்பான்மை காட்ட வேண்டியதே. அதே சமயத்தில், தங்கள் உரிமைகளைப் பெற, அவர்கள் முதலில் பேச்சு வார்த்தைகளை நடத்தி அது தோல்வி அடைந்தாலே கடைசி ஆயுதமாக வேலை நிறுத்தப் பாணத்தைப் பிரயோகிக்க வேண்டும். ஆனல் துரதிருஷ்டவசமாக அங்கு திடீர் வேலை நிறுத்தங்கள் கிளம்புகின்றன. போட்டி தொழிற் சங்கங்கள் தோன்றி, தொழிலாளரிடையே ஒற்றுமையும் அமைதியும் ஏற்படாமல் தடுக்கின்றன. பலாத்காரமும் தலை தூக்குகின்றது.

இதனல் தொழிலாளர் மட்டுமன்றி, பொதுமக்களும் பெரிதும் அவதிப்படுகின்றார்கள். தொழிற் சங்கங்களிடையே ஒற்றுமையில்லாமல், போட்டா போட்டிகள் அதிகரிப்பதும், திடீர் வேலை நிறுத்தங்களால், பொது மக்களுக்கு ஏற்படும் கஷ்டங்களும் நிலைமையை மோசமாக்குகின்றன. இதனல் தொழிற்சங்கங்கள் பொதுமக்களின் அபிமானத்தை இழக்கவும் நேரிடும். இதற்கு இடம் தராமல் பார்த்துக்கொள்ள வேண்டியது தொழிற் சங்கத் தலைவர்களின் கடமை.

ஆனல் இலங்கையிலே அரசாங்கக் கட்சி உள்ளிட்டு, பல அரசியல் கட்சிகளும் தொழிற் சங்கங்களைத் தங்கள் அரசியல் கட்சி நலன்களுக்காகப் பயன்படுத்துகின்றன. ஒரு தொழிலுக்கு ஒரு யூனியன் தான் என்று சட்டம் செய்தால், இந்த அவல நிலை மாறும். ஆனல் அவ்வித சட்டம் செய்ய அரசாங்கக் கட்சியும் தயாரில்லை. ஆகவே ஒரு புறம் வேலை நிறுத்தங்களும், மற்றோர் புறம் "பயனியர்" இராணுவப் படைகளும் ஏற்பட்டு, தொழில் அமைதியும், மக்கள் நலமும் பாதிக்கப்படுகின்றன. வேலையில்லாக் கஷ்டம் அதிகரிக்கின்றது. ஆனல் இவ்வித அவல நிலையை மக்கள் வெகு காலம் சகிக்கவே மாட்டார்கள்

---

## 'ஸ்டேட்ஸ்மன்' யோசனை

இந்தியா—இலங்கைப் பிரச்சினையைப் பற்றிய பேச்சுகளை இப்போது நடத்தப்படாதென்றும், தேர்தலுக்குப் பின்வரை இதைத் தள்ளிவைக்கலாமென்றும் இன்றேல் தேர்தல் காலத்தில் இந்திய துவேஷம் அதிகரித்து, இலங்கை இந்தியர் அவதிப்பட நேரிடுமென்றும் பொருள்படக் கல்கத்தா 'ஸ்டேட்ஸ்மன்" பத்திரிகை இந்திய அரசாங்கத்திற்கு யோசனை கூறுகின்றது.

ஏற்கனவே இவ் விஷயமாகப் பார்லிமெண்டில் சிலர் இலங்கை இந்தியரைத் தாக்க ஆரம்பித்துவிட்டனர். பொதுக் கூட்டங்களிலும் துவேஷப் பேச்சுகள் அடிபடுகின்றன. தேர்தல்காலம் நெருங்க நெருங்க, துவேஷப் பேச்சுகள் அதிகரிக்கலாம். இந் நிலையில் அரசாங்கக்கட்சி, பலம் குன்றியுள்ள இச் சமயத்தில், இந்திய அரசாங்கத்துடன் பேச்சுகள் நடத்துவது, பிரச்சினையை வெற்றிகரமாகத் தீர்க்கமுடியாது போவதுடன் நிலைமையை மேலும் மோசமாக்கவும் கூடும்.

பத்துலட்சம் மக்களின் மனித உரிமை பறிக்கப்பட்டுள்ளதால், இப் பிரச்சினை கூடிய விரைவில் தீர்க்கவேண்டியதே. அதற்கு இந்திய அரசாங்கத்துடன் பேச்சுகள் நடத்தவேண்டுமென்றஅவசியமில்லை. இலங்கையிலுள்ள இந்தியத் தலைவர்களுடன் இதுபற்றிப்பேசி, ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைகள் சாசனக் கொள்கைப்படி இதைச் சுமுகமாகத், தீர்த்துக்கொள்ளலாம். ஆனல் அரசாங்கம் மிகப் பலவீனமாகவுள்ள இந்நிலையில் இப் பேச்சுகளை நடத்துவது "ஸ்டேட்ஸ்மன்" கூறுவதுபோல் விவேகமானதாகுமா என்பது சந்தேகமே.

## கை லஞ்சம்

சிம்மாசனப் பிரசங்கத்தைப் பற்றிப் பிரதிநிதிகள் சபையில் நடந்த விவாதத்தில் கைலஞ்சப்புகார்கள் கிளம்பின. ஒரு புதிய தொலைபேசிவைப்பதற்கு 1000 ரூபாயும் 'சப்—போஸ்ட் மாஸ்டர்' பதவிக்கு இரண்டாயிரம் ரூபாயும் கேட்கப்படுவதாகப் பொதுக் கூட்டங்களில் பகிரங்கமாகக் குற்றம் சாட்டப்படுவதை மாத்தளைப் பிரதிநிதி எடுத்துச் சொன்னர். இன்னும் சில பிரதிநிதிகளும் இவ்வித குற்றச்சாட்டை வெளியிட்டு கைலஞ்சவிசாரணை கமிஷனை நியமிக்கவேண்டுமென்று வற்புறுத்தினர். மந்திரிசபையிலிருந்து விலகிய முந்திய நீதியமைச்சரும் இதே புகார் சொல்லி, அரசாங்கம் விசாரணைக்கமிஷனை நியமிக்க மறுப்பது அதன் நற்பெயருக்கு இழுக்கு என்றார். இந்தப் புகார் புதியதல்ல. என்றாலும் பிரதம மந்திரி விசாரணைக் கமிஷனை நியமிக்கத் தயாரில்லை.

ஒரு குறிப்பிட்ட அமைச்சரைப்பற்றியோ, அதிகாரியைக் குறித்தோ இப் புகார் கூறப்படுமாயின், அது பாரதூரமானதாகும். அதைச் சம்பந்தப்பட்டவர்கள் உடனடியாக மறுப்பதுடன், குற்றம் சாட்டப்படுபவர்கள்மீது நடவடிக்கை எடுத்துத் தங்கள் நற்பெயரைக் காத்துக்கொள்ள வேண்டும். ஆனல் அவ்விதமெதுவும் செய்யப்படாததால், பொதுமக்கள் இப்படிப்பட்ட புகார்கள் உண்மை என்றே நம்ப இடமேற்படுகின்றது. இவ்வித நிலைமை அரசாங்க நிர்வாகத்துக்குப் பெரிய இழுக்காகும்.

## கொழும்பு வீதிகளில்

கொழும்பு வீதிகளிலே இப்போது நடந்துசெல்லவும் பயமாக இருக்கிறது. எந்தப் பக்கத்திலிருந்து யார் குண்டு வீசுவார்களோ! என்ற பயம்.

பண்டாரநாயக்காவுக்கும், என். எம். பெரேராவுக்கும் ஏற்பட்டுள்ள அரசியற் சண்டையிலே, முதலில் பலியானவர் யார்? தெருவிலே, ஒரு பாவமும் அறியாமல் நடந்துசென்ற ஒரு பரதேசியும், ஒரு அபூபக்கரும், செல்லையாவும்தான்!

* * *

தெருவில் நடப்பதுமட்டுமல்ல. தோட்டத்தில் குழந்தைகள் விளையாடுவதும் ஆபத்து. மேட்டுத் தெருவிலே ஒரு தோட்டத்தில் இரு குழந்தைகள்—ஜயந்திகுமாரும், ராஜேஸ்வரியும் விளையாடச் சென்றார்கள். அங்கு சிகரெட் டப்பா ஒன்று கிடந்தது. அதை எடுத்து இருவரும் விளையாடியதும், 'டபார்' என்று அது வெடித்து, இரு குழந்தைகளுக்கும் படுகாயம். இருவரும் ஒரு தொழிலாளியின் குழந்தைகள். பாவம்!

அங்குமட்டுமல்ல. பிரதம மந்திரியின் காரியாலயத்துக்கு முன்பாகவுள்ள, கோர்டன் கார்டன்ஸ் தோட்டத்திலே சுவருக்குப் பக்கமாக இரு வெடிகுண்டுகள் தயாராக வைக்கப்பட்டிருந்தனவாம்! யாருக்காக அந்த வெடியோ? நல்லவேளையாக, யாரும் பலியாவதன்முன் அவை கண்டுபிடிக்கப்பட்டு அகற்றப்பட்டன.

சிகரெட் டப்பாவைப் பார்க்கும்போதே வெடிகுண்டுபோல் தோன்றுகிறது! வேறு கைத்தொழில்களில் நாம் முன்னேறாவிடினும், இந்த வெடிகுண்டு செய்வதில் நிச்சயம் வெகுதூரம் முன்னேறியிருக்கின்றோம்!

* * *

வெடிகுண்டுக்குப் பலியான பரதேசி, அபூபக்கர் இவர்களது பிணங்கள், தெருவிலே அப்படியேகிடக்கும் படத்தைப் பத்திரிகைகளில் பார்த்தேன். மிகப் பரிதாபமாக இருந்தது.

பலமணி நேரமாகியும் அந்த உடல்களை அகற்றவில்லை என்றும், மழையில் அவை நனைந்து கிடந்ததாயும் ஓர் அன்பர் உணர்ச்சியுடன் சொன்னர்.

அந்த இரு எளிய குடும்பங்களுக்கும் இனி என்ன கதி?

* * *

சென்ற ஞாயிறன்று கொழும்பு குதிரைப்பந்தயத் திடற் பக்கம் சென்றேன். அங்கு பெரிய கூட்டம் காத்துக்கிடந்தது. நண்பரைக் கேட்டேன். ரேஸ் என்று சொன்னர் அவர். ஞாயிற்றுக்கிழமை ஏது ரேஸ்? பிறகு விசாரித்ததில், "பயனியர்" பட்டாளத்திற் சேர அவர்கள் வந்துள்ளதாயும், முதல்நாள் இரவிலிருந்தே 'க்யூவில்' நின்று காத்துக் கிடப்பதாகவும் தெரியவந்தது.

அதில் நின்றவர்கள் எல்லாரும் வாலிபர்கள், ஏழைகள். எந்த வேலையும் செய்யத் தயாராகவுள்ளவர். அவர்களிற் சிலரைத்தான் எடுத்துக் கொண்டனர். பலருக்கும் ஏமாற்றம். அவர்களது குடும்பங்கள் ஜீவனத்துக்கு என்ன கஷ்டப்படுகின்றனவோ?

* * *

நடப்பதெல்லாம் நன்மைக்கு என்பார்கள். இந்த 'ஸ்டிரைக்' கினலுங்கூட ஒரு நன்மை! ஐயாயிரம் குடும்பங்களுக்கு இனி சில காலத்துக்காவது வழிபிறக்குமல்லவா?

—ஐயாறன்.

# கல்வி மந்திரி மீது கண்டனம்

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

சம் முதலியவற்றைத் தீர்க்க உருப்படியான கொள்கைகள் அரசாங்கத்துக்கு இல்லை என்றும் அதனுல் சபையின் நம்பிக்கையை இழந்துவிட்டதாகவும், ஜனங்களுக்குப் பிரதிநிதித்துவம் வகிக்காததால் அதற்கு நாட்டை ஆளத் தார்மீக உரிமை இல்லை என்றும் அப்பிரேரணை கூறியது.

டாக்டர் என். எம். ஆறு நியமன அங்கத்தினர்களே இப்போது பிரதமரை ஆட்டிவைப்பதாகக் கூறியதும், நியமன அங்கத்தவரான மிஸ்டர் ஸிங்கில்டன் ஸால்மன் மறுத்து, "அது உண்மையாக இருக்க வேண்டுமென்பதே எனது விருப்பம்" என்ருர். உடன் டாக்டர் கொடுத்தார் ஒரு சாட்டை. "இந்நாட்டின் தலை எழுத்தை "ஒரு ஸிங்கிள் ஸால்மன்" நிர்ணயிப்பது பெரிய கண்ருவியாகும்" என்று கூறி, அவர் வாயை அடைத்தார்.

நாட்டில் வேலையில்லாக் கஷ்டம் இதுவரை என்றுமில்லாதபடி உயர்ந்திருப்பதாகவும் ஒரு லட்சத்து 30ஆயிரம்பேர் வேலையில்லை என்று பதிவு செய்திருப்பதாகவும் டாக்டர் என். எம். கூறி,மந்திரிகள் தங்களதுவேலையில்லாக் கஷ்டத்தைத் தீர்த்துக் கொண்டதாகக் கேலி செய்தார். வாழ்க்கைச் செலவுகள் உயர்ந்திருப்பதாயும், லஞ்ச ஊழல்கள் பெருகியுள்ளதாயும் கூறி நியமன அங்கத்தவர்கள் வாக்களிக்காவிடில் இந்த அரசாங்கம் தோற்றுவிடுமென்ருர்.

ஆனுல்நியமன அங்கத்தவர்கள் ஆறு பேரும் வாக்களிக்காவிடினும் அரசாங்கப் பிரேரணை 3 அதிகப்படி வாக்குகளால் நிறைவேறியிருக்கும். இதற்கு எதிர்க்கட்சியைச் சேர்ந்தவர்களிடையே கட்டுப்பாடும் ஒற்றுமையும் இல்லாததுதான் முக்கிய காரணம்.

எதிர்க்கட்சியைச் சேர்ந்த திரு. ஸி. சுந்தரலிங்கமும், சேர் ஜோன். கொத்தலாவலையும் சபைக்கு வரவில்லை. அந்தரத்தில் வீடு தீப்பற்றி எரிகையில், வவனியாவில் அரசியல் கோலிக்குண்டு விளையாடி, தமது தொகுதியினருக்குச் செய்யவேண்டிய கடமையைச் செய்யாதிருக்கின்ருர்.

சேர்ஜோன்,லண்டனிலிருந்து அவசரமாகப் பறந்து வந்தாரெனிலும், பார்லிமெண்ட் விவாதத்தில் கலந்துகொள்ளவில்லை. வாக்கும் அளிக்கவில்லை. அரசாங்கம் ராஜினுமாச் செய்தாலும், எதிர்க்கட்சிகளால் அரசாங்கம் அமைக்க முடியாதென்றும்,பார்லிமெண்டைக் கலைத்து ஒரு காவல் மந்திரி சபையை தக்க திறமைசாலியின் தலைமையில் அமைத்து நாட்டில் அமைதியை ஏற்படுத்திப் பொதுத் தேர்தல் நடத்தவேண்டுமென்றும் பத்திரிகைக்காரரிடம் யோசனை கூறினுர். இந்த யோசனையை ஏன் பார்லிமெண்ட் சென்று கூறக்கூடாதென்று கேட்டதற்கு, அதனுல் பயனெதுவும் ஏற்படாதென்ருர். அப்படியாயின் அரசியல் சந்நியாசம் வாங்கப் போகிறீர்களா? என்று கேட்டதற்கு, தமக்கு வயதாயினும் ஜனநாயகத்தையும், சமாதானத்தையும் குழப்பும் சக்திகளைத் தாம் எதிர்க்கப் போவதாகக்கூறினுர். இந்த நெருக்கடியில் இடதுசாரிகள் அதிகாரத்துக்கு வந்துவிடாமல் தடுப்பதற்காகவே அவர் கவலையுடன் பறந்து வந்ததாகவும், அந்தநிலை ஏற்படாதென்று தெரிந்ததும், அவர் சபைக்குச் செல்லாமல் இருந்துவிட்டதாகவும் கூறப்படுகிறது.

## கைலஞ்சம்

இரண்டாவது திருத்தம், சமீபத்தில் அரசாங்கக் கட்சியிலிருந்துவிலகிய பிலிப் கோஷ்டியினர் கொண்டுவந்தது. 1956-ம் வருஷ பொதுத்தேர்தலில் மக்களுக்கு அளித்த வாக்குறுதிகளை நிறைவேற்றுவதற்கான அறிகுறிகள் எதுவும் சிம்மாசனப் பிரசங்கத்தில் இல்லை என்பதே அதில் குறிப்பிடப்பட்டிருந்தது.

இதைப் பிரேரித்த நிமல் கருணதிலக (மாத்தளை) கத்தோலிக்கர்களைஅமெரிக்க ஏகாதிபத்தியம் பயன்படுத்துவதாயும், லஞ்ச ஊழல்கள் அதிகமாக இருப்பதாயும், ஒரு தொலைபேசிக்கு 1000மும், 'சப்போஸ்ட்மாஸ்டர்' பதவிக்கு ரூ 2000மும் கைலஞ்சம் வாங்கப்படுவதாகப் பகிரங்கக் கூட்டங்களில் கூறப்படுவதாயும், பத்திரிகையிலும் இது பிரசுரிக்கப்படுவதாயும் ஏன் அவர்கள்மீது வழக்குத் தொடராமலும், பிரதமர் லஞ்ச விசாரணை கமிஷன் நியமிக்காமலும் இருக்க வேண்டுமென்றும் கேட்டார்.

டாக்டர் விக்கிரமசிங்காவும் மற்றும் சிலரும் புதிதாக சில லஞ்சப்புகார்கள் பற்றிக் கூறினுர்கள்.

தபால் மந்திரி மரிக்கார் இதற்கு அளித்த பதிலில், தாம் இவ்விஷயமாக விசாரிக்கும்படி போலிஸ் அதிபரைக் கேட்டிருப்பதாயும், இவற்றை சபையும் தலைவரும் பரிசீலனை செய்ய வேண்டுமென்றும், பொருமை மீதே இவை கூறப்படுகின்றனவென்றும், இவற்றை நிரூபிக்க முடியாதென்றும் கூறினுர்.

பிரதமர் பண்டாரநாயக்கா முடிவாக அளித்த பதிலில், புதிய நீதி மந்திரி ஒரு லஞ்சக் கமிஷனரை நியமிக்கலாமென்றும், இது பற்றி இப்போது யோசனை செய்துவருவதாயும் கூறினுர். இரண்டாவது திருத்தத்துக்குச் சாதகமாக 28 பேர் வாக்களித்தனர். 50 பேர் எதிர்த்தனர். 14 பேர் வாக்களிக்கவில்லை.

## சிங்களம் மட்டும்

சிங்களம் மட்டும் தீர்மானத்தை 24 மணி நேரத்தில் ஏன் அமுலுக்குக் கொண்டுவரவில்லை என்று குற்றம் சாட்டி, திரு. எஸ். டி. பண்டாரநாயக்காவும் மற்றும் இருவரும் மிகவும் நீண்டதோர் மூன்ருவது பிரேரணை கொண்டுவந்தனர். அதில் மேலும் பல குற்றச்சாட்டுகள் உள்ளன. "4 போயா தினங்களையும் அரசாங்கம் விடுமுறையாக விடவில்லை. எல்லாப் பள்ளிக்கூடங்களையும் அரசாங்கம் கைப்பற்றவில்லை. அரசாங்க ஆஸ்பத்திரியிலிருந்து கத்தோலிக்கத் தாதிகளை நீக்கவில்லை. கத்தோலிக்க ஆர்ச்பிஷப்பின் வருமானத்துக்கு வரிவிதிக்கவில்லை. மகாசங்கத்திடமிருந்து ஏகாதிபத்தியக்காரர் பறிமுதல்செய்த 80 ஆயிரம் ஏக்கர் நிலத்தைத் திருப்பிக் கொடுக்கவேண்டும்.

பிரஜா உரிமைகோரும் இந்தியருக்கு, எஸ். எஸ். ஸி. வகுப்பு சிங்களமாவது தெரியவேண்டும். இந்தியருக்கு மலிவான அரிசி கொடுக்கப்படாது. இலவச கல்வி, வைத்திய வசதி கூடாது. வடக்கு கிழக்கு மாகாணக் கடற்கரையோரங்களில் 5 மைல் தூரம்வரை நிரந்தரமான ஊரடங்குச்சட்டம் பிரகடனம்செய்து, கள்ளக்குடியேற்றத்தைத் தடுக்கவேண்டும்.

தமிழ்மொழி மசோதாவை நிறைவேற்றிப் பண்டா—செல்வா ஒப்பந்தத்தை அமுலுக்குக் கொண்டுவந்தது தனிச் சிங்களச் சட்டத்தை ரத்துச் செய்வதாகுமென்றும், 13 லட்சம் இந்தியருக்குப் பிரஜா உரிமை அளித்தது, சிங்கள தேசிய சமுதாயத்துக்குச் சாவு மணி அடித்ததுபோலாகுமென்றும், 1958 ம் காலத்தில் சமஷ்டி சட்டமறுப்பாளர்மீது நடவடிக்கை எடுக்காமல் பல்லாயிரக் கணக்கான சிங்கள தேசாபிமானிகளைக்கொன்று சிறைப்படுத்தியதாயும் இன்னும் பலபல குற்றச்சாட்டுகளுள்ளன.

இத்திருத்தப் பிரேரணையை இரண்டே பேர்தான் ஆதரித்தனர். 89 பேர் எதிர்த்தனர். இருவர் வாக்களிக்கவில்லை.

## சமஷ்டி

இப்போதுள்ள ஒற்றையாட்சியைத் தீர்க்கச் சமஷ்டி அரசியல் முறை வேண்டுமென்றும், தனிச்சிங்களக் கொள்கை உடைய எந்த அரசாங்கத்தையும் ஆதரிக்க முடியாதென்றும் சமஷ்டிக்கட்சி திருத்தப் பிரேரணை கூறியது. எட்டேபேர் இதை ஆதரித்தனர். 70 பேர் எதிர்த்தனர். 13 பேர் வாக்களிக்கவில்லை.

கொழும்பு தொழில்நுட்பக் கல்லூரியில் தமிழருக்கு இடமில்லாமற் செய்வதுடன் யாழ்ப்பாணத்தில் முதல்தர கல்லூரியை அமைப்பதைக் கண்டித்து, கல்விமந்திரி தமிழரின் நன்மைக்கு மாருக நடப்பதாகக் குற்றம் சாட்டினர்.

கல்விமந்திரி இதற்குச் சமாதானம் கூறுகையில், சிங்களம் அரசாங்க மொழியானதால், அந்த மொழியறிவு வேண்டும் என்று கேட்டுள்ளதாயும், எந்தச் சிறுபான்மைச் சமூகத்துக்கும் பாதகமாகத் தாம் நடக்கவில்லையென்றும், யாழ்ப்பாணத்தில் முதல்தர தொழில்நுட்பக் கல்லூரி ஏற்படும்வரை கொழும்புக் கல்லூரியில் தொடர்ந்து பழையநிலைமையே இருக்குமென்றும் குறிப்பிட்டார். அக்கல்லூரியிற் சேர்பவர்களுக்குச் சிங்கள மொழி அறிவு வேண்டும் என்ற நிபந்தனையை நீக்கிவிட்டாரா இல்லையா என்பதைத் தெளிவாகக் கூறவில்லை.

அரசாங்கத்துக்கு முற்போக்குக் கொள்கைகள் இல்லை என்றும், லஞ்ச ஊழியர்கள் அதிகரித்திருப்பதாயும், கம்யூனிஸ்ட் கட்சியின் ஐந்தாவது திருத்தம் கூறியது. இதை 27 பேர் ஆதரித்தனர். 50 பேர் எதிர்த்தனர். 14 பேர் வாக்களிக்கவில்லை. மிஸ்டர் கெனமன் இத்திருத்தம் பற்றி ஆணித்தரமாகப் பேசினுர்.

தமிழ் பேசும் சிறுபான்மையோரின் மொழி உரிமைகளை மறுத்தும் பல வகுப்புவாத நடவடிக்கைகளைஎடுத்தும்,ஏழு லட்சம் இந்தியருக்கு மனித உரிமைகளைப் பறித்தும் சென்ற மூன்று வருடங்களில் அநீதிகள் பல செய்யப்பட்டுள்ளதாக, திரு. எட்மண்ட் சமரக்கொடி கொண்டுவந்த ஆருவது பிரேரணையை 22 பேர் ஆதரித்தனர். 52 பேர் எதிர்த்தனர். 17 பேர் வாக்களிக்கவில்லை.

## பிரதமர் ஏன் ராஜினுமாச் செய்யவில்லை?

பிரதமர் விவாதத்துக்குப் பதிலளித்துப் பேசுகையில், தாம்ராஜினுமாச்செய்யாததற்கு இரு காரணங்கள் சொன்னுர். இலங்கையில் ஜனநாயகத்தைப் பலப்படுத்தவும், முன்னேற்ற வேலைகள் தொடர்ந்து நடக்கவும் தாம் ராஜினுமாச் செய்யவில்லை என்ருர். "ராஜினுமாச் செய்தால் எனக்கு நிம்மதியாக இருந்திருக்கும். ஆனுல் புதிய அரசியல் திருத்தத்துடன் தேர்தல் நடக்க வேண்டும். மேலும் பிற்போக்குக் கட்சிக்கு ஆக்கமளிக்கக் கூடாது. அதனுல் தான் இப்போது ராஜினுமாச் செய்யவில்லை என்றும், இந்தியர் பிரச்சினையைத் தீர்க்க நடவடிக்கை எடுக்கப் போவதாயும் கூறினுர்.

## வரவு செலவுத் திட்டம்

சிம்மாசனப் பிரசங்கப் பிரேரணை நிறைவேறியபின் வியாழனன்று, 1959-60-ம் வருட வரவு செலவு திட்டத்தை நிதிமந்திரி சமர்ப்பித்துப் பேசினுர். 50 பேரின் ஆதரவு கிடைத்தது. இதுவும் நிறைவேறிவிடலாமென்பது தெளிவாகிவிட்டதால் பொது மக்களின் கவனம் விசேஷமாக இதில் செல்லவில்லை.

இப்போது பொதுமக்கள் வேனமும், கவலையும் பொது கவலை நிறுத்தம் பற்றித்தான்.

# இரத்தினக் கம்பளம்

பதுமன்

இன்றைய சகாப்தம் பொது மனிதனின் சகாப்தமாக இருப்பதால் ரோட்டரி சங்கத்தின் வாசல் சகலருக்கும் திறந்துவிடப்பட வேண்டும் எனப் பழுத்த அனுபவம் வாய்ந்த ஒரு பெரியார் கூறியிருந்தார்.

சமூகத்தில் மதிப்புள்ளவர்களும், தக்க புள்ளிகளெனப் பெரிய புள்ளிகளால் கருதப்படுபவர்களுமே ரோட்டரி போன்ற சர்வதேசப் பிரபல்யம் வாய்ந்த சங்கங்களில் துலங்கி வருகின்றனர். இவர்கள் இருக்கும் இடங்களிலே குடிசைகளிலும் கொட்டில்களிலும் வாழும் சாதாரண மக்களைக் கொண்டு போய் இருக்கச் செய்வதென்ருல் அது இலேசான காரியமல்ல. ஒன்றில் சாதாரண மக்களின் நிலைக்கு ரோட்டரிப் பெருமக்கள் இறங்க வேண்டும். இல்லையேல் பெரிய புள்ளிகளுடன் சரிநிகர் சமானமாக நிற்கும் அளவுக்குச் சாதாரண மக்கள் உயரவேண்டும். இது இலகுவில் முடியக் கூடிய காரியமாகுமா?

ஆனுல் இதற்கு ஒரு சுலபமான வழியிருக்கின்றது. ரோட்டரி இயக்கத்தில் மக்களின் பிரதிநிதிகள் சேர வேண்டுமென அப்பெரியார் கூறியிருந்தார். ஆம், எம். பிக்கள் எல்லாரும் ரோட்டரி சங்கத்திற் சேர்ந்துகொள்வார்களாயின் அச்சங்கத்தின் வாசலைச் சகலருக்கும் திறந்துவிட்டது போலாகும். ஏனெனில் பொது மக்களின் வாக்குகளைப் பெற்றுத் தானே எம். பிக்கள் பிரதிநிதிகள் சபைக்குள் நுழைகின்றனர். ரோட்டரி சங்கத்திலும் எம். பிக்கள் சேர்ந்து கொண்டால் அவர்கள் சாதாரண மக்களின் பிரதிநிதிகளாக விளங்கிச் சங்கத்தின் விருந்து வைபவங்களில் கரண்டி முள்ளுப்பிடிக்கலாமல்லவா?

## 'மின்' சலவை!

சாதாரண மனிதனைப்பற்றிப் பேசும்போது மின்சாரச் சலவைபற்றிய செய்தியொன்று நினைவுக்கு வருகின்றது. பெலியகொட என்னும் இடத்தில் மின்சாரத்தினுல் இயங்கும் ஒரு சலவைத் தொழிற்சாலை சமீபத்தில் மீன்பிடி, கைத்தொழில் மந்திரி திரு. ஜே. ஸி. டபிள்யூ. முனசிங்காவால் திறந்துவைக்கப்பட்டது. திறந்துவைத்த மந்திரி அங்கு சலவையும் செய்து பார்த்தாரோதெரியாது. ஆனுல் இந்த மின்சாரச் சலவைத் தொழிற் சாலையில் மனிதனுக்கு வேலையே இருக்காது போலத் தெரிகின்றது. ஏனென்ருல் துணிகளைக் கழுவுதல், உலர்த்தல், ஸ்திரிக்கை போடுதல் போன்ற யாவும் மின்சாரத்தின் மூலமே நடைபெறுமாம். ரோட்டரி போன்ற சங்கங்களிற் சாதாரண மனிதனுக்கு இடங் கிடைத்தாலும் சில தொழிற் சாலைகளில் அவன் இடம் பெறுவது பரம சங்கடமான விஷயமாகி வருகின்றதே!

## பண்டிதமணி

செந்தமிழின் காவலராகிய பண்டித மணி சி. கணபதிப்பிள்ளை அவர்கள் யாழ்ப்பாணம் திருநெல்வேலி சைவாசிரிய கலாசாலையின் பேராசிரியப் பதவியினின்றும் 10-7-59இல் ஓய்வு பெற்ருர். அன்னுரின் சேவையைப் பாராட்டுவதில், உபசரிப்பதில், நினைவுகூருவதில் பழைய மாணவர்களுக்கும் தமிழ் மக்களுக்கும் பெரும் பங்குண்டு. இதற்கான ஓர் ஆலோசனைக் கூட்டம் வண்ணை வைத்தீசுவர வித்தியாலயத்தில் இன்று காலை நடைபெறுகின்றது. இது மகிழ்ச்சிக்குரிய தொன்றே. அடுத்த இதழில் பண்டிதமணியைப் பற்றிய சில நினைவுகள் வெளியாகும். 'மாணுக்கன்' ஒருவர் இதனை எழுதுகின்ருர்.

## 'மூன்று மனுஷர்கள்'

"இலங்கையில் யாழ்ப்பாணம் திருநெல்வேலி சைவாசிரியர் கலாசாலையென்றும் ஒன்று இருக்கிறது என்று விளங்கச் செய்தவர்கள் மூன்று மனுஷர்கள். ஒருவர் ஆழ்ந்த கல்வி ஞானமும் அஞ்சா நெஞ்சும் படைத்த முன்னுள் அதிபர் மயிலிட்டி திரு. சு. சுவாமிநாதன் அவர்கள். அடுத்தவர்கள் நீதியே உருவான உப அதிபர் திரு. பொ. கைலாசபதி அவர்கள், மற்றவர் பேரறிஞர் பண்டிதமணி திரு. சி. கணபதிப்பிள்ளை அவர்கள்." இப்படி எல்லாம் பதுமனின் பேனு எழுதவில்லை. 'மூன்று மனுஷர்கள்' என்ற தலைப்புடன் வெளிவந்து உலாவும் ஒரு துண்டுப் பிரசுரத்திலுள்ள முதலாவது பந்தியை இங்கு அப்படியே தந்துள்ளேன்.

## சைவாசிரிய கலாசாலைப் பழைய மாணவர் ஆலோசனைக் கூட்டம்

யாழ்ப்பாணம் திருநெல்வேலி சைவாசிரிய கலாசாலையின் தமிழ்ப் பேராசிரியர் பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை 10-7-59இல் ஓய்வுபெறுகின்ருர். எனவே அன்னுருடைய சேவைகளை எவ்வாறு பாராட்ட வேண்டுமென்று ஆலோசிப்பதற்கான கூட்டம் 11-7-59 சனிக்கிழமை காலை 10 மணிக்கு யாழ்ப்பாணம் வைத்தீசுவர வித்தியாலய மண்டபத்தில் நடைபெறும். இக்கூட்டத்துக்கு அபிமானிகள் அனைவரும் அழைக்கப்படுகின்றனர்.

---

## மத்திய கல்லூரியில் குழந்தைக் கவிஞர்

பள்ளிக்கூடங்களிற் படிக்குங் காலத்திலேயே பெருமக்களின் வாழ்க்கையைப்பற்றிச் சிறுவர்கள் தெரிந்துகொள்வது அவர்களின் எதிர்கால வாழ்வுக்கு நன்மை விளைக்குமென குழந்தைக் கவிஞர் அழ. வள்ளியப்பா யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி மாணவர்களுக்குச் சென்ற புதன்கிழமை காலை பேசும்போது குறிப்பிட்டார். கல்லூரிமண்டபத்தில் நடைபெற்ற இக் கூட்டத்துக்கு ஆசிரியர் திரு. வே. க. நடராசா தலைமைவகித்தார். திரு. அழ. வள்ளியப்பா தொடர்ந்து பேசும்போது உலகப் பெரியார் சிலரின் வாழ்க்கையை நினைவூட்டி மக்களுக்குச் சேவை செய்வதின் மகத்துவத்தைச் சுவை ததும்ப எடுத்துரைத்தார்.

மாதர் பகுதி

# குடும்ப விளக்கு

—(செல்வி. ஐ. சிவபாக்கியம் - நல்லூர்)—

இருள் மண்டிக்கிடக்கும் இல்லமானாலும் புத்தொளியுடன் திகழவைக்கும் விளக்காக விளங்குபவள் பெண். அத்தகைய பெண் சாதாரணமாகவோ அன்றி ஒரு பட்டதாரியாகவோ இருந்தால்; "குடும்பத்தைச் செவ்வையான முறையில் நடாத்தமாட்டாள்—கணவனைப் பேணமாட்டாள்—கணவன் சொற் கேட்கமாட்டாள்" என்றெல்லாந் தவறான எண்ணங்கொண்டவர்களுக்கு-அவர்கள் அகத்தில் தோன்றிய தவறென்னும் இருளைப் போக்கி ஒளி பரப்பும் செங்கதிர்ச் செல்வன்போல; சென்ற இரு இதழ்களிலும் சகோதரி செல்வி எஸ். சின்னையா அவர்களின் கட்டுரை விளங்கியது.

"கல்லென்றாலும் கணவன்" "புல்லென்றாலும் புருடன்" என்ற பண்டைய கொள்கையைக் கடைப்பிடித்து வந்த—பண்பட்ட பெண்குலத்தின் பிற்சந்ததியார் அல்லவா இன்றைய பெண்கள். குடும்ப பராமரிப்பில் மாத்திரம் தலையிட்டால் போதுமா? கல்வி அறிவு இருந்தால்தானே ஒரு பெண் தனது கணவனையோ, குழந்தைகளையோ சீரிய முறையில் பேணி நடக்க முடியும். சிலர் "பெண்களுக்குக் கல்வி அறிவு தேவையேயன்றி பட்டம் பதவி எதற்கு" என்றும், வேறுசிலர் "பட்டம் பதவி பெற்ற பெண் நாணமில்லாது துணிந்து எந்த ஆடவனுடனும் அளவளாவுவாள். இது நம் பெண்ணினப் பண்பாட்டிற்கு ஏற்றதா?" என்றும் கேட்கலாம். ஆனால், பட்டம்பெற்ற பெண் தனது பட்டத்திற்குரிய வேலையுடன் மாத்திரம் நில்லாது உயிருக்குறுதுணையான நாயகனைப் பேணுவதிலேயே கண்ணுங் கருத்துமாக இருப்பாள்.

நாயகன் ஒரு விஷயத்தில் அல்லற்படும்பொழுது உவந்த முறையில் ஆறுதலளிக்கவும்—துணைபுரியவும் பட்டம்பெற்ற பெண்ணால் முடியும். ஆண்களுடன் கலந்து பேசினால் பெண்ணின் மானம் பறிபோகவே மாட்டாது.

ஒரு சில பெண்கள் கலந்து பேசுவதால் செய்த தவறுக்காகப் பெண் இனம் முழுவதையும் சந்தேகிப்பது நீதியா? ஒருதாய் பெற்ற குழந்தைகள் எல்லாம் ஆணாகவோ அன்றிப் பெண்ணாகவோ இருக்கின்றனவா? அதேபோலவே பெண்ணினத்தில் ஒருசிலர் செய்த தவறுக்காகப் பெண்ணினமே கூடாது என்று கூறுவதா?

பெண் கடமை உணர்ச்சி மிகுந்தவள். குடும்பத்தின் அச்சாணி அவள். அப்படிப்பட்ட பெண்களைப் பட்டம்பெற்றால் நிலைமாறிவிடுவார்கள் என்று சொல்வது தவறு. இவையாவற்றையும் உறுதிப்படுத்திச் சென்ற இரு இதழ்களிலும் எழுதியசகோதரி செல்விசின்னையா அவர்களுக்குப் பெண் இனம் நன்றி தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறது!

## கைத்தொழில் விருத்திக்கு மாதர் செய்யவேண்டிய பணி

"தொழிலின்மகத்துவத்தைச் செவ்வனே உணர்ந்த நாடுகள் பல வகையிலும் முன்னேற்றமடைந்துவருவதை நாம் அறியக்கூடியதாயிருக்கிறது. குடிசைக் கைத்தொழில்கள் இலாபகரமாக நடத்தப்பட வேண்டுமானால், பெண்களின் உதவி தேவை. இதனை நன்கு அறிந்தே கிராம அபிவிருத்திச் சங்கம் மாதர் சங்கத்தை நிறுவியுள்ளது.

இவ்வாறு வலிகாமம் கிழக்குப்பிரிவின் காரியாதிகாரியாகிய திரு. ஜே. ரி. சபாபதிப்பிள்ளை பத்தமேனிக் கிராமத்தில் ஒரு மாதர் சங்கத்தை ஆரம்பித்து வைத்துப் பேசுகையிற் குறிப்பிட்டார்.

கிராம முன்னேற்ற இயக்க மேற்பார்வையாளர் திரு. கே. எஸ். முத்துவேலு, ஒரு மாதர் சங்கம் ஆற்றக்கூடிய சேவைகளை விரித்துரைத்தார்.

அச்சுவேலிக் கிராம முன்னேற்றச் சங்கத் தலைவர் திரு. ஏ. முருகேசு, கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர் திரு. ரி. இரத்தினசபாபதி ஆகியோரும் பேசினர். பின் வருவோர் மாதர் சங்கத்தின் நிர்வாகிகளாகத் தெரிவு செய்யப்பட்டனர்.

தலைவி: திருமதி ரி. இரத்தினசபாபதி, உபதலைவி: திருமதி பி. அமிர்தலிங்கம், காரியதரிசி: செல்வி பி. சின்னத்தம்பி, உதவிக்காரியதரிசி: செல்வி கே. செல்லையா, தனாதிகாரி: செல்வி ஆர். வீரசிங்கம்.

சமையற்கலை

## சில நுணுக்கங்கள்

திருமதி ச. கந்தவனம்

சமையல் வேலையில் ஈடுபட முன்னர் எதைச் சமைப்பது என்பதைத் திட்டமாக முடிவு செய்து கொள்ள வேண்டும்.

சமையலுக்குத் தேவையான பாத்திரங்கள் உபயோகிக்கத் தொடங்கமுன் அவைசுத்தமாக இருத்தல் வேண்டும்.

சமையலறையைத் தினமும் கழுவிச் சுத்தமாக வைத்திருத்தல் அவசியம். சமையலறையில் காய் கறித் தோல்கள் சிதறிக் கிடக்கக் கூடாது. இதற்கென ஒரு பெட்டி வைத்து அதற்குள்ளே எறிவதற்கான பொருள்களைப் போட்டுவைத்தல் நல்லது. சமையல் வேலை முடிந்ததும் அதை அப்புறப்படுத்தலாம். உணவுப் பதார்த்தங்களை ஈ மொய்க்காமல் மூடி வைத்தல் வேண்டும். கையைக் கழுவி, புடைவைத் தலைப்பில் துடைப்பதும், புடைவைத் தலைப்பினால் அடுப்பிலிருக்கும் பாத்திரங்களைப் பிடித்து இறக்குவதும் தவறு. எதையுமே கையினால் எடுத்துப் பரிமாறக் கூடாது. அதற்கு ஏற்ற கரண்டியை உபயோகிக்க வேண்டும்.

பிடித்தமானது என்பதற்காகத் தினமும் ஒரே மாதிரி காய் கறிகளைச் சமைப்பது கூடாது.

சமையல் பக்குவங்கள் மணத்துடனும் பார்வைக்குப் பளிச்சென்றும் இருக்க வேண்டும். அப்போதுதான் விரும்பிச் சாப்பிடத் தோன்றும். உபசாரம் செய்வது அவசியம். ஆனால் கட்டாயப் படுத்திச் சாப்பிடச் செய்வது தவறு.

வீட்டுக்கு விருந்தாளி வந்திருந்தால் முதலில் அவருக்கு பரிமாறி விட்டே கணவனுக்கும் மற்றவர்களுக்கும் பரிமாறவேண்டும்.


பயிர் பூச்சிகளாலும் பயிர் பீடைகளாலும் எவ்வளவு சேதம் ஏற்படுகிறதென்று உங்களுக்குத் தெரியுமா?

ஜெர்மனியாரின் பயிர் பீடை நாசினிகளையும், தெளி கருவிகளையும் பாவித்துப் பயிர்களைப் பாதுகாருங்கள்

**பொலிடோல்:** பிரசித்திவாய்ந்த ஒரு பூச்சி நாசினி திரவம் ஆகவும், தூள் முறையாகவும் பாவித்துக்கொள்ளலாம்.

**டிப்தெரெக்ஸ்:** நெற்பயிர் பீடைகளுக்குச் சிறந்த சக்தி வாய்ந்த ஒரு நாசினி திரவமாகவும், நீர்கலந்த தூளாகவும், தனித்தூளாகவும் பெற்றுக்கொள்ளலாம்.

**குப்பிரவிற்று:** கமத்தொழிற் பகுதியாலும் தேயிலை ஆராய்ச்சித் தாபனத்தாலும் அங்கீகரிக்கப்பட்ட செம்பு பொதிந்த பங்கசு கொல்லி, தேயிலை, வெற்றிலை, புகையிலை பயிர்களின் பங்கசு நோய்களை அடக்க வல்லது.

**சிரீசையன்:** நெல்விதை மற்றும் விதைகளை தோற்று விதை பங்கஸ் நோய்களை நீக்கலாம்.

**நைகரகாபமேற்று:** பயிர் நோய்களைத் தடுக்கக்கூடிய ஓர் பங்கஸ் கொல்லி.

**ஹெடோனல்:** களைநாசினி, களைப்பூண்டுகளை அழிப்பதால் நெற் பயிருக்கு சிறந்த வளர்ச்சியைக் கொடுக்கும்.

**தூக்கோன்இரை:** ஈ, கரப்பான் பூச்சி ஆகியவற்றை அடக்க வாய்ந்த பூச்சி கொல்லி.

**சீலியோ நச்சுப்பசை:** எலிகளையும், அகழான்களையும் பரிநாசஞ் செய்யும் அரிக்கும் விலங்கு கொல்லி.

**பிலாட்சி உபகரணங்கள்:** உகந்த தெளி கருவிகளும், தூவிகளும் குறைந்த விலைக்கு எடுத்துக்கொள்ளுக.

மேற்கூறியவை யாவும் M. P. C. சங்க மூலமாயும் எங்கள் பிரதிகருத்தர்
K. S. செல்லையா, ரோயல் டிஸ்பென்சரி, யாழ்ப்பாணம்.
சிவசக்தி ஸ்டோர்ஸ், வவுனியா.
C. A. வயித்திலிங்கம், 5, டமறில் ஒழுங்கை, மட்டக்களப்பு.
K. V. சோமசுந்தரம், மன்னன் குளம், அக்கரைப்பற்று.
ஸ்ரீ சுப்பிரமணிய ஸ்டோர்ஸ், வெலிமடை.
சரஸ்வதி ஸ்டோர்ஸ், வெலிமடை.
அனுலா சீற் ஸ்ரோர்ஸ், வெலிமடை. மூலமாயும் வேண்டிக்கொள்க.
தேவையான விபரங்களுக்கு எழுதுக.

விலாசம்:

**சதாம் ஹவுஸ் லிமிட்டெட்**

தபால் பெட்டி இல. 743.

கொழும்பு 8.


## 'ஈழநாடு' சிறுவர் பகுதி

★ **ஈழநாடு சிறுவர்** பகுதியில் ஆறு வயது தொடக்கம் பத்தொன்பது வயது நிரம்பிய அனைவரும் அங்கத்தவராகச் சேர்ந்து கொள்ளலாம்.

★ அங்கத்தவராகச் சேரவிரும்புவோர் இங்குள்ள விண்ணப்ப பத்திரத்தை நிரப்பி அனுப்பவேண்டும். இந்த இதழில் வெளியாகியுள்ள பத்திரம் 18-7-59க்குப் பின்னர்செல்லுபடியாகாது. ஒவ்வொரு வாரமும் இங்கு வெளியாகும் பத்திரத்தை அடுத்துவரும் சனிக்கிழமைக்குள் உபயோகித்துக் கொள்ளவும்வேண்டும். ஒருவர் ஒருமுறை அங்கத்தவர் பத்திரத்தை நிரப்பி அனுப்பினால் போதுமானது.

★ ஈழநாடு அலுவலகத்திலிருந்து அங்கத்தவர் பதிவுத்தாள் கிடைத்தபின்னர்தான் **ஈழநாடு சிறுவர் பகுதி**க்கு அங்கத்தவர் தங்கள் கதைகளையும், கட்டுரைகளையும், கருத்துக்களையும் அனுப்ப வேண்டும். அவற்றுள் நல்ல கதைகளும், கட்டுரைகளும் **சிறுவர் பகுதி** யில் வெளியிடப்படும்.

★ **சிறுவர் பகுதி** சம்பந்தமான சகல கடிதப்போக்குவரத்தும் பின்வரும் விலாசத்துக்கு அனுப்பப்பட வேண்டும்:

சின்ன மாமா,
**ஈழநாடு சிறுவர் பகுதி,**
தபாற்பெட்டி எண் 49,
யாழ்ப்பாணம், இலங்கை.

இங்கே வெட்டவும்

### ஈழநாடு சிறுவர் பகுதி

விண்ணப்பப் பத்திரம்

(11-7-59)

அன்புள்ள சின்னமாமா அவர்களுக்கு
வணக்கம்,

ஈழநாடு சிறுவர் பகுதியில் என்னை ஓர் அங்கத்தவராகச் சேர்த்துக்கொள்ளுமாறு வேண்டுகின்றேன்.

பெயர்.

விலாசம்...

கையொப்பம்

பெற்றோர் அல்லது
ஆசிரியரின் கையொப்பம். வயது............

இங்கே வெட்டவும்

# சிறுவர் பகுதி

## எது நல்லது ?

இளம் விழியன் (ப. எண். 213)

(சென்ற வாரத் தொடர்ச்சி)

இரவில் எழுந்து சென்ற உருவங்கள் இரண்டும் மன்னனும், தளபதியும்தான். கிழக்கில் சென்ற மன்னன் நேரே தன் நண்பன் வல்லாளனின் வீட்டிற்குச் சென்று கதவைத் தட்டினர். கதவு திறந்ததும் உள்ளே சென்ருர். "இந்த நேரத்தில் வந்தது யார்?" என்ற எண்ணத்தில் வல்லாளன் சிறிது வியப்புடன் மன்னனைப் பார்த்தான். பின்பு உள்ளே சென்று கையில் ஒரு ஈட்டி எடுத்து வந்தான். காரணம், அந்த நேரத்தில் திருடர்கள் தவிர யார் வரப்போகிருர்கள் என்பது தான். ஈட்டியை ஓங்கியபடியே, 'ஏய்! நீ யார்?' என்று கேட்டான் வல்லாளன். அரசன் மணிமாறனுக்கோ ஒரே குழப்பமாகப் போய்விட்டது.

"வல்லாளா! என்னைத் தெரியவில்லையா? நான்தான் இந்நாட்டு மன்னன் மணிமாறன்" என்று உண்மையை உரைத்தான். "பலே திருடனப்பா நீ! என் பெயரைக் கூடத் தெரிந்து வைத்திருக்கிருயே! உண்மையைச் சொல்லப் போகிருயா, இல்லை இந்த ஈட்டியால் குத்திக் கொல்லட்டுமா?" என்று பயங்கரமாகக் கேட்டான் வல்லாளன். அதற்குமன்னன், "வல்லாளா! உண்மையில் நான் மணிமாறன் தான். என்னை நம்பு" என்று அப்பொழுதும் உண்மையையே கூறினன். இருவருக்கும் சிறிது நேரம் மல்யுத்தம் நடந்தது. அந்தச் சமயம் எங்கிருந்தோ ஒரு அபயக் குரல் வந்தது. ஆதலால் வல்லாளன் சண்டையை விட்டுவிட்டு ஓடினன். இனியும் இங்கிருந்தால் ஆபத்து என்றெண்ணிய மன்னன் உடனே தன் கூடாரத்தை நோக்கிச் சென்ருன். அப்பொழுது விடிந்து கொண்டிருந்தது.

அரசனைக்கண்ட மந்திரி மகிழ்வுடன் 'தளபதி எங்கே?' என்று கேட்டார். மன்னன் வியப்படைந்தான். 'தளபதியும் காணேமா?' என்று கூறிவிட்டு வெளியே வந்து பார்த்தான். அப்பொழுது எங்கிருந்தோ ஓடி வந்தான் நந்திவர்மன். அரசனைக் கண்டதும் கட்டித் தழுவிக் கொண்டான்.


உடனே நந்திவர்மனும் 'அரசே! நான் கூறுவதை உண்மையென நம்பினல் நான் நடந்ததைக் கூறுவேன்' என்ருன். மன்னனும் சரி என்றதால், கூறத் தொடங்கினன் தளபதி.

"தாங்கள் நேற்று என்னேடும் அமைச்சரோடும் பேசிய போது நாங்கள் கூறியதில் "எது நல்லது" என்பதைக் காண விரும்பினீர்கள். எப்படியும் நீங்கள் சோதித்துப்பார்ப்பீர்கள் என்று எனக்குத் தெரியும். அதனல் நான் இரவில் தூங்காது விழித்திருந்தேன். இரவு வெகு நேரத்திற்குப் பின்னர் நீங்கள் எழுந்து கிழக்கு நோக்கிச் சென்றீர்கள். ஆனல் நானும் உங்களை அறியாமல் பின் தொடர்ந்து வந்தேன். நான் மேற்கில் சென்றதால் உங்களைக் காண இயலாது. ஆதலால் கிழக்கிலேயே வந்தேன். நீங்கள் நண்பர் வல்லாளன் வீட்டிற்குத் தான் போகிறீர்கள் என்றுணர்ந்து நான் குறுக்கு வழியில் சென்று வல்லாளன் வீட்டை அடைந்தேன். வல்லாளன்தான் என் உறவினர் என்பது உங்களுக்குத் தெரியுமே!

அந்த நள்ளிரவில் சென்ற என்னிடம் விபரத்தையெல்லாம் கேட்டான். நானும் கூறினேன். நீங்கள் வரும் போது என்னை உள்ளே இருக்கச் சொல்லிவிட்டு வல்லாளன் உங்களைக் கண்டான். அப்பொழுது நீங்கள் உண்மைதானே சொன்னீர்கள். வல்லாளன் நம்பினனு? இல்லையே. நீங்களே, 'நான் ஒரு வழிப்போக்கன் என்று கூறியிருந்தீர்களானல் நம்புவானல்லவா?" என்று தளபதி அரசனைக் கேட்டான். மன்னனும் 'ஆமாம்' என்ருன். "நீங்கள் மானமிழந்துதானே வந்த வழியில் ஓடிவந்தீர்கள்" என்று கேட்க, 'ஆமாம்' என்று மன்னன் மணிமாறன் கூறினன்.

"அப்படியானல் பொய் தானே நல்லது. 'வென்றது' என்று கூறி விட்டு வெற்றிச் சிரிப்புச் சிரித்தான் தளபதி. 'எது நல்லது' என்ற வினு அப்பொழுது எங்கேயோ ஓடி மறைந்து கொண்டது.

## குழந்தைக் கவிஞர் பேசுகின்ருர்



'ஈழநாடு' பத்திரிகையின் இளம் வாசகர்களே, அருமைத் தம்பி, தங்கைகளே,

ஈழநாட்டுக்கு வந்தேன். இங்குள்ள ஒவ்வொரு குழந்தையையும் பார்க்கவேண்டும், ஒவ்வொரு குழந்தையுடனும் பேசவேண்டும் என்று ஆசைப்பட்டேன். ஆனல், அது முடிகிற காரியமா? சில குழந்தைகளைத் தான் பார்த்தேன். இருந்தாலும், உங்கள் எல்லோரையும் நினைத்துத்தானே பாட்டும், கதையும் எழுதிவருகிறேன்.

உங்களுக்கு நான் கூறும் செய்தி இது தான்:

எப்போதும் மலர்ந்தமுகத்துடனே இருங்கள். பிறருக்கு உதவி செய்வதே பேரின்பம் என நினையுங்கள். பெற்ற தாய்க்கும், தந்தைக்கும், கல்வி புகட்டும் ஆசிரியர்க்கும் பெருமை தரும் வகையில் நடந்து கொள்ளுங்கள். தாய் மொழியும்தாய்த்திருநாடும் உயர்வுபெற உழையுங்கள்; உதவுங்கள். உலகக் குழந்தைகள் வாழ்க என வாழ்த்துங்கள்.

அழ. வள்ளியப்பா

7—7—59.

## கவிஞன் ஏன் பாடுகிருன்?

சி. தங்கத்துரை (ப. எண். 123)

கவிஞன் ஏன் பாடுகின்ருன்? இக்கேள்வி என் உள்ளத்தில் எழுந்தது. அதற்கு மறுமொழி காணுவதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

கவிஞன் ஏன் பாடுகின்ருன்? இக்கேள்விக்கு விடை காண முயன்றேன். ஆனல், விடை காண்பது இயலாத காரணமாகவே இருந்தது. ஒன்றேயொன்று மாத்திரம் தெளிவாக எனக்குத் தோன்றியது. அதுதான் கவிஞன் பாடுகின்ருன், அவன் உள்ளம் கவிதை நிறைந்ததானபடியினல்.

சாதாரண நிகழ்ச்சிகள், சாதாரண மனிதர்கள், சாதாரண காட்சிகள் கவிஞன் உள்ளத்தில் கவிதையாக மலர்கின்றன. அவன் தன் பேனவைக் கையிலெடுக்கின்ருன். உள்ளத்திற் தோன்றும் கற்பனை ஊற்றைத் தன் பேனமூலம் காகிதத்தில் பெருக்கெடுக்க விடுகிருன். அது வாசிப்போர் உள்ளங்களை மகிழவைக்கும் இன்ப ஆருக விளங்கிவிடுகின்றது.

சமுதாயத்திலுள்ள ஏற்றத் தாழ்வுகள், கொடுமை, அன்பு, ஏழ்மை, பணத்திமிர் எல்லாவற்றையும் கவிஞன் காண்கின்ருன். இவையெல்லாம் எங்கள், சாதாரண மனிதர் கண்களுக்கும்கூடத்தான் தென்படுகின்றன. ஆனலும், இவை கூடக் கவிஞன் பாக்கள் இசைப்பதற்குப் பொருள்களாக அமைந்துவிடுகின்றன.

கவிஞனற் பாடமுடிகின்றது- ஏனெனில்அவன்உள்ளம்அன்பு நிறைந்த உள்ளம். சுருங்கக் கூறின், அவன் உள்ளம் குழந்தை உள்ளம். அக்குழந்தை உள்ளத்தில் மலரும் எண்ணங்களும், கருத்துகளுமே அழகான கவிதைகளாக மலர்ந்து உலகை இன்புறச் செய்துவிடுகின்றன. வாழ்க கவிஞன்! வாழ்க அவன் பணி!

## உண்மைக் கதைகள்.... அனி ஓக்லி: V




"அனி ஓக்லிகள்": அமெரிக்க மொழிக்கு அனி ஒரு புதுச் சொல்லை அளித்தார். தன்னுடைய காட்சி நடைபெறவிருக்கும் நகரங்களுக்கு முன்னதாகவே விஜயம்செய்து, அங்கு டிக்கட்டுகளைக் காற்றிலே வீசிவிட்டு அவற்றைத் தன் துப்பாக்கியினல் சுடுவாள். துவாரங்கொண்டடிக்கட்டுகளைஎடுத்தவர்கள் அவளுடைய காட்சிக்கு இலவசமாக அனுமதிக்கப் பட்டனர். இதனலேயே இன்று அமெரிக்காவில் இலவசப் பாஸ்கள் என்ருல் அவை "அனி ஓக்லிகள்" என்று அழைக்கப்படுகின்றன.



விபத்து: 1901ஆம் ஆண்டில் நடந்த ஒரு ரயில் விபத்தின் விளைவாக, அனி பாரிஸவாத நோய்க்காளானள். சோகம் நிறைந்த, வேதனைகொண்ட இரண்டு வருடங்களிலும் அனிக்கு ஐந்து ரணசிகிச்சைகள் நடைபெற்றன. இச்சோதனைக் காலம் முடிவடைந்ததும், அனி மீண்டும் பழைய அனியாகவே விளங்கினள்.



முழு வாழ்க்கை: அனி ஓக்லியின் வாழ்க்கை முழுமையும், சிறப்பும் நிறைந்த வாழ்க்கையாகும். ஏழ்மையிலிருந்து உலகப் புகழ்வாய்ந்தவர்களில் ஒருவராக அவர் திகழ்ந்தார், பிராங் பட்லருடன் அவர் உண்மைக் காதற் திருமணம் புரிந்தார். 1926 ஆம் ஆண்டில் மறைந்த அனி ஓக்லி, தனக்குப் பின்னலே 'உலகத்தின் மிகச்சிறந்த துப்பாக்கி சுடும் வீரர்' என்ற பெயரைவிட்டு விட்டுச் சென்றுள்ளார்.

(முடியும்)

செல்வக்குழந்தைகளே!

அனைவருக்கும் வணக்கம். சிறுவர் சிறுமியருக்காக இனிக்க இனிக்கப் பாடும் குழந்தைக் கவிஞர் அழ. வள்ளியப்பா அவர்கள் சென்னையிலிருந்து இலங்கைக்கு வந்துள்ளார். சென்ற செவ்வாய்க்கிழமை யாழ்ப்பாணம் அவரை வரவேற்று மகிழ்ந்தது. குழந்தைகளாகிய உங்களுக்கு அவர் தந்துள்ள இனிய வார்த்தைகளை இங்கு வெளியிட்டிருக் கின்றேன். உங்கள் சார்பில் குழந்தைக் கவிஞருக்கு நன்றி கூறுகின்றேன்.

—சின்னமாமா

## புதிய மருமக்கள்

பெயரும் பதிவு இலக்கமும்

344. ஐ. திருநாவுக்கரசு, புங்குடுதீவு மேற்கு, 4-ம் வட்டாரம்.

345. கெ. எஸ். சபாரத்தினம், கூல்காஸ் வீதி, மாகமம்.

346. க. அன்னலிங்கம், ஏழாலை வடக்கு, சுன்னுகம்.

347. எஸ். வினேதன், 146, லோவர் வீதி, வதுளை.

348. எஸ். வாணிரூபன், 146, லோவர் வீதி, வதுளை.

349. வீ. பாலச்சந்திரன், கோட்டை முனை, அரசினர் தமிழ் கலவன் பாடசாலை. மட்டக்களப்பு.

350. எம். ஏ. எம். ஜப்ரி, 92, அம்பகமுவ வீதி, கம்பளை.

351. க. நடேசன், அழக்கிணற்றடி, பொலிகண்டி, வல்வெட்டித்துறை,

352. மு. கு. ஈழக்குமார், 37/47, தெய்யன்னுவெல, கண்டி.

353. ச. இ. ராஜன், சிவதொண்டன் நிலையம், 401, கே. கே. எஸ். வீதி, யாழ்ப்பாணம்.

354. மு. ஸ்ரீகாந்தா, 10/3, ஓட்டுமடம் வீதி, யாழ்ப்பாணம்.

355. து. பரராசசிங்கம், 30, 'இராஜம்ஸ் பவனம்' பழம் வீதி, கந்தர்மடம்.

356. ச. சசிலேகை, 144/1, அரசடி வீதி, கந்தர்மடம்.

357, ச. சிவகுருநாதன், 144/1, அரசடி வீதி, கந்தர்மடம்.

358· வெ. ராஜேந்திரன், 538/17, அழுத்மாவத்தை வீதி, முகத்துவாரம்.

359. ந. சந்திரலிங்கம், அச்சுவேலி கிறிஸ்தவக் கல்லூரி, S. S. C. E. அச்சுவேலி.

360. கா.சச்சிதானந்தன் (சானு) இணுவில் கிழக்கு, இணுவில்.

361. க. சண்முகராசா, கொல்லங்கலட்டி, பருந்துகலட்டி, தெல்லிப்பளை.

362. இ. கமலநாயகி, குளப்பிட்டி ஒழுங்கை, கொக்குவில்.

363. பூ. செல்வத்துரை, கலட்டி, மாவிட்டபுரம். தெல்லிப்பளை.

# தேடி வந்த செல்வம்

★

— கசின் —

11

**நிகழவேண்டியவற்றிற்கு எவ்விடத்தும் வாயில்கள் உண்டு.**

*   *   *

கருத்தொருமித்த காதலர்களுக்கிடையில் விளக்கம் கோர வேண்டி ஏற்படாது. சரிபிழைகளை அவர்கள் மனங்களே உணர்ந்துவிடும்.

என்முன் வந்து நின்ற அவளை வைத்தகண் மூடாமல் கூர்ந்து நோக்கினேன். அவளுடைய கண்களிலிருந்து பொலபொலவென்று கண்ணீர் சொரிந்தது. இந்தக் காட்சியை என்னால் சகிக்கமுடியவில்லை. என்னால் பேசவும் முடியவில்லை. என்னையும் அறியாமல் எனது கண்களும் கலங்கின. எனது கண் கலக்கத்தை மறைக்க முயன்றேன். அம்முயற்சி கண்ணீரைச் சொரியத்தான் செய்தது.

'ஏன் இப்படி இளைத்து விட்டீர்கள்' என்று அவள் தனது அழுகைக்கூடாக விக்கலுடன் கேட்டாள். எனக்கு 'ஓ' வென்று அழவேண்டும் போலிருந்தது. என்னால் அவள் கேட்டதற்கு மறுமொழி சொல்ல முடியவில்லை. கண்ணீர் மேலும் மேலும் முறிப்பினால் பாயும் தண்ணீர் போலப் பெருகியது. அதை மறைக்கத்தான் படாத பாடு பட்டேன்.

அவள் தனது கண்ணீரைத் துடைத்துத் தன்னைத் திடப்படுத்திக் கொண்டு கூறினாள்.

'நீங்கள் அன்று நானும் எனது பெற்றோரும் அடுத்த வெள்ளிக்கிழமை வருவோம்' என்று சொல்ல உற்சாகமாக வருமாறு அழைக்கவில்லை. வேண்டா வெறுப்பாகத் தலையை ஆட்டினீர்கள். அன்றியும் எனது வீடு, விலாசம், முதலிய வரலாறு ஒன்றையும் நீங்கள் விரும்பி விசாரிக்கவுமில்லை. ஆகவே நான் வரவுமில்லை; உங்களுக்குக் கடிதம் எழுதவுமில்லை. நான் பிழை செய்துவிட்டேன்; விட்ட பிழைக்கு இப்படியே யிருந்து வருந்துவதுதான் பிராயச்சித்தம் என்று தீர்மானித்துக்கொண்டிருக்கிறேன்' என்று அவள் இடையிடையே நிறுத்தி நிறுத்தி துன்பக்குரலில் கூறினாள்.

அவள் சொன்னது முழுவதும் சரி. அவள் கூற்றை மறுக்க முடியாது. நான் சிறிது நேரத்தால்,

'அப்பொழுது உங்களை விரும்பினேனோ, வெறுத்தேனோ எனக்குத் தெரியாது. ஆனால் இப்பொழுது நீங்கள் இல்லாமல் என்னால் சீவிக்க முடியாது என்று தெளிவாகக் கூறினேன். என்னுடைய இவ் வார்த்தைகள் அவள் முகத்தில் பிரகாசத்தை உண்டுபண்ணியதை நான் நன்கு அவதானித்தேன்.

'உண்மையாகத்தான் சொல்லுகிறீர்களா?' என்று எனது வார்த்தைகளை அவள் பின்னுமொருமுறை கேட்க விரும்பினாள். அவளுடைய கேள்வியும் முகமும் எனக்குப் பல சந்தேகங்களை நீக்கின. அவள் என்னை வெறுக்கவில்லை. அன்று தொட்டு என்னை நேசித்து வருகிறாள். நான் தன்னை வெறுக்கிறேன் என்பதை உணர்ந்து அவள் இந்த மூன்று மாதகாலமும் வேதனைப்பட்டுக்கொண்டு இருந்திருக்கிறாள் என்பனவற்றை நான் உணர்ந்தேன்.

'நான் பொய் பேசும் வழக்கம் இல்லை. அதனால் பொய் எவ்விதமான சூழ்நிலையில் உதிக்கிறதென்பதும் எனக்குத் தெரியாது. ஒரு விஷயத்தில் இப்பொழுது உறுதி பூண்டுள்ளேன். இந்த உறுதிப் பாட்டை எப்படியும் இனி நான் தளர்த்த மாட்டேன்' என்று நான் சிறிது ஆலாவர்ணத்தோடு கூறின பொழுது 'என்ன விஷயத்தில்' என்று அவள் மிகவும் ஆவலுடன் கேட்டாள்.

'இனிமேல் ஒரு கணமேனும் உங்களைவிட்டு நான் பிரிவதில்லை என்று உறுதி பூண்டுள்ளேன்' என்று சிறிது பலமாகக் கூறினேன். அப்பொழுது பார்க்கவேண்டுமே அவளுடைய முகத்தை. அன்றலர்ந்த செந்தாமரை போற் பிரகாசித்தாள்.

என்னை ஆவலுடன் கூர்ந்து பார்த்தாள். அந்தக் கூரிய கண்களிலிருந்து மீண்டும் கண்ணீர் சொரிந்தன. 'பிறகும் ஏன் அழவேண்டும்' என்று நான் கேட்டேன். 'உங்கள் உடம்பு இவ்வளவு கெட்டுப் போனதைப் பார்க்க, எனக்கு என்னவோ செய்கிறது' என்று சொல்லி அழுதாள்.

'நீங்கள் அருகில் இருந்தால் இந்த உடல் மீண்டும் பழைய நிலைக்கு வரச் செல்லாது' என்று நான் கூறினேன். எனது கூற்று அவளுக்குத் தன்னம்பிக்கையையும் உறுதியையும் கொடுத்தது.

அவளுடன் பிரயாணஞ்செய்த அவளுடைய சினேகிதிகள் அவளுடைய பெட்டியைக் கொண்டு வந்து வைத்தார்கள். அவர்களுக்கு என்னை அறிமுகம் செய்து வைத்தாள். அவர்கள் மாப்பிள்ளைக்கு உத்தியோகம் எங்கே என்று கேட்டார்கள். எல்லோரும் கல கல வென்று சிரித்தோம். அவர்கள் எல்லோரும் கன்னிப் பெண்கள். தாங்கள் ஒருவரும் உத்தியோகத்தரை விவாகம் செய்வதில்லை என்று தீர்மானித்திருப்பதாக என்னிடம் கூறினார்கள். உண்மையோ பொய்யோ எனக்குத் தெரியாது.

எங்கள் புகைவண்டி மாங்குளம் ஸ்ரேசனை அடைந்த பொழுது, அங்கே நண்பன் இராமச்சந்திரன் நின்றான். 'கமத்தில் அருவி வெட்டைப் பார் என்று வர நீ இங்கே நிற்கிறாயே' என்று அவனைக் கேட்டேன். 'இன்று அருவி வெட்டு இல்லை. முறிகண்டிப் பிள்ளையார் கோவிலிலே எங்கள் குடும்பத்தாருடைய ஒரு விசேஷ பூசை நடைபெறுகிறது. கமத்தில் வேலை செய்தவர்களும் கோவிலுக்கு வந்திருக்கிறார்கள். நீயும் இறங்கி வா; கார் நிற்கிறது. போகலாம்' என்று சொல்லி என்னை இறக்கினான். என்னோடு அவளும் இறங்கி வந்தாள்.

'வைத்தியத்திற்கென்று போய் ஒரு பெண்ணைக் கூட்டி வருகிறாயே' என்று நண்பன் புன்னகையுடன் கேட்டான். நான் 'இவள்தான் எனது எதிர்கால மனைவி' என்று சொல்வதற்கிடையில், 'நோயாளியை முறையாகக் கவனிப்பதற்கு ஒரு நேர்ஸ்' என்று அவள் கூறினாள்.

முறிகண்டியில் நான் கண்ட காட்சி என்னைப் பிரமிக்க வைத்தது. எனது குடும்பத்தவர்களும் அங்கே நின்றார்கள். கோவிலும், சுற்றுப்புறங்களும் பிரமாதமாக அலங்கரிக்கப்பட்டிருந்தன. மேள வாத்தியங்கள் முழங்கின.

முறிகண்டி விநாயகர் சந்நிதானத்திலே, வெள்ளிக்கிழமை உச்சிமத்தியான வேளையிலே, சுத்தவீரன் பக்கத்தில் நிற்கப் பந்துமித்திரர் புடைசூழ, சித்திரா தேவிக்கு – புகைவண்டியில் சந்தித்து உறவாடிய தேவிக்கு - நடுரோட்டிலே வைத்து மேளவாத்தியங்கள் முழங்க மாங்கல்யம் சூட்டினேன். அத்தருணம், புகைவண்டியில் பழகிய அந்தக் கிழத்தம்பதிகள், காத்திராப்பிரகாரம் அவ்விடத்தில் ஒரு காரில் வந்திறங்கி எங்களுக்குத் தங்கள் மனப்பூர்வமான ஆசீர்வாதத்தை அளித்தார்கள்.

12

**பேர் பெற்ற கலைஞர்களும் மங்களம் கூறும் பொழுது சிறிது அவசரப்படவே செய்வார்கள்.**

*   *   *

துப்பறியும் நிபுணன் ஒருவன் பலவகையான இன்னல்களையனுபவித்து, மிகப் பெரிய மர்மங்களை அம்பலத்திற்குக் கொண்டு வருவான். ஆனால் அவன் தனது வாயால் ஆதியோடந்தமாகத் தான் பட்ட கஷ்டங்களையும் சேர்த்து அப்பெரிய மர்மத்தை விளக்கிக் கூறுவதற்கு முன்பே, எல்லாவற்றையும் மற்றவர்கள் உணரக் கூடியதாகக் காரியங்கள் நடந்து விடும்.

தேவி என்று நான் மாங்கல்யம் சூட்டியவரின் பெயர் சித்திரா தேவி என்பதும், அவள் எனது பிரிய நண்பன் இராமச்சந்திரனின் தங்கை என்பதும், நான் எனது நண்பன் வீட்டுக்குச் சென்ற காலங்களில் இரண்டொரு முறை மறைவாக நின்று என்னைப் பார்த்திருந்ததால் என்னை அவளுக்கு முன்பே தெரியுமென்பதும், என்னையே விவாகஞ் செய்வதென்று தனது பெற்றோரிடம் பிடிவாதமாக இருந்தாள் என்பதும், நான் உத்தியோகத்தை விட்டுக் கமத்தில் இறங்கியதை எனது நண்பனோடு சேர்ந்து அவளும் ஒரே மூச்சாக வரவேற்றாள் என்பதும், என்னை முதன் முதல் புகை வண்டியில் கண்டதும் யாரென்று தெரிந்து கொண்டாள் என்பதும், தான் விவாகஞ் செய்வதானால் என்னையே விவாகஞ் செய்வது என்ற கொள்கையோடிருந்தமையாலும் அவளைப் பொறுத்தவரையில் நான் எப்பொழுதோ அவளின் கணவனாகி விட்டதனாலும், என்னோடு வித்தியாசமும் கூச்சமுமின்றிப் பழகிக் கமத்துக்கும் வந்து தங்கிப் போனாள் என்பதும், தன்னை யாரென்று கூறச் சந்தர்ப்பம் கிடையாமற் போனதோடு, நானும் அதை விசாரித்தறியாமையினால் பின்னர் வந்து வெளியிடுவோம் என்னும் கருத்தில் அவள் என்னை விட்டுப் பிரிந்து சென்றாள் என்பதும் அதன் பின் நான் தன்னை வெறுக்கிறேன் என்பதைத் தமையன் மூலம் அறிந்து அவள் புழுவாய்த் துடித்தாள் என்பதும், என்னைப் போலவே அவளும் இனி விவாகஞ் செய்வதில்லை என்ற கருத்தோடு மூன்று மாத காலத்தையும் வேதனையோடு கழித்தாள் என்பதும், நான் படும் துன்பத்தையும், கொழும்புக்கு வருவதையும், திரும்பி வரும் திகதியையும், புகை வண்டியையும், தனது தமையன் மூலம் அறிந்தாள் என்பதும், தமையனின் ஆதரவோடு தனது ஆசிரியத் தொழிலையும் துறந்து விட்டு வந்தாள் என்பதும், மற்றக் காரியங்கள் எல்லாம் தனது தமையனின் முன்னேற்பாடென்பதும், ஒரு தமிழ்ப் பெண் இன்னும் நூறாண்டு சென்றாலும் முன் பின் தெரியாத ஒருவனோடு சில மணி நேரப் பழக்கத்தில் கூடிச் செல்ல மாட்டாள் என்பதும் நான் பின்னர் எனது தேவியின் வாய் மூலமாகக் கேட்ட தகவல்களின் சுருக்கமாகும்.

என்னை ஒரு புத்திக் கூர்மை இல்லாதவன் என்றோ, படித்த மூடன் என்றோ, எருமை என்றோ இன்னும் எப்படி எப்படியோ நீங்கள் நினைக்கக் கூடும். அவ்விதம் நினைக்கக் கூடியவர்களுக்கெல்லாம் நான் சொல்லக்கூடியதொன்றுண்டு.

எனக்கு இம்முறை காலபோகத்தில் பத்து ஏக்கரிலும் விளைந்தது அறுநூற்று ஐம்பத்து மூன்று புசலாகும். இவ்வளவு புசல் நெல்லையும் நான் பெறுவதற்கு ஆயிரம் ரூபாவுக்கு மேல் செலவழிக்கவில்லை.

வணக்கம்.

குறிப்பு

எனது காலபோகச் சூட்டுமிதி நடந்த காலத்தில் இரவில் நான் சூடுமிதிக்கும் இடத்திற்குச் செல்ல, நித்திரை வராத என் மனைவி சித்திராதேவி இதை எழுதி வைத்தாள். எனது நிலைமைகளை விளக்கும் சில குறிப்புகளை அங்கங்கே நான் சேர்த்திருக்கிறேன். கமக்காரனுக்குக் கதை எழுத நேரமேது. சித்திராதேவி நடந்ததை அதே முறையில் எழுதி விட்டாள். ஆதலால் கதையை இன்னொரு முறை திருப்பிப் படிப்பது நன்று. எனது பெயரில் இக்கதை வெளிவந்ததை மன்னிக்கவும்.

கசின்.

—முற்றும்—

## வடமாகாண விஞ்ஞான ஆசிரியர் சங்கம்

வடமாகாண விஞ்ஞான ஆசிரியர் சங்கத்தின் வருடாந்தப் பொதுக்கூட்டம் 3-7-59 இல் யாழ்ப்பாண மத்திய கல்லூரியில் நடைபெற்றது. அத்தருணம் பின்வரும் உத்தியோகத்தர்கள் தெரிவுசெய்யப்பட்டனர்: தலைவர்: திரு. ஈ. சபாலிங்கம், கொக்குவில் இந்துக் கல்லூரி. உப தலைவர்: திரு. வி. சுப்பிரமணியம், யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி. காரியதரிசி: திரு. வி. இராமக்கிருஷ்ணன், யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி. உதவிக் காரியதரிசி: எம். பரமானந்தம், யாழ்ப்பாணம் மத்தியகல்லூரி. தனாதிகாரி: ஜே. எஸ். அரியரத்தினம், யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி. செயலாற்றுங்குழு அங்கத்தவரும் தெரிவுசெய்யப்பட்டனர்.

இலங்கைப் பல்கலைக்கழக தாவர இயல், விலங்கியல் பகுதியினர் தொண்டைமானாறு கடலேரித்திட்டப் பிராந்தியத்தில் நடாத்த முன்வந்துள்ள ஆராய்ச்சிக்குச் சகல வழிகளிலும் உதவிபுரிவதெனத் தீர்மானிக்கப்பட்டது.


உங்கள் கட்டடங்களுக்கு வேண்டிய சகலவிதமான

**இரும்புச் சாமான்களுக்கு**

எங்களிடம் விசாரியுங்கள்

★ கேடர் வகைகள் எல்லாச் சைஸ்களும்
★ உருண்டைக் கம்பிகள் ,,
★ கொங்கிறீற் வலைகள் எல்லா வகைகளும்
★ சிமெந்து (காங்கேசன்), (யப்பான்)
★ தீந்தை, வார்னிஸ்வகைகள்
★ டிஸ்ரெம்பர் எல்லா நிறங்களிலும்
★ பித்தளைப் பூட்டு, பிணைச்சல் வகைகளும்

எங்களிடம் மிகவும் குறைந்த விலைக்குப் பெறலாம்.

இலங்கையில் தயார்செய்யப்பட்ட
அஸ்பெஸ்ரஸ் கூரைத்தகடுகள் சீலிங் சீற்களும்
எங்களிடம் விற்பனைக்கு ஏராளமாயிருக்கிறது.

**சண்முகம் ஸ்ரோர்ஸ்**

உரிமையாளர் : ஆ. சண்முகராசா

**222, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.**

போன் : 697

அருள்வழி

# இன்பமும் துன்பமும்தான் தர வருமே!

(மிக்கேல் நைமி — லெபனுன்)

ஒரு வீட்டின்மீது இடி விழுகிறதென்ருல், அந்த வீடு, இடியை ஈர்த்துக்கொண்டதே காரணமாகும். வீடு ஈர்க்காவிடில் இடி அதன்மீது விழாது. வீடு நாசமடைந்ததற்கு இடி எவ்வளவு காரணமோ அவ்வளவு காரணம் அந்த வீடுமாகும்.

ஒரு மனிதனை காளை ஒன்று குத்திக் கிழித்ததென்ருல், அவன் அந்தக் காளையை வரவேற்றதே காரணம். இன்றேல் காளை அவனைக் குத்திக் கிழிக்காது. காளையை விட, அம்மனிதனே இதற்குக் காரணமாவான்.

கொலையுண்டவன், கொலைகாரனின் கத்தியைத் தீட்டுகின்ருன். இருவரும் சேர்ந்தே அந்தக் கொலைக்குக் காரணமாவர்.

பறி கொடுத்தவன், கொள்ளைக்காரனின் நடமாட்டங்களை நடத்தி வைக்கின்ருன். இருவருமே அந்தக் கொள்ளைக்குக் காரணம்.

மனிதன் தன் துன்பங்களைத் தானே வரவேற்றுக்கொள்ளுகின்ருன். எப்பொழுது, எப்படி, எங்கே அந்த அழைப்புக் கடிதத்தை எழுதினேம் என்பதை மறந்து, அத்துன்பங்கள் வந்ததும் அவற்றின்மீது எரிச்சல் கொள்ளுகின்ருன். ஆனல் காலமாகிற தேவனை மறப்பதில்லை. உரிய காலத்தில், உரிய விலாசத்துக்கு, அந்தந்த இன்பதுன்பங்களை, அழைத்தவர்களிடமே கொண்டு சேர்க்கின்றது.

## எரிந்து விழவேண்டாம்

வந்த விருந்தினர் யாராயினும், அவரைக் கண்டித்து எரிந்துவிழ வேண்டாம். இன்றேல், அத்துன்பங்கள் நீடித்து நின்று பழிவாங்கும். அடிக்கடி அவை வந்து சேரும்.

எல்லா விருந்தாளிகளையும், அவர்கள் எப்படிப்பட்டவராயினும், அன்பாக வரவேற்று உபசரியுங்கள். ஏனெனில் அவர்கள் உங்களது கடன்காரர்கள். மிகவும் மோசமான கடன்காரரிடம் அதிக கவனம் செலுத்தி அன்பு காட்டுங்கள். அப்பொழுதுதான் அவர்கள் திருப்தியடைந்து செல்வர். திரும்பி வந்தாலும், கடன்காரராக இல்லாமல் நண்பர்களாக வருவர்.

எல்லா விருந்தினரையும், மரியாதையாக வரவேற்று, அவர்களது நம்பிக்கையைப் பெறுவதுடன், அவர்கள் வந்த காரணத்தைத் தெரிந்துகொள்ளுங்கள்.

## துன்பம் வந்தால்..

துன்பம் வந்தால், அதை ஒரு இன்பமாக ஏற்றுக்கொள்ளுங்கள். துன்பத்தின் நோக்கத்தை சரிவர உணர்ந்து விட்டால், அது உடன் இன்பமாக மாறும். இன்பத்தையும் தவருக உணர்ந்தால் அது ஒரு துன்பமாகி விடலாம்.

உங்கள் ஞாபகம் சரிவர இல்லை. மனம் தட்டுத்தடுமாறுகின்றது. பல ஓட்டைகளும் இடைவெளிகளுமுள்ளன. என்ருலும் உங்கள் பிறப்பையும் இறப்பையும், காலம், இடம் எல்லாவற்றையுமே நீங்களேதான் தெரிவு செய்துகொள்ளுகின்றீர்கள்.

தங்கள் பிறப்புக்கும் இறப்புக்கும் தாங்கள் காரணமில்லை என்று சிலர் கூறலாம். குறுகிய பார்வையுள்ளவர்கள், நடப்பதெல்லாம் ஏதோ தம் செயல்களாகக்கருதலாம். இவர்களைப்பற்றி நீங்கள் எச்சரிக்கையாயிருங்கள்.

காலத்திலோ, இடத்திலோ தற் செயல் என்பது கிடையாது. எல்லாமே "இச்சா சக்தி" யின் ஆஞ்ஞைகளுக்குக் கட்டுப்பட்டது. அந்தச் சக்தி எதிலும் பிழைவிடாது. எதையும் மறந்துவிடுவதுமில்லை.

## 'இச்சா சக்தி'

விதி என்பது தடுமாறுவதில்லை. விதி என்பது 'இச்சா சக்தி' யின் மற்ருேர் பெயரே. மனிதனின் விருப்பம்தான் தடுமாறுகிறது. நிச்சயமற்று இருக்கின்றது. இன்று கிழக்கேயும் நாளை மேற்கேயும் ஓடுகின்றது. இன்று எதை நல்லதென்று கூறுகின்றதோ அதையே நாளைக்குக் கெட்டதென்கின்றது. இப்போது ஒருவனை நண்பனென்று ஏற்றுக்கொண்டு, பின்னர் அவனை விரோதியாக எண்ணிப் போராடுகின்றது!

உங்கள் விருப்பம் அல்லது இச்சை தடுமாறக்கூடாது. உங்கள் இச்சை எதுவோ, அதுவே உங்கள் விஷயங்களையும், உறவுகளையும் தீர்மானிக்கும். உங்கள்பால் பிறரது இச்சையையும் உருவாக்கும். நீங்கள் பிறர் விஷயமாக என்னவிரும்புகிறீர்களோ அதுவே உங்கள் விஷயமாகவும் அவர்களின் போக்காகவும் இருக்கும்.

## அன்பு காட்டுங்கள்

ஆகவே நீங்கள் மூச்சு விடுவதுபற்றியும், பேசுவதுபற்றியும், விரும்புவது பற்றியும், நினைப்பது குறித்தும், செய்வது பற்றியும் கவனமாக இருங்கள். ஏனெனில் உங்கள் இச்சை நீங்கள் விடும் மூச்சிலும், பேசும் பேச்சிலும், நினைப்பு, செயல் இவற்றிலும் அடங்கியிருக்கும்: உங்கள் இச்சை உங்களிடம் மறைக்கப்பட்டிருந்தாலும், அது இச்சா சக்திக்கு, எப்போதும் நன்கு தெரியும்.

பிறருக்குத் துன்பமளிப்பதை விரும்பாதீர்கள். ஏனெனில் உங்களுக்கு அது பெரிய துன்பமாகும்.

எல்லாரிடமும் அன்பு காட்டுங்கள். அந்த அன்பினுல்தான், உங்கள் மனத் திரைகள் நீக்கப்பட்டு, இச்சா சக்தியின் அற்புதங்களை உணர்ந்து கொள்ள முடியும்.

உங்களது இச்சைகள் மறைக்கப்பட்டுள்ள தன்மையை உணர்ந்ததும் இச்சா சக்தியின் மகிமையை உணரமுடியும்.

உங்களுக்குத் தெரியாததை ஒப்புக்கொள்ளுங்கள். அது தன்னை அறிய உங்களுக்கு உதவும். வெறுத்தால், அது எரிச்சல் கொடுக்கும் புதிராகவே இருக்கும்.

இச்சா சக்தியின் ஒரு பணிப்பெண்ணுக உங்கள் இச்சையும் இருக்கட்டும். பின்னர் இச்சா சக்தியே உங்கள் இச்சைக்குப் பணியாளாகும் ஞானத்தைப் பெறுவீர்கள்.

—ரிலிஜியஸ் டைஜஸ்ட்

---

# கோண்டாவில் கிழக்கு ஆசிமட விநாயகர் ஆலயம்

கோண்டாவில் கிழக்கு ஆசிமட (அரசடி) விநாயகர் ஆலயத்துக்கு நிர்வாக ஒழுங்குகள் செய்வதற்காக, யாழ்ப்பாண மாவட்ட அரசாங்க உதவி அதிபர் திரு. ஆ. தட்சணுமூர்த்தி தலைமையில் ஒரு பொதுக்கூட்டம் நடைபெற்றது. அவ்வமயம் 'ஆலய வழிபாடு' என்னும் பொருள் பற்றித் தலைவர் பேசினுர்.

அக்கோவிலுக்குரிய ஆதனங்களைச் செவ்வனே பரிபாலிப்பதற்கும் மற்றும் விஷயங்களைக் கவனிப்பதற்கும் 30 அங்கத்தவர் கொண்ட ஒரு நிர்வாகக் குழு அமைக்கப்பட்டது. தலைவராகத் திரு. எஸ். கனகசபாபதியும், செயலாளராக திரு. என். எஸ். சுப்பிரமணியமும், பொருளாளராக திரு. ஏ. எஸ். இரத்தினமும் தெரிவுசெய்யப்பட்டனர். கோவில் விஷயங்களை நேரடியாகக் கவனிக்க, திருவாளர்கள் எஸ். கனகசபாபதி, எஸ். இரத்தின சிங்கம், எஸ். செல்வத்துரை, என். கே. இராசசிங்கம், வி. பொன்னையா ஆகியவர் கொண்ட சபை நிறுவப்பட்டது.

---

# இவ்வாரம் எப்படி?

—எம். எஸ். மகேஸ்வரன்—

| | | | |
|---|---|---|---|
| கே. | | | சூரி |
| | இவ்வாரக் கிரகநிலை 17உ கடக-சூ | | புத. |
| | | | செ. வெ. |
| சனி | | வியா. | ராகு |

**இங்கு தரப்பட்டுள்ள இராசிகளின் பலன்கள் யாவும் பொதுப் பலன்களாதலால் இவற்றின் தன்மைகள் ஒவ்வொருவரின் தசா புத்திகளின் தன்மைக்கேற்றவாறு மாற்றம் அடைவனவாகும்.**

(11-7-59 — 17-7-59)

**மேடம்** (அச்சுவினி, பரணி, கார்த்திகை 1-ம் பாதம்) இறுதியில் இனத்தவர்களுடன் சில சண்டைகளுக்கு இடமுண்டு. நீர் விரும்பியபடி கருமங்களை நிறைவேற்றுவதில் கஷ்டமுறுவீர். சகோதரர்களால் அதிக உதவியுண்டு. செலவு அதிகரிக்கும்.

**இடபம்** (கார்த்திகை 2, 3, 4-ம் பாதம், ரோகினி, மிருகசீரிடம் 1, 2-ம் பாதம்) புது முயற்சிகளிற் சித்தியதிகரிக்கும். உத்தியோகத்திற் சில மாற்றங்கள் ஏற்படலாகும். உமது சொந்தக் கருமங்களை விடுத்துப் பிற கருமங்களில் மனதை அதிகஞ் செலுத்துவீர். தாயாரால் மனக்கவலைக்கு இட முண்டு.

**மிதுனம்** (மிருகசீரிடம் 3,4-ம் பாதம், திருவாதிரை புனர்பூசம் 1, 2, 3-ம் பாதம்) பண வருவாய் முற்பகுதியில் சிறிது குறைவடையும். சுகவீனமும் குடும்பக் கவலைகளும் தோன்றி மறையும். புத்திரர்களால் மனச் சந்தோஷம் ஏற்படும்.

**கடகம்** (புனர்பூசம் 4-ம் பாதம், பூசம், ஆயிலியம்) பணத்துறையில் ஒரு நல்ல வாரமாகும். நண்பர் அதிக உதவி புரிவர். மங்கலமான நிகழ்ச்சிகள் வரப் பெறும்.

**சிங்கம்** (மகம், பூரம், உத்தரம் 1-ம் பாதம்) நண்பர் அல்லது இனத்தவர்களுடன் விரோதம் ஏற்படக் கூடும். பெரியோர் நட்பால் தொழில் முன்னேற்றம் ஏற்படும். காத்திராப்பிரகாரமான நிகழ்ச்சிகள் ஏற்படக் கூடும்.

**கன்னி** (உத்தரம் 2, 3, 4-ம் பாதம், அத்தம், சித்திரை 1, 2-ம் பாதம்) சகல எதிர்ப்பையும் நீக்கக் கூடியதாயிருக்கும். பெண்பாலாரால் இடைஞ்சல்கள் ஏற்படக்கூடும். புது முயற்சிகள் கவனமாகக் கையாளப்படவேண்டும்.

**துலாம்:** (சித்திரை 3, 4-ம் பாதம், விசாகம் 1, 2, 3-ம் பாதம்) மேல் அதிகாரிகளின் உதவி வரப்பெறும். தரும சிந்தனை அதிகரிப்பதுடன் புதிய கருமங்களில் மனம் நாடும். நண்பர்கள் தொந்தரவு ஏற்படும்.

**விருச்சிகம்:** (விசாகம் 4-ம் பாதம், அனுஷம், கேட்டை) இடமாற்றம் ஏற்படுவதால் பணவிருத்தி ஏற்படும். அரச கருமங்களில் நஷ்டங்கள் தோன்றும். முதலீடுகள் மூலம் நஷ்டம் வரப் பெறும்.

**தனுசு:** (மூலம், பூராடம் உத்தராடம் 1-ம் பாதம்) வார முற்பகுதி மனச் சந்தோஷம் உடையதாகவிருக்கும். வழக்கத்திலும் வேலை அதிகமாக இருக்கும். சிலபழிச்சொற்களை கேட்க வேண்டி நேரும்.

**மகரம்:** (உத்தராடம் 2, 3, 4-ம் பாதம், திருவோணம், அவிட்டம் 1, 2-ம் பாதம்) கொடுக்கல் வாங்கல் மூலம் பகைமை வரப்பெறும். பணச் செலவு வாரக்கடைசியில் ஏற்படும். நண்பர்கள் அதிகரிப்பர்.

**கும்பம்:** (அவிட்டம் 3, 4-ம் பாதம், சதயம், பூரட்டாதி 1, 2-ம் பாதம்) நினைத்த கருமம் மிகுந்த பிரயாசையின் பேரில் நிறைவேறும். வியாபாரத் துறையில் அதிக இலாபம் ஏற்படும். இழிவான செயல்களில் மனம் விரும்பிக் கொள்ளும்.

**மீனம்:** (பூரட்டாதி 4-ம் பாதம், உத்தரட்டாதி, ரேவதி) தேகசுகம் சிறிது காலத்திற்கு குறைவடையும். எதிரிகள் அழிவுக்கு இடமுண்டு. காத்திராப் பிரகாரமான தீமைகள் ஏற்பட இடமுண்டு. உத்தியோக உயர்வும் புகழும் கிட்டும்.

---

# என்னைத் தாங்கிக் கொள்ளே!

திருவாசகத்தை அருளிச் செய்த மாணிக்க வாசக சுவாமிகளின் குருபூசை சென்ற வியாழக் கிழமை தமிழ் நாட்டிலும் ஈழத்திலும் பல ஊர்களில் நடைபெற்றது. அதில் ஒருவாசகத்தை இங்கு நினைவு கூர்வோம்.

"கடையவனேனைக் கருணையினுல்
கலந்து ஆண்டு கொண்ட
விடையவனே விட்டிடுதி கண்டாய்
விறல் வேங்கையின் தோல்
உடையவனே மன்னும் உத்தரகோச
மங்கைக்கு அரசே
சடையவனே தளர்ந்தேன் எம்பிரான்
என்னைத் தாங்கிக் கொள்ளே!"

VENUS
SOAP
வீனஸ் சோப்

தரத்தில் சிறந்தது, உடைகளை வெண்மையாக்குவது,
அதிக நுரையைத் தருவது
வீனஸ் சோப்
வீனஸ் சோப் தொழிற்சாலை
269, கே. கே. எஸ். ரோட், யாழ்ப்பாணம்.

விளையாட்டுப் பகுதி

# யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி விளையாட்டுப் போட்டி

## நான்கு புதிய சாதனைகள்: பொன்னம்பலம் மேற்பிரிவு சாம்பியன்

"அக்காலத்தில் நவீன வசதிகளும் வாய்ப்புகளும் எமக்கு இருக்கவில்லை. மைதானம்கூட இருக்கவில்லை" என்று யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி விளையாட்டுப் போட்டிக்கு தலைமை தாங்கிய டாக்டர் சிவஞானரத்தினம் தலைமையுரையில் குறிப்பிட்டார். மேலும் பேசுகையில் பயிற்சியொன்றே முன்னேற்றத்துக்கு வழியென்றும் குறிப்பிட்டார்.

**முடிவுகள் பின்வருமாறு:**

சம்பியன் இல்லம்: நாகலிங்கம்: 95 புள்ளிகள், இல்லஅமைப்புக் கேடயம்: செல்வத்துரை இல்லம். கயிறு இழுத்தல் கிண்ணம்: நாகலிங்கம் இல்லம்: அஞ்சலோட்டக் கிண்ணம்: பசுபதி இல்லம்: 22 புள்ளிகள். கீழ்ப்பிரிவு சம்பியன், பி. சிவபாதஈஸ்வரன் (சபாபதி இல்லம்) மத்திய பிரிவு சம்பியன்; றி. சிவபாக்கியநாதன் (காசிப்பிள்ளை இல்லம்) மேற்பிரிவு சம்பியன்: ஏ. பொன்னம்பலம் (நாகலிங்கம் இல்லம்)

**புதிய சாதனைகள்**

நீளப் பாய்தல்- மேற் பிரிவு: ஏ. பொன்னம்பலம் (20'4") முப்பாய்ச்சல் - மேற் பிரிவு: ஏ. பொன்னம்பலம் (42' 4 1/2") குண்டெறிதல் – மத்திய பிரிவு: ஏ. ரவீந்திரன் (25' 7") பரிதி வட்டம் வீசுதல் - மத்திய பிரிவு: ஏ. ரவீந்திரன் (83'3")

*** விளையாட்டுப் போட்டிகள்**

யாழ்ப்பாணம் இந்து மகளிர் கல்லூரி, ஸ்ரான்லி மத்திய கல்லூரி, இடைக்காடு இந்துக் கல்லூரி, வைத்தீஸ்வர வித்தியாலயம் ஆகிய இடங்களில் இன்றும் உடுவில் முருகமூர்த்தி வித்தியாசாலையில் நாளையும் இல்ல விளையாட்டுப் போட்டிகள் நடைபெறுகின்றன.

*** மத்தியஸ்தர் பரீட்சை**

இலங்கை மத்தியஸ்தர் சங்க பரீட்சைக் குழுத்தலைவர் திரு. ஸி. எச். எம். கிங் சென்ற வாரம் யாழ்ப்பாணத்தில் பரீட்சைகள் நடாத்தினர். இருவர் முதற்பிரிவுக்கும் ஏனையோர் இரண்டாம் பிரிவுக்குமாக 15 பேர் வரை பரீட்சையெடுத்தனர். இப் பரீட்சை யாழ்ப்பாணத்தில் நடப்பது இதுவே முதல் தடவையாகும். அன்று மாலை பரமேஸ்வரக் கல்லூரி மண்டபத்தில் உதை பந்தாட்ட விதிகள்பற்றி திரு. கிங் ஒரு சொற் பொழிவு நிகழ்த்தினர்.

*** யாழ்ப்பாணம் தோல்வி அடைந்தது**

யாழ்ப்பாணத்துக்கும் அநுராதபுரத்துக்குமிடையே நடைபெற்ற மாவட்ட உதைபந்தாட்டப் போட்டி 'சப்' பென்று இருந்தது மட்டுமல்லாமல் 2—1 கோல்களினால் யாழ்ப்பாணத்துக்கு தோல்வியாகவும் முடிவடைந்தது. தொடக்கத்தில் நன்ருக ஆடிய யாழ்ப்பாண வீரர் சுயநல ஆட்டத்தின் பலனை ஒரேயொரு கோல் மட்டுமே பெற முடிந்தது. பிற்பாதியில் அநுராதபுரம் இரண்டுகோல்களைப் பெற்று வெற்றியீட்டியது. மறு ஆட்டம் நாளை (12-7-59) அனுராதபுரத்தில் நடைபெற இருக்கின்றது. மைதானம் நிச்சயமாக இதுதான் என்று அறிவிக்கப் படாமையாலும் பஸ் வசதி இல்லாமையாலும் ரசிகர் கூட்டம் குறைவாயிருந்தது. ஆட்டத்தில் குறிப்பிடக்கூடிய அம்சம் எதுவுமில்லை. அதனல் வந்தவர்களும் ஏமாற்றமடைந்தனர். திரு. எஸ். ஸ்ரீநிவாசன் மத்தியஸ்தம் வகித்தார். திரு. இ. மகாதேவாவும் என். எஸ். முருகேசுவும் உதவி புரிந்தனர்.

*** மைதான நிதி**

யாழ்விநோத களியாட்ட விழா சென்ற திங்கட்கிழமை யாழ்ப்பாண மைதான நிதிக்காக நடைபெற்றது. யாழ்ப்பாணமேயர் ஆரம்பித்த இந்த நிதி வளர்ந்து நல்லதோர் மைதானம் உருவாக வேண்டுமென ரசிகர்கள் ஆவல் கொண்டுள்ளனர்.

*** இலங்கை உதைபந்தாட்ட ரசிகர் சங்கம்**

'பொறுக்க மாட்டோம், பொங்கியெழு' என்னும் தோரணையில் 14 பக்கத்தில் மூன்று மொழிகளிலும் இலங்கை உதை பந்தாட்ட கழகத்தில் ஊழல்கள் உள்ளன என்று குற்றம் சாட்டும் சிறு நூல் ஒன்று பிரசுரிக்கப்பட்டு விநியோகிக்கப்பட்டு வருகிறது. இந்த நூல் இலங்கை உதை பந்தாட்ட ரசிகர் சங்கத்தால் வெளியிடப்பட்டுள்ளது.

*** சென்ற வார இல்லப் போட்டிகள்**

யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி, பரமேஸ்வரக் கல்லூரி, யாழ்ப்பாணம் மத்தியகல்லூரி, புத்தூர் சோமாஸ்கந்தக் கல்லூரி முதலியன தங்கள் இல்லப் போட்டிகளை சென்றவாரம் நடாத்தின.

# விம்பில்டன்டெனிஸில் தென் அமெரிக்கர் ஈட்டிய வெற்றி

தென் அமெரிக்க நாடான பெருவைச் சேர்ந்த ஏ. ஒல்மீடோ இம்முறை விம்பில்டன் வெற்றி வீரரானர். அவர் ஆண்களுக்கான இறுதிப் போட்டியில், 19 வயதுநிறைந்த அவுஸ்திரேலிய டெனிஸ் வீரரான ஆர். லேவர் என்பவரைத் தோற்கடித்தார்.

(விபரங்கள்: 6—4, 6—3, 6—4.)

விம்பில்டன் டெனிஸ் போட்டியில், பெண்களுக்கான விளையாட்டில் தென் அமெரிக்க நாடான பிரேஸிலைச் சேர்ந்த 19 வயதான மாரியா எஸ்தெர் புவனே வெற்றிவீரரானர். பெண்களுக்கான டெனிஸ் போட்டியில் கடந்த 21 வருடங்களாக ஐக்கிய அமெரிக்காவே முதற்பரிசைத் தட்டிக்கொண்டு சென்றுள்ளது. ஆனல், இவ்வருடம் முதன் முறையாகத் தென் அமெரிக்கப் பெண் ஒருவர் அதை அபகரித்துவிட்டார். அவர் ஐக்கிய அமெரிக்காவைச் சேர்ந்த டார்லின் ஹார்ட் என்பவரைத் தோற்கடித்தார்.

(விபரங்கள்: 6—4, 6—3)

## திரு. டொனவன் அன்ரீ காலமானர்

இலங்கையின் பிரபல காட்சியாளரான திரு. டொனவன் அன்ரீ சென்ற சனிக்கிழமை (4-7-59) காலமானர். இலங்கைக்குப் பல கண்காட்சிகளையும், கேளிக்கைகளையும் பிற நாடுகளிலிருந்து வரவழைத்துப் புகழ்பெற்ற திரு. டொனவன் அன்ரீ ஒரு விளையாட்டுப் பிரியருமாவர். உதைபந்தாட்டத்தில் தான் அவருக்கு விருப்பம் அதிகம். இலங்கையிலிருந்து முதன் முதலாக வெளிநாட்டிற்கு ஓர் உதைபந்தாட்டக் கோஷ்டி செல்வதற்கு இவரே காரணகர்த்தாவாக விருந்தார். அத்துடன் பிறநாடுகளிலிருந்து பல விளையாட்டுக் கோஷ்டிகளையும் இங்கு வரவழைத்தார். இலங்கையின் 'சிறந்த பள்ளிக்கூடக் கிரிக்கெட் விளையாட்டுக்காரர்' என்ற பெயரைத் தாங்கிய, 'ரைம்ஸ் ஒப் சிலோன்' பத்திரிகையினுல் வழங்கப்படும் வெற்றிக்கிண்ணம் இவரால் அளிக்கப்பட்டதே. அவர் இலங்கையின் பல விளையாட்டு நிலையங்களுக்கும், பொது நிலையங்களுக்கும் பணஉதவி அளித்து வந்திருக்கிருர். அவருடைய ஆத்மா சாந்தி யடைவதாக.

## யாழ்ப்பாண - அனுராதபுர உதைபந்தாட்டப் போட்டி

அனுராதபுரம்

இம்மாதம் 5ந் திகதி யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற அகில இலங்கை மாவட்டப் போட்டியில் வெற்றியீட்டிய அனுராதபுரக் கோஷ்டியினர், இரண்டாவது முறையாக யாழ்ப்பாணக் கோஷ்டியை எதிர்த்து அனுராதபுரம் மத்திய கல்லூரியில், இம் மாதம் 12ந் தேதி ஞாயிற்றுக்கிழமை விளையாடுவார்கள்.

இப் போட்டியாட்டம் அனுராதபுர ரசிகர்களை வெகுவாகக் கவர்ந்திழுக்கும் என்று கருதப் படுவதால், பள்ளி மாணவர்களுக்கு 10 சதமும், மற்றவர்களுக்கு 25 சதமும், நாற்காலிகளுக்கு 50 சதமும் ஆகக் கட்டணம் வசூலிக்கப்படும் என்று தெரிகிறது.

மும்முரமான போட்டி ஒன்று எதிர்பார்க்கப்படுவதால் அனுராதபுரக் கோஷ்டி கீழ்க் கண்டவர்களிலிருந்து தெரிவு செய்யப்படும் என்று தெரிகிறது:

ஹென்றி குணசேகர, எச்.ஏ கருணரத்தின, டி. மாணிக்கராஜா, எஸ். நவரட்ணராஜா, ஏ. செபஸ்தியாம்பிள்ளை, ஆர். ஸ்டெயின்வால், டி. ஏ. ஜயா, டி. ஜே. அமோன், பி. எஸ். பிரேமரத்ன, ஜேம்ஸ் மிராண்ட, எம். வை. மிஸ்கின், ஏ. வெடர்கெட், எம். கே. கசீர், எச். எல். டில்சன் சில்வா.

## இலங்கையில் கைப்பந்தாட்டம்

இலங்கையிற் கைப்பந்தாட்டம் ஆரம்பமாகிப் பல வருடங்களாகிவிட்டன. கிராமப்புறங்களிலே இது மிகவும் ஆதரவு பெற்றவொரு விளையாட்டாகிவிட்டது. அது மாத்திரமன்றி ஒரு பொழுதுபோக்கு விளையாட்டாகவும் இது விளங்குகின்றது. இப்பொழுது இலங்கையில் நடைபெறும் கைப்பந்தாட்டம் சர்வதேச அங்கீகாரம் பெற்றுள்ளது. இவ்விளையாட்டு இலங்கையில் முன்னேறுவதற்கு இது ஊக்கமளிப்பதொன்ருகும்.

## அவுஸ்திரேலியாவுக்கு இலங்கைப் பள்ளிக்கூட கிரிக்கெற் வீரர்

இவ்வருடத்தின் இறுதிப் பாகத்தில், இலங்கைப் பள்ளிக்கூடங்களின் கிரிக்கெற் கோஷ்டியொன்று மேற்கு அவுஸ்திரேலியாவுக்குச் செல்லும். இந்த விஷயத்திற்காகத் தேவையான செலவை முன்னிட்டு, கல்வி மந்திரி தகநாயக்கா அவர்கள் 12,000 ரூபாய் உதவுமாறு அரசாங்கத்திடம் வேண்டியுள்ளார்.


**தாய்ப்பாலுக்கு நிகரான சிறந்த மாற்றுப்பால்—**

**மில்க்கோஸ்**




தாய்மார்கள் தங்கள் குழந்தைகளுக்கு தாய்ப்பால் ஊட்டவே விரும்புவார்கள். உங்களால் அது முடியாது போனல், குழந்தைக்கு தாய்ப்பாலுக்குப் பதிலான சிறந்த மாற்றுப்பாலைக் கண்டு பிடிப்பதற்கு நீங்கள் முனைவீர்கள். சிசு உணவுகளில் சரியான விகிதாசாரப்படி பிசிதம், கரி நீரகைகள், கொழுப்புச் சத்துகள் மட்டும் இருந்தால் போதாது. அதில் தொற்று நோய்களை எதிர்ப்பதற்கும், சோகை மந்தம், எலும்பு உருகுதல் போன்ற வியாதிகள் பீடிக்காது தடுப்பதற்கும், எதிர்ப்பதற்கு முகந்த இரும்புச் சத்துகளும் விட்டமின் சத்துகளும் கொண்டதாகவிருக்க வேண்டும்.

மில்க்கோஸ் பத்திரமான, முழுச்சத்துள்ள சிசு–உணவாகும். இது சுத்தமான முழுப்பாலாடை நிறைந்த பசுப்பாலிலிருந்து தயாரிக்கப்படுகிறது. குழந்தைகளுக்கு வேண்டிய சத்துக்களை இது பூர்த்தி செய்கிறது.

மில்க்கோஸ், நன்கு பத்திரமாக குழந்தைகளின் மெல்லிய ஜீரண உறுப்புகளுக்கு ஏற்றதாகத் தயாரிக்கப்படுகிறது. மில்க்கோஸ் நவீன ரீதியாகப் பொதியப்பட்டு, உங்களுக்கு பத்திரமாகவும், பரிசுத்தமாகவும் கிடைக்கிறது.

உங்கள் குழந்தைகளை ஆரோக்கிய குழந்தைகளாக வளர்க்க அவர்களுக்கு இன்றே மில்க்கோஸ் ஊட்ட ஆரம்பியுங்கள்.

**மில்க்கோஸ்**

இன்றியமையாத சிசு–உணவு

ஹார்லிக்ஸ் தயாரிப்பாளரால் தயாரிக்கப்படுகிறது

HLM 3486

சினிமா உலகம்

# சர்வதேசப் பட விழாவிற்கு இந்தியப் படம்

ஸ்பெயினிலுள்ள மாட்றிட் நகரிலே இம்மாதம் 11ஆம் திகதி தொடக்கம் 20ஆம் திகதி வரை நடைபெறும் சர்வதேசப்பட விழாவிற்கு அனுப்ப சக்தி பிலிம்ஸாரின் "இன்ஸான் யாக் உதா" என்னும் இந்திப்படம் தேர்ந்தெடுக்கப் பட்டுள்ளது. இப்படத்தின் டைரக்டரான சக்தி சாமந்தா வே இந்தியா—மலாயா கூட்டுறவுத் தயாரிப்பான 'சிங்கப்பூர்' என்னும் படத்தையும் டைரக்ட் செய்கின்ருர் என்பது இங்கு குறிப்பிடத் தக்கது. இப்படத்திற்கு பத்மினி — ராகினி சகோதரிகளும் ஒப்பந்தம் செய்யப்பட்டுள்ளனர்.

## "கால இயந்திரம்" படமாக்கப்படுகிறது!

பிரபல ஆங்கில எழுத்தாளரான எச். ஜி. வெல்ஸின் புத்தகமான 'கால இயந்திரம்' எம். ஜி. எம். ஸ்டுடியோவால் படமாக்கப்படுகிறது. இப் படத்திலே பல சிக்கல்கள் உண்டாகியுள்ளன. இக்கதையை எழுதிய எச். ஜி. வெல்ஸ் மனிதன் 800,000 வருஷங்களுக்குப் பின்னர் எப்படி வாழ்க்கை நடாத்துவான் என்பதையே அடிப்படை அம்சமாக வைத்து எழுதியுள்ளார்.

இக்கதையில் வரும் சில கற்பனை இயந்திரங்களைப் பார்க்கும் போது, இன்று வானத்திலே ஊர்வலம் வரும் ருெக்கெட்களும், செய்மதிகளும் குழந்தைப்பிள்ளை விளையாட்டுக்களாகத் தென்படுகின்றனவாம்! இவ்வியந்திரங்களின் மாதிரிகளைச் செய்து அவற்றைப் படமாக்கிக் காண்பிப்பது தான் இப்பொழுது இப்படத்தின் தயாரிப்பாளர்களை நோக்கி நிற்கும் முக்கிய பிரச்சினையாகும். எச்.ஜி. வெல்ஸின் கற்பனையை எட்டிப் பிடிக்க இவர்களுக்கு எவ்வளவு காலம் பிடிக்குமோ?

## ருஷிய சினிமா நடிகை ரூற்றியாரு சமோலோவா

கானெஸ் நகரில் நடைபெற்ற பதினொராவது சர்வதேசப்பட விழாவில் சமுகந்தந்த பல நாட்டுச் சினிமா நடிகைகளுள்ளும் ருஷ்யாவின் நடிகையான ரூற்றியாரு சமோலோவா பத்திரிகையாளர்களினதும், பொது மக்களதும் கவனத்தைப் பெரிதும் ஈர்ந்தார்.

இவர் தான் சோவியத் படமான 'தி கிறேன்ஸ் ஆர் பிலையிங்' என்னும் சிறந்த படத்தில் நடித்த இள நடிகை ரூற்றியாரு. அடக்கமான சுபாவமும், எளிமையான தோற்றமும் உடையவர் இவர். வெளியிலே இவர் சாதாரணமாகத் தோற்றமளித்தாலும், இவரிடம் அசாதாரண உள்ளச் சாந்தியும், உலக அநுபவங்களைக் கிரகித்து உணரும் குணமும் புலப்படுகின்றன. அத்துடன் அவர் பலதிறப்பட்ட திறமைகளைக் கொண்ட ஒரு சிறந்த உணர்ச்சிபூர்வமான நடிகையாகவும் விளங்குகிருர். இவர் நடித்துள்ள படமான 'தி கிறேன்ஸ் ஆர் பிலையிங்' என்னும் படம் 1958ஆம் ஆண்டில் கனெஸ் நகரில் நடைபெற்ற சர்வதேச விழாவில் தங்கப் பதக்கம் பெற்றது.

## வீரபாண்டிய கட்ட பொம்மனின் இலங்கை விஜயம்!

இங்கிலாந்துக்குச் சென்று வெற்றிக்கொடி நாட்டிய வீரபாண்டிய கட்ட பொம்மன் இன்று தென்னகத்தில் வெற்றிக்கு மேல் வெற்றி ஈட்டிவருகிருன். கட்டபொம்மன் எப்பொழுது இலங்கைக்கு வருவான் என்று ஆவலுடன் எதிர்பார்த்து நிற்கும் இலங்கை சினிமா இரசிகர்களின் ஆவல் வெகு விரைவில் பூர்த்தியாகுமென்று தெரிகிறது. அடுத்த மாதம் அவன் கட்டாயமாக இலங்கை வந்து சேருவான்.

வீரபாண்டிய கட்ட பொம்மன் முழு நீள கேவாக் கலர் படம். இப் படத்தில் நடிகர் திலகம் சிவாஜி கணேசன் அற்புதமாக நடித்துள்ளாராம். காட்சிகளும், ஜோடனைகளும் பிரமாதமாம். முக்கியமாகப் போர் காட்சிகள் பிரமாண்டமான முறையில், அதிக செலவுடன் தயாரிக்கப்பட்டுள்ளனவாம்.

வீரபாண்டிய கட்ட பொம்மன் இங்கும் வெற்றிவாகை சூடுவான் என்பதில் ஐயமில்லை. பத்மினி பிலிம்சாரின் இப்படம் இரசிகர்களுக்கு சிவாஜி கணேசனின் அன்பளிப்பாகும்.

# யாழ்ப்பாணக் கடலேரி...

(6ஆம் பக்கத் தொடர்ச்சி)

## மகாவலிகங்கையை இணைத்தால்!

வடமாகாணத்தின் பிரதான நதியாகிய கனகராயன் ஆறு வவனியாவில் உற்பத்தியாகி புளியங்குளம், மாங்குளம் வழியாகச் சென்று இரணைமடுக் குளத்தை நிரப்பியபின் ஆனையிறவுக் கடலேரியை அடைகின்றது. இந் நதி கோடைகாலத்தில் வற்றிவிடுகின்றது. மகாவலிகங்கையைக் கால்வாய் மூலம் கனகராயன் நதி உற்பத்தியாகும் இடத்துக்கு திருப்பினல் போதிய நீர் எல்லா இடங்களுக்கும் கிடைத்து வடமாகாணமும் யாழ்ப்பாணக்குடாநாடும் செல்வங் கொட்டும் பிரதேசமாக மாறிவிடுமென்பதைக் கூறவும் வேண்டுமா!

மகாவலிகங்கையை இப்படியாக வடமாகாணத்துக்குக் கால்வாய் வெட்டித் திருப்புவது சாத்தியமற்றது எனச் சிலர் கூறுகின்றனர். இவர்கள் இலங்கையின் தென்மேல் பகுதியில் ஒல்லாந்தர் வெட்டிய கால்வாய்களையோ அல்லது பிரான்சு, ஜெர்மனி, ருஷ்யா ஆகிய நாடுகளில் நதிகளை இணைப்பதற்கு வெட்டப்பட்டிருக்கும் கால்வாய்களையோ அவதானிப்பார்களேயானல் தமது அபிப்பிராயத்தை மாற்றிக்கொள்வார்கள் என்பதில் சந்தேகமில்லை. இதை யார் நிறைவேற்றுவார்கள் என்பதுதான் இப்போதைய சிக்கல்.

(முற்றும்)

## புதிய சமாதான நீதிபதி திரு. எஸ். கனகரத்தினம்

யாழ்ப்பாணப் பிரமுகர்களில் ஒருவரும், வழக்கறிஞருமான திரு. எஸ். கனகரத்தினம் புதிய சமாதான நீதிபதியாக நியமிக்கப்பட்டுள்ளார்.

## ஈழத்துக்கும் தமிழகத்துக்கும் கலாச்சார இணைப்பு

(7ஆம் பக்கத் தொடர்ச்சி)

யாழ்ப்பாணக் கிளைச்சங்கத்தின் போஷகரும், 'ஈழநாடு' ஆசிரியருமான திரு. இராஜ அரியரத்தினம் யாழ்ப்பாணக் குழந்தை எழுத்தாளர் சங்கத்தின் வளர்ச்சியை எடுத்து உரைத்தார்.

கூட்டத்துக்கு முடிவுரையாக ஆசிரியமணி நா. தம்பிரத்தினம் அவர்கள் கவிஞரின் சில பாடல்களை விளக்கி அதில் உள்ள நயங்களைப் பாராட்டினர். அத்துடன் அனைவருக்கும் நன்றியும் கூறினர்.


ஜுலை 16-ந் திகதி வியாழக்கிழமை வரை

சிலோன் தியேட்டர்ஸ் ஸ்தாபனத்தாரின் வெளியீடு!

எல்பின்ஸ்டன் (மருதானை) | றெக்ஸி (வெள்ளவத்தை) | வேல்ஸ் (கண்டி)

★ டி. எஸ். பாலையா | பண்டரிபாய் ★

★ டி. ஆர். ராமச்சந்திரன் | சுந்தரிபாய் ★

★ எம். என். கண்ணப்பா | பேபி காஞ்சனு ★

எம். ஆர். சந்தானம்

மற்றும் பலர் திறம்பட நடித்த

# பத்தரைமாத்து தங்கம்


டைரக்ஷன்: கே. எஸ். மணி

○ தெவிட்டாத தீந்தமிழ் திரை ஓவியம்!

○ பார்த்தோர் மனதைப் பரவசமூட்டும் பாங்கான திரை விருந்து!

○ எல்லோரும் பார்த்து மகிழ வேண்டிய ஓர் குடும்பச் சித்திரம்!

கடமையைக்
கருத்தாகக் கொண்ட
அன்பு மனைவி மீதா



ஆடவரை
ஏமாற்றித்திரியும்
விலைமாதர் மீதா

★★★

?

★★★

மகத்தான **4**-வது
வாரமாக

பத்துத் திரைகளில்
காட்சியளிக்கிறது!

விடை காணத்தவறுதீர்கள்!

# அன்பு எங்கே?

---

வெற்றிகரமான **2**-வது வாரம்

## சென்ட்ரல் (மருதானை)


தினசரி மாலை 3–00 மணி, 6–15 மணி, இரவு 9–30 மணிக்கு
காலைக்காட்சி ஞாயிற்றுக்கிழமை 10–15 மணி

கல்கத்தா, பம்பாய், பங்களூர் ஆகிய நகரங்களில்
பல்லாயிரக்கணக்கான மக்கள் பார்த்துப்
பரவசமடைந்த திரைச் சித்திரம்
இலங்கை இரசிகர்களையும் மகிழ்விக்க வந்திருக்கிறது.

# டில்லி-கா-தக்

(ஹிந்தி)

இவ்வருடத்தின் சிறந்த இன்னிசையும்
களி நடனமும் கொண்ட படம்.



நட்சத்திரங்கள்:
- கிஷோர்குமார்
- நூட்டான்
- ஸ்மிரிதி பிஸ்வாஸ்

பின்னணி: கிஷோர்குமார்,
ஆஷா போன்ஸ்லே, கீதா டத்.

சங்கீதம்: ரவி

இப்பத்திரிகை யாழ்ப்பாணம், சிவன் கோவில் மேலை வீதி 63-ம் இல்லத்தில் ஸ்தாபிக்கப்பட்டிருக்கும் கலாநிலையப் பதிப்பகத்தில் 'ஈழநாடு' பத்திரிகையின் சொந்தக்காரருக்காக பாலசுப்பிரமணியம் சிவானந்தன் அவர்களால் அச்சிடப்பெற்று, எஸ். எம். யோசவ் வில்பிறட் அவர்களால் 1959-ம் ஆண்டு ஜூலை மாதம் 11-ந் திகதி வெளியிடப்பெற்றது.